கல்கி

KALKI
14.12.97
ரூ. 4.00



'சரித்திரம்'
பேசுகிறது...



'சாதனை'
இசைக்கிறது...



'புயல்' மையம்
கொள்கிறது...



இசை இதழில் இளமைப் படை!

இசை விழா ஸ்பெஷல்!


HMT
கடிகாரங்கள்
LG GL 63
Rs. 825
LG GG 32
Rs. 955
பெறுவதை விட தருவதே சிறந்தது
என்பார்கள் பெரியவர்கள். ஆனால்
இதற்குச் சில விதிவிலக்குகள் நிச்சயம் உண்டு
SG 005
Rs. 2100
BLS 4
Rs. 2362
Rs. 1600
எச்எம்டி கடிகாரங்கள் 500 க்கும் மேற்பட்ட மாடல்களில் கிடைக்கின்றன. விலைகள் ரூ.400லிருந்து ரூ.19,000 வரை
உங்கள் குவார்ட்ஸ் வாட்சுக்கு எச்எம்டி பவர் செல்லையே கேட்டு வாங்குங்கள்
Mudra:HMT:1369:97:TAM


ஆயிரக்கணக்கான வாசகர்களின்
இடைவிடாத வேண்டுகோளுக்கேற்ப
அமரர் கல்கி நூற்றாண்டு
விழாக் கொண்டாட்டங்களின்
தொடக்கமாக
கல்கி 11.1.98 பொங்கல் சிறப்பிதழிலிருந்து
மீண்டும்
பொன்னியின்
செல்வன்
ஆரம்பம்!
மேலும் ஆச்சர்யங்களுக்குக்
காத்திருங்கள்!



• எம்.எஸ். கோபாலகிருஷ்ணன்

இந்த வருஷம் விருது பெறும் இசைக் கலைஞர்கள் தம் சொந்த ஊர் பற்றி இங்கே சிலாகிக்கிறார்கள்.

மியூசிக் அகாடமியின் 'சங்கீத கலாநிதி'
பரூர் எம். எஸ். கோபாலகிருஷ்ணன் :

"பரூர். ஆல்வாயிலிருந்து இருபது மைல். காலடியிலிருந்து ஐந்து மைல். இந்தச் சிற்றூர்தான் அப்பாவின் ஊர். அப்பாவும் சென்னைக்கு வந்த பிறகு பரூருக்கு இரண்டே தடவைதான் போயிருக்கிறேன்... நான் பிறந்து, வளர்ந்தது எல்லாம் மதராஸில்தான். அதனால்தான எம். எஸ். கோபாலகிருஷ்ணன் : மதறாஸ் சுந்தரமய்யர் கோபாலகிருஷ்ணன். (சுவரை அலங்கரிக்கும் பத்மஸ்ரீ விருதில் அப்படித்தான் போட்டிருக்கிறது) 75 வருடமாயிற்று இந்த வீட்டைக் கட்டி. பெயரே 'சங்கீத விலாஸ்'தான். (டிபிகல் மத்தியதர வீடு) இங்கேதான் நான் பிறந்தேன். இந்த ஹாலில்தான், அப்பா பரூர் சுந்தரமய்யருடன் நானும், அண்ணா அனந்தராமனும் நேரம் போவது தெரியாமல் வயலின் வாசிப்போம். இதற்குப் பெயர் 'சங்கீத ஹால்'. வித்தியாசமான 'போயிங் டெக்னிக்', ஒரே தந்தியால், நாலு ஸ்தாயியிலும், வர்ணம் முதற்கொண்டு வாசிப்பது - எல்லாம்தான் பரூர் பாணி. அப்பாவின் இந்த வாசிப்பை இங்கேயிருந்துதான் கற்றுக் கொண்டேன். என் பெண்ணுக்கும், பிள்ளைக்கும் நான் வயலின் வாசிக்கச் சொல்லிக் கொடுப்பதும் இங்கேதான்... இங்கே மயிலாப்பூரில் பி.எஸ். ஹைஸ்கூலில்தான் படித்தேன். படித்துக் கொண்டிருக்கும்போதே, '46-ல், மியூசிக் அகடமியில் வயலின் வாசித்து முதல் பிரைஸ் வாங்கினேன்... சென்னையில் இருக்கிறபோது, தினசரி, இங்கே பக்கத்திலிருக்கிற ஆஞ்சநேயர் கோயிலுக்குப் போவது உண்டு. விசேஷ நாட்களில் கபாலி கோயிலுக்குப் போவேன். உலகின் பல நாடுகளுக்குப் போய்விட்டு வந்தாயிற்று. சென்னைதான் என் மண். அன்றைய சென்னையில் வாய்ப்புகள் குறைவு. இப்போது அதிகம்."



• நீலா, குஞ்சுமணி

இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைடியின்
'சங்கீத கலா சிகாமணி', மற்றும்
மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸின்
'சங்கீத கலா நிபுண'
சிக்கில் சகோதரிகள் குஞ்சுமணி, நீலா

"சிக்கில் கிராமம்தான் என்றாலும் கொஞ்சம் சின்ன டவுன். நாகப்பட்டினத்துக்கும் திருவாரூருக்கும் இடையிலே இருக்கிறது. நாகப்பட்டினத்திலிருந்து சுமார் மூன்று மைல் இருக்கும். ரயில்வே ஸ்டேஷனும் இருக்கிறது. சிக்கில் சிங்கார வேலன் கோயில் புகழ்பெற்றது. அங்கே நிறைய உற்சவங்களுக்குப் போய் வாசித்திருக்கிறோம். 1947 முதல் 65 வரை அங்கேதான் இருந்தோம்... கந்த ஷஷ்டி உற்சவம் ஒன்பது நாளுக்கு நடக்கும்.

விருதுபெறும் கலைஞர்களால் பெருமைபெறும் ஊர்கள்!

அதில் ஒருநாள் சூரசம்ஹாரத்துக்காக, சக்தியே வேலை எடுத்துக் கொடுப்பதாகவும், தன் சக்தி முழுவதையும் அந்த வேல் ரூபமாகச் செலுத்துவதாகவும் ஓர் ஐதீகம். கர்ப்பக்கிருகத்துக்கு உள்ளே வைக்காமல், முன்னால் வெளியேதான் உற்சவ விக்கிரகத்தை வைத்திருப்பார்கள். அன்றைக்கு உற்சவ விக்கிரகத்துக்கு மேல் முத்து முத்தாகப் படிந்திருக்கும் நீரைப் பட்டால் துடைப்பார்கள். விசிறியால் விசிறுவார்கள்! நாங்களும் அந்த உற்சவத்தில் கலந்து கொள்ளப் போகிறபோது அப்படி விசிறியது உண்டு... திருவையாறுக்கு ஆராதனைக்குப் போகிறபோது எல்லாம் சிக்கிலுக்குப் போய்விட்டு வருவது உண்டு."

கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸின்
'இசைப் பேரொளி' பாம்பே ஜெயஸ்ரீ :

"பம்பாய் ஒரு காஸ்மோபாலிடன் சிடி. பலவகைக் கலாசாரங்கள்; பலவகை நம்பிக்கைகள்; flat culture-ல் ஊறிய நகரம். நான் வசித்த காலனியில், கீழே மராத்தி; மேலே குஜராத்தி, பக்கத்தில பார்ஸி... ஒரு பண்டிகை என்று வந்தால் எல்லாரும்



• ஜெயஸ்ரீ



• ஜெய்சங்கர்

வித்தியாசம் பார்க்காமல் சந்தோஷமாகக் கொண்டாடுவோம். கிறிஸ்துமஸ் அன்றைக்குச் சர்ச்சுக்கும் போவோம். ஹோலி பண்டிகையில் எல்லாருமே கலந்து கொள்ளுவோம். நம் பொங்கலன்று அங்கே சங்கராந்தி... பண்டிகை நாட்களின் குதூகலத்தைப் பம்பாயில்தான் எஞ்ஜாய் பண்ண முடியும்.

"பம்பாயில்தான் மகாலட்சுமி கோயில் இருக்கிறது. சுமார் 400 பேர் தினசரி இங்கே பிழைப்புக்காக வந்து தங்கி விடுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் எப்படியோ வாழத் தொடங்கி விடுகிறார்கள். இது வேறு எந்த ஸிடியிலும் நடக்காது. ஒரு பேல்பூரி கடை, இஸ்திரி கடை, பான் ஷாப் எதையாவது ஆரம்பித்து விடுவார்கள். எங்கள் வீட்டில் காலையில் நியூஸ் பேப்பர் போடுபவன், மத்தியானம் வேறு எங்காவது வேலை செய்வான். இரவு காலேஜில் படிப்பான்!... நானும் உலகின் பல நாடுகளுக்கும் போய்விட்டு வந்திருக்கிறேன். ஆனால் பம்பாயின் professionalism எங்கேயும் பார்க்க முடியாது. பான் ஷாப்பாக இருக்கும். பீகாரிலிருந்தோ, பஞ்சாபிலிருந்தோ வந்திருப்பான். ஒட்டல் வாசலில் இரவு 9 மணிக்கு ஆரம்பித்து வியாபாரம் அதிகாலை 2 மணி வரை நடத்துவான். பித்தளை டப்பாக்கள் பளபளவென்று இருக்கும். ஸ்பூன் கூட நீட்டாக இருக்கும். துடைக்கிற துணி வெளுப்பாக இருக்கும்... கறிகாய்க் கடை சிறியதாக இருக்கும். ஒரு கிலோ பாக்கெட், அரை கிலோ பாக்கெட் என்று தனித்தனியாய்ப் போட்டுத் தருவார்கள். நேரே கொண்டு போய் ஃப்ரிஜ்ஜில் வைத்து விடலாம்! இரவு பன்னிரண்டு மணிக்கு அம்மாவுடன், கச்சேரி கேட்டு விட்டு லோகல் டிரெயினில், பஸ்ஸில் வீடு திரும்பியிருக்கிறேன். நகரமே கலகலப்பாக இருக்கும். ஒன்றுமே ஆகாது. இங்கே இருக்கிற டப்பாவாலா ஏற்பாடு வேறு எந்த நகரிலுமே பார்க்க முடியாது. எல்லாம் ஒரே மாதிரி டப்பாதான். ஆனால் ஒருவர் சாப்பாடு இன்னொருவருக்குப் போகவே போகாது. இந்த டப்பாவாலாக்களின் இன்ஸ்பிரேஷனில் உருவானதுதான் அமெரிக்காவில், மெம்ஃபிஸ்ஸைத் தலைமை இடமாகக் கொண்ட ஃபெடரல் எக்ஸ்பிரஸ் கூரியர் நிறுவனம்!

"மியூசிக் என்று எடுத்துக் கொண்டால் கூட, இத்தனை வகை வகையான இசையை இங்கே தவிர வேறு எங்கும் கேட்க முடியாது. எங்கள் வீட்டில் காலை ஏழு மணிக்கு ஆரம்பமே லதா, கிஷோர் பாட்டுக்களுடன்தான்... இந்துஸ்தானி ஆகட்டும், பாப் ஆகட்டும், ஃபிலிம் மியூசிக் ஆகட்டும் – எதையும் இங்கே கேட்க முடியும்."

தமிழிசைச் சங்கத்தில்
'இசைப் பேரறிஞர்' திருவிழா ஜெய்சங்கர் :

"திருவிழா. பெயரே வெகு அழகாக இல்லை? திருவிழா ஆலப்புழை பக்கத்தில் இருக்கிற சின்னஞ்சிறு கிராமம். பிறந்தது அங்கே என்றாலும், இப்போது வசிப்பது கோட்டயத்துக்குப் பக்கத்தில் உள்ள குமாரநல்லூர்."

- நம்பி

திருப்பதி வெங்கடாசலபதி மீது 32000 பாடல்கள் இயற்றிய அன்னமாசார்யா, சினிமாவாகி இருக்கிறார்.

இசை விற்பன்னர்கள் உளமார அனுபவித்துப் பாடும் கீர்த்தனைகள் எழுதியவரை வெள்ளித் திரைக்குக் கொண்டு வர முயன்று வென்றிருப்பவர் துரைசாமிராஜ்.

அட்டகாசமான, ஆர்ப்பாட்டமான ஆக்ஷன் ஹீரோவான நாகார்ஜுனாதான் அன்னமாசார்யா! மசாலாப் பட இயக்குநரான கே. ராகவேந்திர ராவ்தான் இதன் டைரக்டர்.

"என்.டி. ராமாராவ் சமூகப் படங்களில் நடித்துக் கொண்டே புராணப் படங்களில் நடிக்கவில்லையா? நாகேஸ்வரராவ் நடிக்கவில்லையா? ஏன், சிவாஜி கணேசன் நடிக்கவில்லையா? அந்தக் கதாபாத்திரத்துக்கு, தொந்தி விழாத, சற்றே ஒடிசலான நாகார்ஜுனா உருவ அளவில் பொருத்தமாக இருப்பார் என்று தீர்மானித்தேன். அதோடு அவருடைய கண்கள்... யோகியின் தவமேன்மையால் ஞான ஒளி சுரக்கும் விழிகள்... அன்னமய்யாவாக உருகிப் பாடும்போது அந்த யோக நிலைப் பார்வைதான் எவ்வளவு பொருத்தமானதாக இருக்கிறது!" என்று சிலாகிக்கிறார் துரைசாமி ராஜு.

"அதே போல ராகவேந்திர ராவ்.. மசாலா`பட இயக்குநர்தான். ஆனால் இந்தப் படத்தை அவர் ஒரு யாகமாகவே நடத்திவிட்டார். நெகிழ்ச்சியூட்டும் கட்டங்கள்தான் எத்தனை! இவ்வளவு ஏன், வெங்கடாசலபதியாக நடிப்பவர் சுமன். உங்கள் தயக்கம் எனக்குப் புரிகிறது. ரசிகர்கள் இந்த நடிகர்களையும் அவர்கள் ஏற்கும் கதாபாத்திரங்களையும் எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்றுதானே? இந்தப் படத்தைப் பொருத்தவரை, ரசிகர்கள் கதாபாத்திரங்களைத்தான் பார்க்கிறார்களே தவிர, நடிகர்களையல்ல. இல்லாவிட்டால், ஆந்திராவில் சுமார் அறுபது தியேட்டர்களில் இந்தப் படம் இருநூறு நாட்களையும் தாண்டி ஓடிக் கொண்டிருக்குமா? முன்னாள் இந்தியக் குடியரசு தலைவர் சங்கர் தயாள் சர்மா, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, சிவாஜி கணேசன் போன்றோர் படத்தைப் பார்த்துப் பாராட்டி மகிழ்ந்திருக்க முடியுமா? கர்நாடகா, ஒரிஸ்ஸா மாநிலங்களிலும் அமெரிக்காவில் தெலுங்கு மொழி தெரிந்தோர் பகுதியிலும் இந்தத் திரைப்படம் சிறப்பாக ஓடிக் கொண்டிருக்குமோ?

"வியாபார ரீதியாகப் பலனளிக்குமா என்பது



நாகார்ஜுனா–அன்னமாச்சார்யா
ரம்யா கிருஷ்ணன்–மிஸஸ் அன்னமாச்சார்யா
சுமன்–வெங்கடாஜலபதி
பானுப்ரியா–பத்மாவதி தாயார்



ஒரு சந்தேகமாக இருந்தது உண்மைதான். பொதுவாக ஒரு பிரபல நடிகர் நடித்த படம் என்றால், சமுதாயத்தில் ஒரு பகுதியான அவருடைய அபிமானிகள் திரும்பத் திரும்ப அவர் படத்தைப் பார்ப்பதால் அந்தப் படம் வெற்றியடைகிறது. அந்த வகையில் 'அன்னமய்யா' ஒட்டு மொத்த சமுதாயத்தையுமே திரும்பத் திரும்பப் பார்க்க வைத்திருக்கிறது. இதுவும் பொருளாதார ரீதியில் வெற்றிதானே?''

"இந்தத் திரைப்படத்தை திருப்பதி திருமலைக் கோவிலில் ஒளிப்பதிவு செய்ய உங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாமே?''

''கோவிலில் படமெடுப்பதில் அர்த்தமேயில்லை. மிகவும் நவீனப்படுத்தப்பட்டுவிட்ட அந்தக் கோயில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்தைய கதைக்கு எப்படிப் பொருத்தமான களமாக அமைய முடியும்? நான் விரும்பியதெல்லாம் மலைப்பகுதியில் எந்தவித வசதியும், உதவியுமின்றி ஒற்றையடிப் பாதையில் பக்தர்கள் நடந்து வருவதாகப் படமெடுக்க வேண்டும் என்றுதான். ஆனால் இதற்கும் திருப்பதி-திருமலை கோவில் நிர்வாகம் மறுத்து விட்டது. பிறகு ஆந்திர அரசின் துணையுடன் அனுமதி பெற்றேன். 'ஆளும் கட்சி எம்.எல்.ஏ. (நகரி தொகுதி) என்ற செல்வாக்கில் அனுமதி பெற்றுவிட்டீர்கள்!' என்று ஆற்றாமையுடன் சொன்ன சிலர், மலையில் பக்தர்களுக்கோ, கோயில் நடைமுறைகளுக்கோ எந்தவித இடையூறும் இல்லாமல் ஒளிப்பதிவு செய்யப்பட்ட நேர்த்தியைப் பாராட்டினார்கள். மலைப்பகுதியில் 5000 நடிகர்களுடன், தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஒளிப்பதிவு செய்தார்கள். பிறகு கோயில் சந்நிதான செட்டை அன்னபூர்ணா ஸ்டூடியோவில் நிர்மாணித்துப் படம் பிடித்தோம். வேலை முடிந்த பிறகும் பல நாட்களுக்கு அந்தக் கோயில் அமைப்பு அப்படியே இருந்தது. அர்ச்சகர் ஒருவர் தினமும் இறைத்தொண்டு செய்வார்; பக்தர்களும் வரத் தொடங்கினார்கள். சமீபத்தில் தான் அந்த செட் பிரிக்கப்பட்டது; வெங்கடாசலபதி சிலை அன்னபூர்ணா ஸ்டூடியோவுக்கு நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.''

படம், தமிழிலும் வருகிறது. அன்னமய்யாவின் கீர்த்தனைகள் அப்படியே தெலுங்கில் தான் இருக்கின்றன. வசனங்களும், பிற பாடல்களும்தான் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

பேட்டி: **பிரபுசங்கர்**



கோஷ்டி

நியூயார்க்கில் ஐ.நா.வின் அமைப்பு ஒன்றில், எகனாமிக் அட்வைசராகவும், பிறகு வளரும் நாடுகளுக்குப் பொருளாதார ஆலோசகராகவும் பணியாற்றிய பிறகு, சென்னைக்குத் திரும்பியவர் டாக்டர் என். பட்டாபிராமன். நான்கு வயதிலிருந்தே சங்கீதக் கச்சேரிகள் கேட்கத் தொடங்கியவர்! 1983 அக்டோபரில், வெகு சீரியஸாக இவர் ஆரம்பித்த பத்திரிகைதான் 'சுருதி' ஆங்கில மாத இதழ். பதினான்கு வருடங்களில், 'சுருதி'க்கு நிறையவே நண்பர்களும், கூடவே வாசகர்களும் உருவானார்கள்.

''சுருதி'யின் தனித்தன்மை அதன் தரம்தான்'' என்கிறார் ஒரு வாசகர். ''அழகான ஆங்கிலம், அச்சு, வடிவம். எந்த விஷயத்தையும் தெளிவுடன் ஆராய்ந்து, ப்ளஸ்-மைனஸ் பாயின்டுகளை அலசி வெளியிடும் பொறுமைதான் இந்தப் பத்திரிகையின் சிறப்பு.'' ('அமெரிக்காவில் எங்கே கச்சேரிக்குப் போனாலும் 'சுருதி' பற்றித்தான் பேசுகிறார்கள்' என்றாராம் எம்.எல்.வி.)

''எதற்கு 'விஸ்பரிங் காலரி' என்ற கிசுகிசுப் பகுதி? அதை எடுத்து விடலாமே?'' என்று சிலர் அபிப்பிராயம் சொன்னார்களாம். ''மானியம் கொடுக்கிறோம். ஆனால் 'விஸ்பரிங் காலரி' பகுதியை நீக்கிவிடுங்கள்'' என்று மத்திய அரசின் கலாசார அமைப்பு முன் வந்தது. பட்டாபிராமன் மறுத்துவிட்டார்!

''ஆதாரபூர்வமான தகவல்களைத்தான் காத்திருந்து, கிராஸ் செக் செய்து அதில் வெளியிடுகிறோம். படிப்பதற்குச் சுவாரசியமாய் இருக்க வேண்டும்; அதே சமயம் சங்கீத-நடன உலகில் நடக்கும் நல்லது-பொல்லாதது என்று இரண்டு வகைச் செய்திகளையும் வாசகர்களுக்குச் சொல்ல வேண்டும் என்பதுதான் இந்தப் பகுதியின் நோக்கம். அவதூறு பரப்புவது அல்ல!'' என்கிறார் முதன்மை ஆசிரியர் பட்டாபிராமன்.

''சங்கீதம் என்றால் அது தொடர்பான சரித்திரம், பொருளாதாரம், மனப்போக்குகள் என்ற எல்லா அம்சங்களையும் அலசுகிறோம். முழுக்க முழுக்க எடிடோரியல் சுதந்தரத்துடன், எவருடைய குறுக்கீட்டுக்கும் அடிபணியாமல், இசை, நடன ரசிகர்களுடைய தேவையை உணர்ந்து, விஷயங்களை வெளியிடுகிறோம். நூற்றுக்கு மேற்பட்ட நடன இசை மேதைகளின் வாழ்க்கை வரலாறுகளைப் பல்வேறு கோணங்களில் இருந்து திரட்டி, வெளியிட்டிருக்கிறோம். நிறைகளையும் குறைகளையும் மிகைப்படுத்தாமல் சொல்லுகிறோம்.''

'சுருதி' மாத இதழ் நடத்துவது தவிர, சுருதி ஃபவுண்டேஷன் மூலமாக பரதநாட்டியம் பற்றிய செமினார், ஜி.என்.பி., லால்குடி ஜெயராமன், ஈ.கிருஷ்ணய்யர் போன்றவர்களின் பாணிகள், சாதனைகள், தொண்டு பற்றிய விரிவான கருத்தரங்கங்களும் நடத்தி, டாக்குமென்ட் செய்திருக்கிறார் டாக்டர் பட்டாபிராமன்.

''சுருதியை விலை கொடுத்து வாங்கிப் படிப்பவர்கள் சில ஆயிரம் பேர். ஆனால் இரவல் வாங்கிப் படிப்பவர் பல மடங்கு. இந்தியாவில் மட்டும்தான் என்று இல்லை.

டாலர்களில் புழங்கும் அமெரிக்கா-கனடா விலும் இப்படித்தான் நம் இந்தியர்கள் இருக்கிறார்கள்!'' என்கிறார்.

சுருதியின் டெபுடி எடிடர் எஸ். ஜானகி, முறையாக சங்கீதமும் நடனமும் பயின்றவர். பனாரஸ் ஹிந்து யூனிவர்சிடியில் ஜர்னலிசம் படித்தவர். இதில் கட்டுரைகள் எழுதுபவர்கள் இசை-நடனத்துறை நிபுணர்கள்.

'த்வனி'யின் சிறப்புக்கு, அதன் இளமை யான எடிடோரியல் போர்டுதான் காரணம்.

''என்ன, 'த்வனி' இஷ்யூ வரலையே இத்தனை நாளா? எனக்கு அனுப்பறதை நிறுத்திட்டேளா?'' என்று ஒருமுறை செம்மங்குடி சீனிவாசய்யர் கேட்டாராம்.

''88ல் ஆரம்பித்தோம். இதுவரை வெளி வந்த இதழ்கள் எல்லாம் சங்கீதத்தைப் பல கோணங்களில் ரசித்த எங்கள் இளம் நிருபர் களின் ரிப்போர்ட்டுகள்தாம்!'' என்கிறார் இளமை ததும்பும் ஆசிரியர் ஜெயந்த். I.I.T. யில் தேறி இப்போது ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர். இதற்கு முன்பு இதன் ஆசிரியராக இருந்தவர்கள் டாக்டர் சுந்தர், வரலட்சுமி ராஜகோபாலன், ஆனந்த் சிவா.

பவித்ரா, வி.என். காயத்ரி, ஆர். தாரா, விசாகா, ராதிகா பாஸ்கர், எஸ். காயத்ரி, ஜெயந்த் என்ற இளமைக் குவியலான எடி

மனப்பான்மை இல்லாத கோஷ்டிகள்!


• விஸ்வநாத்


• வழுவூர்ரவி

டோரியல் குழுவைச் சந்தித்தபோது, அவர்கள் உற்சாகத்துடன் சொன்ன ஒரு செய்தி: ''படிப்பு, பாட்டு என்று பல வேலைகள் இருந்தாலும், 'த்வனி' தயாரிப்பு எங்களுக்குச் சுமையாகவே இல்லை, சுவையாகத்தான் இருந்து வருகிறது!''

''நீங்கள் வெவ்வேறு குருவிடம் படிப்பவர் கள். விமர்சனங்கள் எழுதும்போது 'க்ளாஷ்' எதுவும் வந்ததே இல்லையா?''

''இல்லை'' என்கிறார்கள் கோரஸாக. ''எங்கள் ஜெனரேஷனை எந்த கோஷ்டி மனப் பான்மையும் பாதித்ததில்லை!''

Youth Association for Classical Music (YACM) ன் ஓர் அங்கம்தான் 'த்வனி'. வருடா வருடம் ஆகஸ்ட் மாதம் அமர்க்களமாக இவர்கள் நடத்தும் இசைவிழாக்களும் புதுமையானவை. Lec-demஎன்ன, Quiz என்ன, workshopஎன்ன, கச்சேரிகள் என்ன... இவற்றைப் பற்றி ரசிகர் களிடம் நடத்தும் சர்வே முடிவுகள் என்ன... நான்கு வருடங்களாக, இந்த விழாக்களின் போது, முதல் நாள் நிகழ்ச்சிகள் அத்தனையும் பற்றிய செய்திகள், படங்கள், விமர்சனங்கள் தாங்கிய 'த்வனி' இதழை அன்று இரவோடு இரவாகத் தயாரித்து அச்சிட்டு, மறுநாளே நிகழ்ச்சியின்போது விநியோகிப்பதுதான் தனியான சாதனை.

விமர்சனங்கள் ஆழமாகவும், நேர்மையாக வும் எழுதப்படுவது 'த்வனி'யின் ஸ்பெஷாலிடி. கலைஞர்களின் பேட்டியும் அவ்வப்போது வெளியாகிறது.

கட்டுரைகளுக்கு எடிடோரியல் குழு


• பட்டாபிராமன்

உறுப்பினர்கள் பொறுப்பு. எல்லாம் எழுதி முடித்துவிட்டு, ஒரு நாள் கூடிப் பேசி முடிவுகள் எடுத்துவிடுகிறார்கள். ''ரொம்ப இன்ஃபார்மல் சந்திப்புகள்தாம்.'' பிறகு இதழ் தயாராகிறது. ''மொத்தம் சுமார் பத்து நாள் வேலைதான்!''

இன்ன தேதியில்தான் வெளிவரும்; இத்தனை இடைவெளிக்குப் பிறகு அடுத்த இதழ் என்ற உத்தரவாதம் மட்டும் இல்லை.... காரணம் – பொருளாதாரம்...? இதை மட்டும் சீர் செய்து விட்டால், இந்த அதிரடி இளைஞர் பட்டாளம் 'த்வனி'யை ஒரு சாதனையாகவே கருதலாம்! YACM உறுப்பினர்களுக்கு மட்டுமேயான தனிச்சுற்று இதழ் த்வனி.

'சரிகமபதநி'யாக இருந்து, இப்போது 'சங்கீத சரிகமபதநி'யாக நீண்டிருக்கும் மாத இதழ் கொஞ்சம் கனமானது.

பேட்டிகள், கட்டுரைகள், ஸ்வரப்படுத்தப் பட்ட பாடல்கள் என்று, முறையான ஒரு சங்கீதப் பத்திரிகை எப்படி இருக்க வேண்டுமோ அதற்கு உதாரணமாக இருக்கிறது.

இதன் பதிப்பாளர் ஆர். பாஸ்கரன். ''சங்கீதத்துல ஆர்வம் உண்டுங்க... மத்தபடி பத்திரிகை வெளியில கொண்டுட்டு வரது ஒண்ணுதான் என் வேலை. மத்ததெல்லாம் ஆசிரியர் வேலைதாங்க!'' என்கிறார்.

பத்திரிகை ஆரம்பித்த புதிதில், ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன் ஆசிரியராக இருந்தார். அவருக்குப் பிறகு அபயம் பால முரளிகிருஷ்ணா. அவரை அடுத்து, சமீபத்தில், கௌரவ ஆசிரியராகப் பொறுப்பேற்றிருக்கிறார் RITES அதிகாரி என். விசுவநாத். சங்கீத ரசனை உள்ளவர்; முறையாகச் சங்கீதம் பயின்றவர். சென்ற டிசம்பர் சங்கீத சீஸனில் இந்தியன் எக்ஸ்பிரஸில் நிறையவே விமர்சனங்கள் எழுதியவர்...

''பொருளாதார நோக்கில், லாப நஷ்டம் இரண்டுமில்லாமல், நடத்த வேண்டும் என்பதற்காக, தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களைப் போஷகராகக் கொண்டு இப்போதுதான் ஒரு நிர்வாக டிரஸ்ட் அமைத்திருக்கிறோம்'' என்கிறார் என்.விசுவநாத்.

பேட்டிகள் தரமாக இருக்கின்றன. ஆனால் விமர்சனங்களில் முதிர்ச்சியும் எளிமையும் சேர்ந்தால் உயர்வாக இருக்கும். தலங்கள் பற்றிய பாடல்கள், நாடகமேடையில் இசை போன்ற தொடர்புகள் ஆராய்ச்சி நோக்குடன், நிறைய விவரங்களுடன் இருக்கின்றன.

''நறுக்கென்று நாலு கேள்விகள், நினைத்ததும்– நடந்ததும், பிரபலங்களின் வாரிசுகள், சபா காரியதரிசிகளுடன் காரசாரமான டிஸ்கஷன் எல்லாம் இனி வரப் போகும் பகுதிகள்!'' என்கிறார் விசுவநாத்.

மிருதங்கக் கலைஞர் காரைக்குடி மணியை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'லயமணி லயம்' இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளியாகிறது.

பெரும்பாலும் இசை நடன நிகழ்ச்சிகள், செய்திகளைப் படத்தோடு சொல்லும் இடம்தான் இதழின் முக்கிய அம்சம். ஆனால், ஆசிரியர் காரைக்குடி மணியின் தலையங்கமும், தனி ஆவர்த்தனம் பற்றிய கட்டுரையும், அவர் வாசிப்பைப் போலவே சும்மா சுறு சுறு என்று இருக்கிறது. சாம்பிள்: 'எல்லா வருடமும் ஒரு நீண்ட A-grade கலைஞர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டு மேலிடத்துக்குப் பரிந்துரை செய்யப்படுகிறதே, இது தேவையா?'; 'தெற்கத்திய வித்துவான்களுக்கும், வடக்கத்திய வித்துவான்களுக்கும் இடையே மத்திய அரசு பாரபட்சம் காண்பிப்பது ஏன்?'

'தனி ஆவர்த்தனம் வாசிக்க, கிருதியையும், இடத்தையும், காலத்தையும் சில வித்வான்கள் முன்னதாகவே நிச்சயித்துக் கொண்டு வந்து விடுகிறார்கள். சிலரோ, தனியே கொடுப்பதில்லை. 'மறந்து போய் விட்டது' என்கிறார்கள். இது பாசாங்கு. பல சீனியர் பக்கவாத்திய கலைஞர்களின் மனசைப் பாதிக்கிறது இது.'

ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வி.ராமமூர்த்தியும், விமர்சகர் கே.எஸ். மகாதேவனும், இளம் பாடகி வரலட்சுமி ராஜகோபாலனும் இதில் கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதுகிறார்கள்.

வழுவூர் ரவி ஆசிரியராக இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் மாத இதழ் 'அபூர்வ ராகம்'. கலைஞர்களின் பேட்டி, இசை-நடன உலகச் செய்திகள் தவிர, ஜோசியப் பகுதியும் உண்டு! மாத இதழானாலும், தொடர்ந்து வெளிவருவதில் அவ்வப்போது எழும் சிக்கல்களில் சிக்கிக் கொண்டாலும், இதழ் எப்படியோ வெளியாகிறது!

'இசை ஏடு', நல்லைக்குமரனை ஆசிரியராகக் கொண்டு அனைத்துலக தமிழ் இசை ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. அயல்நாடு வாழ் இந்தியர்கள் பொருளுதவி செய்கிறார்கள். இதுவும் தனிச்சுற்றுக்கான ஏடுதான். ○

— நம்பி

அட்டை வண்ணப்படம்: **யோகா**

அட்டையில்: **'த்வனி' இளமைப் பட்டாளம்**

குதூகலமாகக் கொண்டாடலாம், வாருங்கள்!

கல்கி - பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து நடத்தும் விழா!

ரூ. 50,000க்கு

தங்க நகைகள் பரிசு!

கல்கி நடத்திய ஜோக் போட்டியில் வெற்றி பெற்ற வாசகர் வே. செந்தில் குமார், பாலு ஜுவல்லர்ஸ் அதிபர் பாலு ஐயப்பன், தமது தந்தையார் பாலசுப்ரமணியன் நினைவாகத் தமக்கு வழங்கும் ரூ. 50,000க்கான தங்க நகைப் பரிசை, செல்வி பிரேமாவின் திருமணத்திற்குப் பரிசளிக்கிறார்.

பரிசளிப்பு நிகழ்ச்சியைத் தொடர்ந்து

இன்றைய சூழலில் எது சிறந்தது?

காதல் கல்யாணமா?

பெற்றோர் பார்த்து நடத்தும் கல்யாணமா?

சாலமன் பாப்பையா தலைமையில்

ஆரவாரமான பட்டிமன்றம்!

வாதிடுவோர்:

திருமதி காந்திமதி, தா.கு. சுப்ரமணியம், ராஜா, ராஜாராம்.

நாள்: 16.12.97 செவ்வாய்க்கிழமை நேரம்: மாலை 6 மணி

இடம்: ஏவி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபம்,
டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, சென்னை – 4

அனைவரையும் வருக வருக
என அன்புடன் அழைக்கிறோம்!

பாட்டு வாத்தியார் ஃபாதர் செல்லதுரை!

• இசை வகுப்பு எடுக்கிறார்...



அறை முழுக்க, சங்கீத சம்பந்தமான ஏராளமான புத்தகங்கள், வயலின்கள், வீணைகள், மிருதங்கங்கள்! சர்வசமயக் கீர்த்தனைகள் எழுதிய வேதநாயகம் பிள்ளையின் பெரிய ஓவியம் சுவரை அலங்கரிக்கிறது.

ரெவரண்ட் ஃபாதர் பி.டி. செல்லதுரையை, மாதா கோயில் தெரு, தியான ஆசிரம வளாகத்து மாடியில் இருக்கிற அவரது அறையில் பார்க்கப் போனபோது இந்த ஆச்சர்யம்.

"நான் பிறந்தது சிவகங்கையில். படிப்பு எல்லாம் திருச்சியில். சின்ன வயசிலேயே எனக்குச் சங்கீதத்தில் ரொம்ப இன்ட்ரஸ்ட் உண்டு. என் தகப்பனார் வெஸ்டர்ன் மியூசிக் பாடகர். நான் கல்லூரிப் படிப்பு முடித்து, வேதாகமப் பாடங்களில் தேறி ப்ர்ஸ்ட் ஆனதும், கூடுதலாக விருப்பப் பாடம் எதையாவது எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலையில், இங்கே அடையாறு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் சேர்ந்தேன். 'சங்கீத பூஷணம்' பட்டமும் வாங்கினேன். பிறகு அங்கேயே தியரி கற்பிக்கும் பேராசிரியராகவும் ஆனேன். இன்றைக்குப் பிரபலமாக இருக்கிற எல்லா சங்கீத வித்துவான்களும் என நெருங்கிய நண்பர்கள். இவர்களது கச்சேரிகளுக்கு நான் போவதுண்டு!" என்றார் ஃபாதர் செல்லதுரை. "என் குரு, திருப்பாம்பரம் சண்முக சுந்தரம் அவர்கள்தான்!"

பெரும்பாலும் வெஸ்டர்ன் மெட்டுகளிலும், சினிமாப் பாடல்கள் மெட்டுகளிலும் அமைந்த சர்ச் இசைக்குப் பதிலாக, சேர்ந்திசை, துதிப்பாடல்கள் எல்லாவற்றையும் தூய கர்நாடக இசையில் பாடும் பாடல்களாக மாற்றியிருக்கிறார் ஃபாதர் செல்லதுரை.

''ஆரம்பத்தில் ஓரிருவர் சினிகலாக கமென்ட் செய்தார்கள். நான் லட்சியம் செய்யவில்லை!" என்றார்.

திருவான்மியூரில் 'சத்ய ஆலய'த்தில் சர்ச்சுக்கு வரும் இசை ஆர்வமுள்ள இளைய தலைமுறையினரிடம் கர்நாடக ராகங்களில் அமைந்த துதிப்பாடல்களைப் பாடச் சொல்லிப் பயிற்சி கொடுத்து வந்தார். பிறகு

• ஃபாதர் செல்லதுரை



எல்லா சர்ச்சுகளுக்கும் நேரில் சென்று, பயிற்சி பெற விரும்புவோரை அனுப்பி வைக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டாராம். கிட்டத்தட்ட நூறு பேர் இப்படி பயிற்சி பெற்றிருக்கிறார்கள்! அடுத்த மே மாதம் இந்த இசைப் பயிற்சிப் பள்ளிக்கு சில்வர் ஜூபிலி.

ஜூலை 95ல், செயின்ட் தாமஸ் கதீட்ரலில் இவரது இரண்டு மணி நேரம் கர்நாடக இசை நிகழ்ச்சியில், தமிழ்நாடு முழுதும் உள்ள சர்ச்சுகளிலிருந்து நிறையப் பேர் கலந்து கொண்டார்கள். பிரார்த்தனை, தனி இசை, சேர்ந்திசை என்று முழுக்க முழுக்க, ஒரு நாள் பூராவும், நடந்த இசை நிகழ்ச்சி. ஆர்ச் பிஷப் அருள்தாஸ் ஜேம்ஸ், இவரைப் பாராட்டிப் பெரிதும் ஊக்குவித்தார்.

"இந்த மாதிரிப் பாட, வாடிகன் அமைப்பின் அனுமதி உண்டு" என்றார் ஃபாதர் செல்வதுரை. "அந்தந்தப் பிரதேசத்து இசையை உபயோகிப்பதில் தவறு இல்லை என்பது அவர்கள் கருத்து. மேலும், நான் சார்ந்திருக்கும் சர்ச்சுக்கு, நான் ஏதேனும் செய்ய வேண்டாமா?" என்கிறார் அழுத்தமாக.

"உங்களுக்கு அதற்கு ஏற்ற மாதிரி, நிறைய கிருதிகள் வேண்டுமே சர்ச்சில் பாட? அதற்கு என்ன செய்கிறீர்கள்?"

"கோயமுத்தூரில் ரெவரன்ட் ஃபாதர் மரிய ஆரோக்கியம் என்று ஒருவர் இருந்தார். 50 வருடங்களுக்கு முன்னால், அவர் ஒரு பாகவதரிடம் முறையாகக் கர்நாடக சங்கீதம் படித்திருந்தார். அவர் பல ராகங்களில் எழுதி வைத்திருக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கீர்த்தனைகள் இருக்கின்றன!"

ஃபாதர் செல்வதுரை எழுதிய 'தென்னக இசை இயல்' என்ற நூலுக்கு, தமிழக அரசின் பரிசு கிடைத்திருக்கிறது. The Splendour of South Indian Music என்ற நூலில் இவரது கர்நாடக இசை மோகம் மட்டுமல்லாமல், ஆழ்ந்த ஈடுபாடும் தெரிகிறது. 200 கச்சேரிகள் செய்து 'அருள் இசை மணி' விருதும் வாங்கியிருக்கிறார். கீதாலயா கீர்த்தனைகள், கீதாலயா தேனருவி பஜன்கள் என்று காசட்டுகள் வெளியிட்டிருக்கிறார்.

தமிழிசைக் கல்லூரி, சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறுகிறது. பிரின்சிபல் பதவிக்கு குரு திருப்பாம்பரம் சண்முக சுந்தரம் இவரைப் பரிந்துரை செய்த போது, ஏ.சி. முத்தையா உடனே அந்தப் பதவியை இவருக்குக் கொடுத்தாராம். ●

— எஸ்.வி.என்.

தித்திப்பாகப் பிறக்கப் போகிறது 1998!

கோவை, சென்னை வாசகர்களுக்குப் புத்தாண்டுப் பரிசு!

இதோ ஒரு சுலபமான போட்டி:

ஸ்வீட்டான கேள்விகளுக்கான பதிலை கட்டங்களில் நிரப்புங்கள். குறிப்புகள் உதவும். பெயர் முகவரி எழுதி கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை - 97க்கு அனுப்புங்கள். சரியான விடை எழுதும் கோவை வாசகர்கள் நூறு பேர் சென்னை வாசகர்கள் நூறு பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் வழங்கும் ஸ்பெஷல் ஸ்வீட் பாக்கெட்டை 1.1.98 அன்று கோவை வாசகர்கள் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸின் கோவை கிளையிலும் சென்னை வாசகர்கள் சென்னையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

கூப்பன்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 22.12.97.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

1) ஆங்கிலத்தில் இனிக்கும் வயது

		ணா	

2) யாழை விட, குழலை விட இனிமை

	ழ	

3) இனிது, இனிது, இதுவும் இனிது!

	கா			

4) குரல் இனிமைக்குக் கரிய உதாரணம்

		ல்

5) இதைத் தின்னக் கூலியா...?

	ரு		

என் பெயர்: ....

முகவரி: ....

....

....

....


சில
நாட்களில் நான்
நானாகவே
இல்லை...
"ஆனால் ஷேப்பர்ஸ் எப்படி வித்யாசமானது?"
விஞ்ஞான பூர்வமாக தயார் செய்யப்பட்ட சேனிடரி நேப்கின் ஷேப்பர்ஸ் இப்பொழுது எனக்கு முழு சௌகரியமும், சுதந்திரமும் கூடுதல் பாதுகாப்பும் கொடுக்கிறது.
"ஆனால் ஷேப்பர்ஸ் நீண்ட சதுரமாக இல்லையே?"
ஷேப்பர்ஸ் கச்சிதமாக பொருந்தும்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. பின்புறம் ப்ளாஸ்டிக்கினால் சீல் செய்யப்பட்டிருப்பதால், ஓரம் கறை படிவதில்லை, உப்பல் இல்லை.
"ஆனால் தடிமனான நீண்ட சேனிடரி நேப்கின்தானே நல்ல உறிஞ்சும் தன்மையுள்ளது?"
இல்லை. இனி கிடையாது. ஷேப்பர்ஸ் மெல்லியது கச்சித வடிவுடையது; ஏனெனில் அதன் ஸ்பெஷலாக கம்ப்ரெஸ் செய்யப்பட்ட உள்ளிழுக்கும் பொருள், அதிகமாக உறிஞ்சிவிடுகிறது. அதனால் தடிமனான நேப்கின் கொடுக்கவே முடியாத சுதந்திரம் உங்களுக்குக் கிடைக்கிறது.
பெயர்: வயது: தொழில்:
விலாசம்: பின்கோடு: போன் நம்.:
400057



CODE/GF/2/9-97 TAM



நடக்குமென்பார், நடக்கும்!

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

பாரின்ல இருக்கற உங்க பொண்ணோ, பிள்ளையோ திடீர்னு வந்து உங்களை சந்தோஷப்படுத்துவார்கள். சினிமா ஸ்டாரா இருந்தா, எதிர்பார்த்துக்கிட்டிருக்கிற அற்புதமான வாய்ப்பு இந்த வாரம் கெடைக்கிறதுக்கு சான்ஸ் இருக்கு. தெய்வப் பணி, தான-தர்மம்னு கொஞ்சம் செலவு வரும்னாலும் பணப் புழக்கம் சீராகவே இருக்கும். ஸ்டூடண்ட்ஸுக்கு அத்தனை சுபமாயில்லை. கணக்குல நூறு மார்க் வரும்னு எதிர்பார்த்துக்கிட்டிருந்தா தொண்ணூறுதான் வரும். பொதுவா இந்த வாரம் கொடுக்கல் - வாங்கல் வேண்டாம். ஆடம்பரச் செலவும் வேண்டாம். உடம்பையும் கொஞ்சம் உஷாரா கவனிச்சுக்குங்க.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

வார ஆரம்பத்துல எதுலயும் உங்களால முழு மனசோட ஈடுபட முடியாதுன்னாலும் போகப் போகப் பிச்சு உதறுவீங்க. பெண்டிங் கேஸ் இருந்தா ஜெயிக்கும். கவர்மெண்ட் ஜாப்காரங்களுக்கு புரமோஷன், விரும்புன இடத்துக்கு டிரான்ஸ்ஃபர்னு சந்தோஷமான வாரமா இருக்கும். ஸ்பெகுலேஷன், ஷேர் எல்லாம் லாபகரமாவே இருக்கும். ஸ்டூண்ட்ஸுக்கு பிக்னிக் மாதிரி ஏதாவது வாய்ப்பு வந்து சந்தோஷம் தரும். பெண்களுக்குப் பட்டுப் புடைவை, நகைன்னு ஏதாவது வாங்கற வாய்ப்பு இருக்கு. வியாபாரிங்களுக்கும் நல்ல வாரம்தான். ஆனாலும் ஒண்ணு, அவசியமில்லாம பிரயாணம் போகாதீங்க.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

அப்பாடா, எதிர்ப்புகளெல்லாம் விலகி, புதுத் தெம்போட இந்த வாரம் தொடங்குது, உங்களுக்கு. முக்கியமான காரியங்களெல்லாம் ஜெயமாகும் கிறது மட்டுமில்ல, நீங்க யாருகிட்ட உதவி கேட்டாலும் மறுக்காம செய்வாங்க. சிலருக்குப் பயணத்தால் லாபம் கிடைக்கும். சிலருக்கு மாத்திரம் வயிற்றுவலி மாதிரி ஏதாவது வரும்கிறதால அவங்க உஷாராயிருக்கணும். பெண்களுக்கும் வாரக் கடைசில நல்ல பலன்கள் கிடைக்கும். இருந்தாக்கூட யாரும் எதிலயும் உணர்ச்சி வசப்பட்டுடாதீங்க. அது வீணான மனக் கஷ்டத்தில கொண்டு போய் உட்டுடும்.

கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

பொறியியல், சட்டம், ராணுவம், எழுத்து பத்திரிகைத் துறை மற்றும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற அத்தனை பேருமே தங்களோட திறமையால எதையும் ஜெயிச்சுக் காட்டற வாரங்க இது. ரியல் எஸ்டேட் பிசினஸ்காரங்க கொஞ்சம் எச்சரிக்கையா இருக்கணும். வார ஆரம்பத்துல, பணம் தாராளமாயிருக்கேன்னு தண்ணியாச் செலவு பண்ணிடாதீங்க. வாரக் கடைசியில ரொம்பவே சமாளிக்க வேண்டியிருக்கும். கொடுக்கல் - வாங்கல், ஷேர் விவகாரத்தையெல்லாம் யோசிக்காம இந்த வாரம் தள்ளிப் போட்டுடுங்க. உடல் நலக் கோளாறு மாதிரியான எதிர்பாராத சங்கடங்கள் வர்ற சான்ஸ் நிறைய இருக்குங்கிறதால பெண்கள் கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும்.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

நீங்க அன்றாடங்காய்ச்சியா இருந்தாலும் சரி, அரசியல்வாதியா இருந்தாலும் சரி இந்த வாரம் மாத்திரம் ரொம்ப ரொம்ப ஜாக்கிரதையா இருங்க. கிரக பலன் சரியில்லை. ஷேர், ஸ்பெகுலேஷன், எந்த விஷயத்திலயாவது முக்கியமான முடிவுகள்... இப்படி எதுவானாலும் இந்த வாரம் தள்ளிப் போட்டுடுங்க. சொந்தக்காரங்க, பிரண்ட்ஸுங்க கிட்டக்கூட வீண் மனஸ்தாபம் வர்றதுக்கான சான்ஸ்தான் அதிகமா இருக்கு. தொழிலதிபர்களாயிருந்தா லேபர் பிரச்னை வரலாம். எஞ்ஜினியரிங், மருத்துவத் துறையில இருக்கறவங்க மாத்திரம்தான் கொஞ்சம் வளர்ச்சி காணுவாங்க. வீட்டுல இருக்கற பெரியவங்க (மாமனார் - மாமியார்) சேத்திராடனம் போறதுக்கான சான்ஸ் இருக்கறதால மருமகள்கள் வேணுமானா சந்தோஷப்படலாம்!

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

எல்லா கிரகங்களும் உங்களுக்குச் சாதகமாவே சஞ்சரிக்குதுங்க. எதிர்ப்பெல்லாம் தூசாகும். ஷேர், லாட்டரி, ஸ்பெகுலேஷன்னு எதிலும் வெற்றிதான். தாராளமாவே கையில பணம் புரளும். சொந்தக்காரங்க வருகை, விருந்து, கேளிக்கை, திருமணப் பேச்சுன்னு வாரம் பூரா சந்தோஷம்தான். கத்தியிருக்கறவங்க மத்தியில உங்க மதிப்பு கூடும். டிரான்ஸ்ஃபர், இல்லைன்னா புது வீட்டுக்குக் குடி போவீங்க. அரசியல்வாதிங்களுக்குத் திடீர்த் (ஜெயின்) திருப்பத்தால உயர் பதவி கிடைக்கலாம் தொழில் துறை, கலைத் துறையினருக்கும் சாதக

டிசம்பர் 10 முதல் 16 வரை

மான பலன்தான். இருந்தாக்கூட படகுப் பயணம், இருசக்கர வாகனப் பயணங்கள்ல ஜாக்கிரதையா இருங்க.

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

போன வாரத்தைக் காட்டிலும் இந்த வாரம் உற்சாகமான வாரங்க. எதிர்பார்த்தபடிக்கே உங்க காரியம் ஜெயிக்கும். அப்புறமென்ன, தெம்பும் தைரியமும் வந்து உற்சாகமாயிடுவீங்க. சங்கீதம் - நாடகத் துறைக்காரங்களுக்கு வெற்றி வாய்ப்பு ஜோரா இருக்கு. இயந்திரத் துறைக்காரங்க முதல், பத்திரிகைக்காரங்க வரைக்கும் நல்ல வாரம்தான் இது. குடும்பத்துல சின்னச் சின்ன குழப்பங்கள் வந்தாலும் கூடப் பிறந்தவங்களால சந்தோஷம் கிடைக்கும். ஸ்டூடண்ட்ஸுக்கும் நல்ல பலன்களே இருக்கு. பெண்களுக்கு வெளியூர்ப் பயணத்துக்கான சான்ஸ் இருக்கு. யாருகிட்டேயிருந்தாவது பணம் எதிர்பார்த்துக்கிட்டிருந்தீங்கன்னா, அது வாரக் கடைசியில வந்து சேரும். ஸ்பெகுலேஷன், ஷேர்ல எல்லாம் அளவோடு செயல்பட்டா லாபமே வரும்.


விருச்சிகம் : *(விசாகம் 4- ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

இந்த வாரம் உங்களுக்கு விசேஷமா எதுவும் இல்லேன்னாலும் சில அட்வைஸ் பண்ணித்தான் ஆகணும். எதிலும் அவசரப்பட்டு முடிவெடுக்காதீங்க. மத்தவங்ககிட்டப் பேசறப்ப ஜாக்கிரதையா வார்த்தைங்களை உபயோகிங்க. ஒரு சின்ன விஷயத்துல நீங்க ஸ்லிப் ஆனாக் கூட அதுவே விஸ்வரூபமெடுத்துப் பிரச்னையாயிடும். பணத் தட்டுப்பாடு இருக்கும்கிறதால அனாவசியமா செலவு பண்ணாதீங்க. கொடுக்கல் வாங்கலில் விரயம்தான் அதிகமாவும். நீங்க ஆபீஸ்ல என்னதான் மாடா உழைச்சாலும் பாராட்டுக் கிடைக்காது. அதுக்காக மனம் சோர்ந்துடாதீங்க. ஏழுமலையானை நினைச்சு பிரார்த்தனை பண்ணுங்க. எல்லாம் சரியாயிடும்.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

கல்யாணமாகாதவங்க இருக்கீங்களா, அதுக்கான நேரம் இப்பக்கூடி வரும். பணப் புழக்கம் தாராளமாவே இருக்கும். புதுமணத் தம்பதியா இருந்து இன்னமும் ஹனிமூன் போகாம இருக்கீங்களா... இந்த வாரம் அதுக்கு சான்ஸ் இருக்கு. கலைத் துறையினருக்கு முன்னேற்றம் தரும் வாரம். ஆபீஸ் கோயர்ஸ், ஆசிரியர்களுக்கு செல்வாக்கான நேரம். ஸ்டூண்ட்ஸ் கவனமா படிக்கணும். பெண்களுக்குத் திடீர்ப் பிரயாணம் செய்ய வேண்டி இருக்கலாம். பயப்படாதீங்க, விசேஷமான காரியங்களுக்குத்தான் போவீங்க. ராணுவம், போலீஸில் உள்ளவங்க ஜாக்கிரதையா இருக்கணும். மத்தவங்க, கார்ல வேகமாப் போறது, ராத்திரி நேரப் பிரயாணம் ஆகிய சமாசாரங்கள்ல ஜாக்கிரதையா இருங்க. ஒரு வேளை போல இருக்காது.

கும்ப ராசிக்காரரான ஓவியர் பத்மவாசனுக்கு இந்த வாரம் நண்பர்களால் அனுகூலம் இருக்குதாம்!



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உழைப்புக்கு எடுத்துக்காட்டு வேணும்னா தைரியமா உங்களைக் காட்டலாங்க. அப்படிப்பட்ட உங்களுக்குக் காரியங்கள் கை கூடி வர்றதுல ஆச்சரியம் என்ன! வெளியூர்ல இருந்தோ இல்ல, வெளிநாட்டுல இருந்தோ வர்ற ஒரு செய்தியால சந்தோஷமாவீங்க. பேரும் புகழும் கூடறதோட பொருளாதாரமும் கூடி வரும். விருந்தாளிங்க வருவாங்க. ஆனாலும் சலிச்சுக்க மாட்டீங்க. விருந்தும் கேளிக்கையுமா அமர்க்களப்படுத்துவீங்க. சிலர் கோயில், குளம்னு போவீங்க. விவசாயிங்களுக்கு ஆதாயமான வாரம். சிலருக்கு உடம்பு படுத்தறதுக்கு சான்ஸ் இருக்கு. ஸ்பெகுலேஷன், ஷேர் இந்த வாரம் வேண்டாம். ராணுவம், போலீஸ் துறையினர் வழக்கத்தைவிட கடுமையா உழைக்க வேண்டியிருக்கும்.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

நீங்க நெனச்சபடி இந்த வாரம் காரியங்கள் நடக்காது. கிரகங்களின் ஆதிக்கம் அப்படி. எதிர்ப்புகள், அலைச்சல், குழப்பமான சூழ்நிலைன்னு ரொம்பவும் அப்செட் ஆவீங்க. உடம்புக்கும் ஏதாவது வந்து தொலைக்கும். பணமும் இல்லாத நேரத்துல செலவும் வரும்னா சங்கடந்தாங்களே! தொழில் செய்யறவங்களுக்கும் தொழிலாளிங்க மக்கர் பண்றதால தொழில் பாதிக்கும். ஆனாலும் பிரண்ட்ஸுங்க உங்களை அம்போன்னு விட்டுட மாட்டாங்க. வள்ளுவர் சொன்னாப்ல 'உடுக்கை இழந்தவன் கை போல' வந்து உதவுவாங்க. டூர் போறதா இருந்தா ஒத்திப் போடுங்க. மெஷின்ல வேலை பார்க்கறவங்க ஜாக்கிரதையா இல்லைன்னா விபத்துக்கு சான்ஸ் இருக்கு.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்களோட புத்திசாலித்தனமும் செயல் திறமையும் வெளிப்படற வாரம் இது. வெற்றி கலபமா வரும். எதிர்ப்பெல்லாம் காங்கிரஸ் ஆதரவில்லாத குஜ்ரால் அரசு மாதிரி கபால்னு கவுந்திரும். சங்கீதம், சினிமா, இலக்கியத் துறைக்காரங்களுக்குப் பெருமையும் மதிப்பும் தாராளமாவே கிடைக்கும். வீடு, மனை, வாகனம் எதுவானாலும் உங்களுக்கு ஆதாயம்தான். சிலருக்கு கொட்டி மேளச் சான்ஸும் அடிக்கப் போவுது. விவசாயிகளுக்கு மட்டும்தான் வீண் அலைச்சலும் விரயமும் இருக்கும். அவுங்க ஜாக்கிரதையா இருக்கணும். ●

அக்னிசர்மா பக்கம்






"மாதங்களில் மார்கழி நான்."

பகவான் கூறுகிறுர்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளேயாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்த ராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணுயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற் காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனே, வந்தனே, வழி பாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவை களாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணேக்கப்பட் டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறுர் பகவான்.





1997 டிசம்பர் 14
ஈசுவர கார்த்திகை 29
மலர் : 56
இதழ் : 20

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



தேர்தல் வருகிறது; விரிசலை ஒட்டுங்கள்!

'ஆட்சி அமைக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளே ஆகிற நிலையில் இன்னொரு தேர்தலா..? செலவை எப்படித் தாங்குவோம்?' என்று ஒரு பக்கம் கவலை ஏற்பட்டாலும் நாடே நிம்மதிப் பெருமூச்சு விடுகிறது.

தேர்தலைத் தவிர்க்க நமது அரசியல் தலைவர்கள் தலைகீழாய் நின்று பார்த்து தோற்றிருக்கிறார்கள். எந்தக் கட்சியிடமும் இன்னொரு தேர்தலை எதிர்கொள்ளும் அளவுக்குப் பணமில்லை என்பது, வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்படாத காரணம்! இந்தச் சூழ்நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்டால், பணத்தைக் கொண்டு 'புகுந்து விளையாடி' மக்களைக் கவர்வ தென்பது மிகவும் கஷ்டம். எனவே, நியாயமாகவும் நேர்மையாகவும் தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

மத்தியில் வலிமையான, ஸ்திரமான அரசு அமைந்துவிட்டால், தேர்தலுக்கு ஆகக் கூடிய செலவுகளை விரைவில் திரும்பச் சம்பாதிப்பது கஷ்டமில்லை. தொழில்துறை முன்னேற்றமும் பொருளாதார அபிவிருத்தியும் இழப்பை ஈடுசெய்யும். இதை மனத்தில் கொண்டு, நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டிய கடமை மக்களுக்கு இருக்கிறது என்பதுடன், அவர்கள் சிந்தனையைத் தூண்டி வழிகாட்ட வேண்டிய கடமை பத்திரிகைகளுக்கு இருக்கிறது.

நடந்து முடிந்த நிகழ்ச்சிகளால் தி.மு.க-த.மா.கா. உறவில் பெரிய விரிசல் கண்டிருக்கிறது. இதை விரைவில் செப்பனிடாவிட்டால் தமிழ்நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.



தி.மு.க- த.மா.கா பிணக்கினால் அ.தி.மு.க. ஆதாயம் அடைந்து நாடாளுமன்றத்தில் அதிக இடங்களைப் பிடித்துவிட முடியும். முக்கோணப் போட்டியினால் வோட்டுகள் சிதறி, சிறுபான்மை வாக்குகள் துணையுடன் கூட ஜெயலலிதா ஜெயித்துவிட வாய்ப்பு இருக்கிறது! அவ்வாறு நேரும்பட்சத்தில், தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு அபாயம் ஏற்படுவதுடன், ஜெயலலிதாவின் தவறுகளை மக்கள் மன்னித்ததாகவும் ஆகிவிடும்! அப்புறம் ஜெ. தொடர்பான வழக்குகளுக்கும் விசாரணைகளுக்கும் முற்றுப்புள்ளி விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே, தி.மு.க - த.மா.கா. தங்கள் தனிப்பட்ட உறவுப் பிணக்குகளைக் கடந்து, தமிழக நலன் என்கிற பரந்த நோக்கில் செயல்பட வேண்டியது அவசியமாகிறது. 'யார் முதல் அடியை எடுத்து வைப்பது...?' என்று யோசித்து கௌரவம் பார்த்துக் கொண்டிராமல் விரைவாக இதற்கு முன்வர வேண்டும். அரசியல் ரீதியாகவும் அதுவே சிறந்த, சாமர்த்தியமான முடிவாக அமையும்.

அரசின் அலட்சியம்; கோவை கலவரம்!

மதக் கலவரங்களைத் தூண்டும் வாசகங்களடங்கிய சுவரொட்டிகள், கோவை வீதிகளில் காணப்படுவதையும், அது குறித்து நடுநிலையாளர்களின் கவலையையும் சென்ற வார கல்கியில் வெளியிட்டிருந்தோம். யாருமே எதிர்பாராத அளவுக்குப் பெரிதாகக் கலவரங்கள் வெடித்ததுடன் காவல் துறையினரின் கீழ்ப்படியாமையும் சேர்ந்து கொண்டிருக்கிறது.

நகரின் முக்கியப் பகுதிகளில் சுவர் முழுக்க வாசகங்கள் இருந்தும் காவல் துறை முன்னெச்சரிக்கை கொள்ளவில்லை. அரசு மேலிடமும் அசிரத்தையாக இருந்து விட்டது.

இப்போது, 'மதக் கலவரங்களைத் தூண்டுவோர் மீது, தேசிய பாதுகாப்புச் சட்ட அடிப்படையில் நடவடிக்கை எடுப்போம்' என்கிறார் முதல்வர்! சம்பவத்தை ஆராய நீதிபதி தலைமையிலான



விசாரணை கமிஷன் போட்டிருக்கிறார்!

செல்வராஜ் என்ற கான்ஸ்டபிள் கொலையுண்டதற்கான காரணம் என்ன? அதைத் தொடர்ந்து காவல் துறையினரிடையே அச்சமும் அதிருப்தியும் பரவி வேலை நிறுத்தமே நிகழ்ந்தது ஏன்? ராணுவ உதவியுடன்தான் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடிந்திருக்கிறது!

வழக்கமான சடங்கு போல் முதல்வர் பிறப்பித்திருக்கும் விசாரணைக் கமிஷன், மதக் கலவரப் பின்னணியை ஆராய்வதுடன், காவல் துறையின் பிரேக் டவுனுக்கான காரணத்தையும் ஆராய்ந்து அறிக்கை தரவேண்டும்.

கோவையில் நடந்த காவல் துறையினர் பணிப் புறக்கணிப்பை 'வேலை நிறுத்தம்' என்று முதல்வர் ஒப்புக் கொள்ள மறுக்கலாம். அதற்கு என்ன பெயரை அவர் சூட்டினாலும் நடந்துள்ளவை மிகவும் அபாயகரமான நிகழ்வுகள். காட்டுத் தீயைப் போல் பரவி, தமிழகத்தையே கருக்கிவிடக் கூடியது காவல்துறை ஸ்டிரைக்.

இனியும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கவிடாமல் காவல் துறையை விழிப்புடன் இருக்கச் செய்ய முதல்வர் உறுதிகொள்ள வேண்டும் என்பதுடன் காவல் துறையினருக்குப் பயிற்சிக் கட்டத்திலேயே அவர்களது பணியின் மேன்மையும் முக்கியத்துவமும் உணர்த்தப்பட வேண்டும். காவல் துறைப் பணி என்பது, வேலை நிறுத்தம், பணிப் புறக்கணிப்பு போன்றவற்றுக்கு இடம் தருகிற சராசரிப் பணி அல்ல. சமுதாய நலன் சார்ந்த சேவை அது. - இந்த உணர்வை ஒவ்வொரு காவல் துறை ஊழியரும் வலிமையாகப் பெறுகின்ற வகையில், அவர்களது பயிற்சித் திட்டத்தை மேம்படுத்தியே ஆக வேண்டும்.

இந்த இதழ் அச்சேறும் நேரத்தில் தமிழகத்தில் இரண்டு ரயில்களில் குண்டு வெடிப்பு நிகழ்ந்து உயிரிழப்பும் பீதியும் ஏற்பட்டிருக்கிறது. காவல் துறை விழிப்புடன் இல்லை. முதல்வரின் முன்னெச்சரிக்கை உணர்வு எங்கே போயிற்று?....

கருணையின் வடிவம் என்று தாயைச் சொல்லுகிறோம். இதற்குத் தந்தை என்பவர் கொடூரமானவர் என்று அர்த்தமில்லை. ஆனாலும் தாயை மட்டும் இப்படிக் காலங் காலமாகச் சொல்லிக் கொண்டிருப்பது ஏன்?

சகிப்புத் தன்மை. தனது குழந்தை எத்தனை பெரிய தவறு செய்தாலும் அதை முழுமை யாகச் சகித்துக் கொள்வது தாய் என்பதுதான் காரணம். தவறு செய்யும் குழந்தையைத் தாய் கண்டிக்கிறாள். ஏன், அடிக்கக் கூடச் செய் கிறாள். ஆனால் அடுத்த நிமிஷமே எல்லாவற் றையும் மறந்துவிட்டுக் குழந்தையை அப் படியே வாரியணைத்துக் கொள்கிறாள். அந்த அணைப்பு வெறும் அணைப்பல்ல. அவள் உள்ளத்திலிருந்து பொங்கி வழியும் கருணை யின் அணைப்பு.

இந்தக் கருணை என்பது தாய்க்கும் அவள் குழந்தைக்கும் இடையிலான ஒரு விஷயம் மட் டும்தானா? இது மற்றவர்களிடம் சுரக்காதா? நிச்சயமாகச் சுரக்கும். நம் கண்ணெதிரே நாம் கண்ட உதாரணம் மதர் தெரஸா.

அடேயப்பா! அன்னை தெரஸா மாதிரி யெல்லாம் நம் எல்லோராலும் வாழ்ந்துவிட முடியுமா என்று ஒதுக்கித் தள்ளத் தேவை யில்லை. முடியும். எல்லோர் மனத்திலும் கருணையின் ஊற்றுக்கண் இருக்கவே செய் கிறது. ஆனால் என்ன, அதை நாம் மூடி வைத்திருக்கிறோம் என்பதுதான் பிரச்னை!

எனக்குத் தெரிந்த ஒரு நண்பர். வெளியில் தமது குழந்தைகளை அழைத்துச் செல்லும் போது ஒரு விஷயத்தை மட்டும் விடாமல் கடைப்பிடிப்பார். குழந்தைகள் கேட்டதை யெல்லாம் வாங்கித் தருவார் என்பதில்லை!

பஸ் ஸ்டாப்பிலோ ரயில் நிலையங் களிலோ காத்திருக்கும்போது, யாராவது பிச்சை கேட்டால் என்ன செய்வார் தெரி யுமா? பையிலிருந்து நாணயத்தை எடுத்து அவர் பிச்சை போட மாட்டார். குழந்தை களின் கைகளில் கொடுத்துப் போடச் சொல்லுவார்.

"ஏம்பா அவங்க மாத்திரம் நம்மகிட்ட வந்து காசு கேக்கறாங்க? அவங்ககிட்ட இல் லியா?" என்று குழந்தைகள் கேட்பார்கள்.

"பாவம். வயசாயிடுச்சு. அவங்களுக்குன்னு சொந்தக்காரங்க யாரும் இருக்க மாட்டாங்க. வயசாயிட்டா எப்படி வேலை செய்ய முடி யும்? அதனாலதான் பாவம், இப்படி நம்ம கிட்ட வந்து கேக்கறாங்க. நாமும் இல்லேன் னுட்டா அவுங்க பட்டினியாத்தான் இருக் கணும்!" என்று பொறுமையாக விளக்குவார்.

எல்லோருமே, "எங்கே அங்கிளுக்கு டாடா சொல்லு!" என்று வீட்டுக்கு வந்த விருந்தாளி களை வழியனுப்பி வைக்கத்தான் குழந்தை களுக்குச் சொல்லித் தருவார்கள். ஆனால் எனது நண்பர் மட்டும், "எங்கே அங்கிளுக்கு வெல்கம் சொல்லு!" என்று வருகிற விருந்தாளி களை வரவேற்கிற பழக்கத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

குழந்தைகள் பிறரை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமானால் அந்த நண்பரைப் போல்தான் அனைவரும் செய்ய வேண்டும். அதுதான் பாசிடிவ் அப்ரோச்!


நம்மை நாமே எந்த அளவுக்கு நேசித்துக் கொண்டிருக்கிறோமோ, அதே அளவுக்கு அடுத்தவர்களையும் நேசிக்கிறபோது, நமக்கு எல்லோரிடத்திலும் ஓர் அங்கீகாரம் கிடைக் கிறது. அப்படிக் கிடைக்கிற அங்கீகாரம் பிறரிடமுள்ள நமது நேசத்தை மேலும் மேலும் அதிகப்படுத்துகிறது. இந்த நேச உணர்வு அதிக மாக, அதிகமாக சகிப்புத் தன்மை இயல் பாகி விடும். சகிப்புத் தன்மை இயல் பாகிப் போனால் கருணையின் ஊற்று தானாகவே பொங்கிப் பிரவகிக்க ஆரம்பித்து விடும்!

'**அ**ந்த மகானைத் தரிசித்து விட்டு வந் தேன். மனம் இப்போ நிம்மதியா இருக்கு!' என்று பலரும் சொல்லக் கேட்டிருப்பீர்கள். வெறும் தரிசனம்... அதாவது பொரு

கருணையின் ஊற்றைக் கட்டுப்படுத்தாதீர்கள்!

உணர்வுகள்; உறவுகள்

டாக்டர் எஸ். விஜயகுமார்



ளாகவோ, பண மாகவோ எந்தவிதமான கொடுக்கல் வாங்கலும் இல்லாமல் ஒருவரால் நமது மனதுக்கு அமைதியைத் தர முடி கிறதென்றால் அது எப்படி? அதுதான் கருணையின் மகத்துவம்!

அவர்களிடம் கருணை பொங்கிப் பிர வகிக்கிறது. உலகத்திலுள்ள அனைவருமே தமது குழந்தைகள்தாம் என்று அந்த மகான்கள் நினைக்கிறார்கள். எப்படி நமது தாய் நமது குறைகளையெல்லாம் மறந்துவிட்டு நம்மை நேசிக்கிறாளோ, அதேமாதிரி. இன்னும் சொல் லப் போனால் நமது தாயைப் போல் பல தாய்கள் சேர்ந்த ஓர் உருவமாக அவர்கள் நம்மை நேசிக்கிறார்கள். அதனால்தான் ஒரு தாய் தனது குழந்தையை வாரியணைத்துக் கொடுக்கிற கருணையை அவர்களால் ஒரு பார்வையாலேயே நமக்குத் தந்து விட முடிகிறது.

நமது குடும்பத்திலுள்ளவர்கள் தவறு செய் கிறபோது அதைச் சகித்துக் கொள்கிறோம். மிக நெருங்கிய உறவுக்காரர்கள், நண்பர்கள் தவறு செய்கிறபோது அதையும் சகித்துக் கொண்டு நேசிக்கிறோம். இதையே ஏன் இன்னும் விஸ்தரிக்கக் கூடாது? நமது வீட்டு நாய்க் குட்டியைக்கூட நாம் நேசிக்கிறபோது, அது செய்கிற எத்தனையோ அசிங்கங்களை நாம் சகித்துக் கொள்கிறபோது, ஏன் நமது பக்கத்து வீட்டுக்காரனின் தவறுகளைச் சகித்துக் கொள்ளக் கூடாது?

பக்கத்து வீடு, அதற்கு அடுத்த வீடு என்று நமது அண்டை அயலாளர்களிடமெல்லாம் நமது சகிப்புத் தன்மையை விஸ்தரித் துக் கொண்டே போகிறபோது நம்மை யறியாமலேயே நமது உள்ளத்தில் அடைந்து கிடக்கிற கருணையின் ஊற்று பொங்க ஆரம்பித்து விடும்!

சமாதானம் என்கிற பயிர் எதனால் வளர் கிறது தெரியுமா? இந்தக் கருணையின் ஊற்று நீரால்தான்! ○



• கலவர சேதம்



• 17 சடலங்கள்...

கோவை:

கலவர பூமியில் நிலவரம் இதுதான்!

இருபது பேர் உயிரிழப்பு. 300 கடை, வீடுகள் சூறை. எம்.எல்.ஏ. சி.டி. தண்டபாணியின் வேன், கார் உட்பட எரிந்து சாம்பல். எம்.எல்.ஏ. உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர் படுகாயம்... என்ற நிலையில் தொடர்ந்த வன்முறை... வெளியூர் பயணிகள் திக்குத் தெரியாது நகருக்கு வெளியிலேயே இறக்கி விடப்பட்டுவிட, ஒரு டிரைவரிடம் கேட்டோம் :

"அதையேன்ணா கேட்கறீங்க. பழைய சுரங்கத்துகிட்டே ஒரு ஆட்டோ... குடும்பத்தோட அடிச்சு... ஒரு குழந்தையையே வெட்டிக் கொன்னு... ஆட்டோ திகு திகுன்னு எரியுது... குடும்பமே எரிஞ்சுதா... குழந்தை மட்டுமான்னு புரியாத பயத்து ஓட்டின வண்டிதான்... நேரே 'டெப்போவுல' விட்டுட்டு வர்றேன்...!"

"ஜி.ஹெச்சுல ரொம்பவும் முடியாம ஒரு பேஷண்ட்... ஆட்டோவுல கூட்டிட்டு வந்தாங்க... ஆட்டோ முகப்புல பக்திசிரத்தையா ஒரு சின்னம் (பிறையுடன் 786) அவ்வளவுதான்... ஒரு கும்பலே அதை அடிச்சு நொறுக்கி... தீவைச்சு... பேஷண்டைக் காப்பாத்தப் போனவனை உசிரோட பெட்ரோல் ஊத்தி... தீ வச்சு... அவன் அலறின அலறல்! பேஷண்ட் பயத்துலயே உயிர் போயிடுச்சு... அப்பப்பா... அவங்ககிட்டே யாரும் கிட்டப் போவல... பத்திரிகைக்காரங்க கூட அந்தக் கொடூரத்தை ஃபோட்டோ எடுத்தாங்களேயொழிய ஒருத்தரும் மனுஷங்களா இல்லே...!"

"அமைதியா இருந்த கோயமுத்தூரு... இதுல இந்த மதவாத அமைப்புகளைக் கட்டுக்குள்ள வைக்க முடியலைன்னா என்னங்க அர்த்தம்...? ஒரு மாசம் முன்னாலேயே நெஞ்சுக்குழி பதற்ற மாதிரி திரும்பின பக்கமெல்லாம் 'வெற்றி நாள்; துக்க நாள்'னு போஸ்டர்களா தொங்குச்சே... அதைக் கண்டுக்காம விட்டுட்டு 'குய்யோ முறையோ'ன்னு போலீஸ், ராணுவம்ன்னு இறக்கி ஜனங்ககிட்டே பேரைக் கெடுத்துட்டாங்க...!" - என்றார் நகரின் முக்கியஸ்தர் ஒருவர்.

கோவை உக்

கடம் ஆரம்பித்து டவுன் ஹால், பூ மார்க்கெட், ஜெயில் ரோடு, காந்திபுரம் என்று சகட்டுமேனிக்குத் தீ வைப்புச் சம்பவங்கள். மிகப் பிரம்மாண்ட ஜவுளிக் கடை கட்டடங்கள் கூட எரிந்து விழுந்து விட்ட அவலம். சாலையெங்கும் கண்ணாடிச் சிதறல்கள். எரிந்த கரிக்கட்டைகள்... சாம்பல்... சேதம்? ரூபாய் 100 கோடியைத் தாண்டும் என்கிற மதிப்பீடுகள்.... கோவை அரசு மருத்துவமனை ஆரம்பித்து உக்கடம் வரை (சுமார் ஒரு கிலோ மீட்டர்) ஒரே படபடப்பு. பதற்றம். பயங்கரம். கோவையின் சரித்திரத்தில் இப்படியிருந்ததேயில்லை.

இராணுவத்தினரும் பல்வேறு பிரிவுக் காவலர்களுமாக ஆயிரக்கணக்கில்.. கலவரம் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் இறந்த 17 பேரின் உடல்கள் (முஸ்லீம்கள் : 17; இந்து 4) உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட கோட்டைமேடு பகுதியில் தொழுகை நடந்து கொண்டிருந்தது.

உக்கடத்திலிருந்து நம்மை கோட்டைமேட்டுப் பகுதிக்குப் பாதுகாப்புடன் (கைகளில் குண்டாந்தடிகள்) அழைத்துச் சென்ற முஸ்லீம் சகோதரர்கள் ஆக்ரோஷமாய்ப் பேசினர். மருந்துக்குக் கூட அங்கு போலீஸ், படைகள் இல்லை.

“உண்மைய எழுதுங்க சார். போலீஸ்தான் எங்க பக்கம் இல்லே... ஏன் நீங்களும் வரமாட்டேங்கறீங்க? நாங்க இங்கே பத்தாயிரம் பேர்... எங்களுக்குள்ளேயும் இந்துக்களும்... விநாயகர் பெருமாள் கோயிலெல்லாம் இருக்கு. நாங்க அவங்களுக்குப் பாதுகாப்பா இருக்கோமே யொழிய ஏதாச்சும் செய்யறோமா...?”

“செத்தவங்க அத்தனை பேரும் எங்க ஆளுக சார்... எல்லாமே இளைஞர்கள்... இறந்த ரெண்டு மூணு இந்துக்களைக் கூட போலீஸ் காரங்கதான் சுட்டுக் கொன்னுருக்காங்க...!”



• அன்சாரி



• கமிஷனர் ராஜேந்திரன்



• கலெக்டர் சந்தா

“எடுத்த எடுப்புல எங்க நெஞ்சுக்கு நேரா சுட்டது போலீஸ்தான் சார்... நாங்க கொஞ்சம் பேர்... இவங்களை எதிர்த்துட முடியுமா சார்...?”

– சடலங்களுக்கு இறுதி மரியாதை செய்தபடியே கொதித்துப் போய் நம்மிடம் பேசும் இளைஞர்கள். அவர்களின் கண்களில் கதகதக்கும் நீர். அதையும் மிஞ்சி ஓர் ஆக்ரோஷம்.


இந்தச் சூழலில் ‘அல்-உம்மா’ ஜனநாயக அமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளர் அன்சாரியைச் சந்தித்தோம்.

“இந்தப் போலீஸ் (ட்யூட்டியில் இருந்த டிராபிக் போலீஸ்காரர் செல்வராஜ் குத்திக் கொல்லப்பட்டதன் பின்னணியில்தான் கலவரம் மூண்டது) கொலைக்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்ல சார்... எங்க ஆள் ஒருத்தரை இந்தப் போலீஸ்காரர், சப்-இன்ஸ்பெக்டர்கிட்ட கூட்டிப் போய் ஏதோ ‘பொய் கேஸ்’ போடப் போக, நாங்க எஸ்.ஐ. கிட்ட தட்டிக் கேட்டோம். ‘அல்உமா’ன்னா... பெரிய ஆளுகளாடா நீங்க... நீங்க ஆடுவீங்க, நாங்க சும்மா இருப்போம்னு நெனச்சீங்களாடா...’ன்னு சம்பந்தமில்லாம பேசினார் அவர். அதன் பின்னால அந்த போலீஸ்காரரை யாரோ குத்திக் கொலை செய்யப் போக, எங்களைக் காரணம் காட்டிட்டாங்க... நாங்க டிசம்பர் 6-ந் தேதி அமைதியா நடத்த இருந்த பேரணியையும், துக்க நாள் அனுஷ்டிப்பையும் தடுத்து நிறுத்த, போலீஸ் துணையோட ஓர் அமைப்பு திட்டமிட்டுச் செஞ்ச வேலைதான் இது. வெற்றிகரமா முடிஞ்சிருச்சு... இனி இதுக்குத் தீர்வு நியாயமான பத்திரிகைங்க... நீங்கதான் சொல்லணும்...!”

• இறுதி அஞ்சலி செலுத்த வந்த மக்கள்...



இடையில் வன்முறைக் கும்பலால் தாக்கப்பட்ட எம்.எல்.ஏ., சி.டி. தண்டபாணி இறந்து விட்டார் என வதந்தி கிளம்ப, பின்னர் சரிசெய்யப்பட்டது. இடிபட்ட, தீ வைக்கப்பட்ட, வீடுகளும்



• மறியல் செய்யும் போலீஸ் படை....

கடைகளும் ஒப்பணக்கார வீதியில் ஏராளம். அடுத்து பாதுகாப்புப் பணிகளைத் தீவிரமாய்க் கண்காணித்துக் கொண்டிருந்தார் கலெக்டர் ஜி. சந்தானம். அவரைச் சந்தித்துப் பேசினோம்.

"கடந்த நான்கு நாட்களை ஒப்பிடுகையில் இப்போது நிலைமை சுத்தமாகவே கட்டுக்குள் வந்து விட்டது. கலவரம் நடந்த முக்கியப் பகுதிகளில் வேண்டிய அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன..." என்றார்.

அடுத்ததாக, "வழக்கத்திற்கு விரோதமாக நகரில் வன்முறையைத் தூண்டும் விதமாக போஸ்டர்கள் (கல்கி 7.12.97 இதழ்) ஆக்கிரமித்தனவே... அப்போதே நீங்கள் முன்னெச்சரிக்கையாய் செயல்பட்டிருந்தால் இந்த ஒரு பயங்கர நிலை உருவாகியிருக்காதே...?"

– என்று கோவை போலீஸ் கமிஷனர் பொ. ராஜேந்திரனிடம் கேட்டோம்.

"வெற்றி நாள்... துக்க நாள்... என்பதெல்லாம் அந்தந்த இயக்கங்களைச் சார்ந்த மக்களோட ஃபீலிங். 'கடவுள் இல்லை' என்று பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் ஒருத்தன் கல்வெட்டு வைக்கிறான்னா, அது அவனோட ஃபீலிங். ஒரு தனிமனித, கூட்டமைப்புக் குழுக்களுடைய மனோநிலையைக் கணக்கிட்டு எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுத்து விட முடியும்...? அப்படியும் மிக மோசமான வாசகங்கள் அடங்கிய போஸ்டர்களை நீக்கினோம். இது பலருக்கும் தெரியாது. அதிலும் மதம் என்கிற பெயரால் ஏற்பட்ட பிரச்னை அல்லவே இது...?"

கமிஷனர் தவிர்த்து சில போலீஸ் இன்ஸ்பெக்டர்களிடம் 'அவங்க, உங்களைத் தான் மோசம் சொல்றாங்க...' என்று சுட்டிக் காட்டியபோது,

"நாங்க யாரையும் பாரபட்சம் பார்ப்பதில்லை. அவங்ககிட்ட இருந்து பயங்கர ஆயுதங்களைப் பறிச்சிருக்கோம். நேத்து ஒரு பெரிய கட்டடத்திற்கு வைத்த பாம் (ஆர்.டி.எக்ஸ் ரகம்) வெடிச்சிருந்தா கோவை பாதி சுடுகாடாயிருக்கும். அதைக் கண்டுபிடிக்க ரிஸ்க் பண்ணினது நம்ம நேரம்...!"

"செத்துப் போன போலீஸ்காரர் செல்வராஜுக்கு மட்டும் 17 கத்திக் குத்து... அதுவும் எவ்வளவு ஆழம் தெரியுமா... பிறை பிறையா... அவ்வளவு ஏன்... நேற்று இரவு ஏழு பேர் எங்க போலீஸ் குவார்ட்டர்ஸுக்குள்ள புகுந்து... கையில 'வெப்பன்ஸ்...' அவங்களைப் புடிச்சி ஆயுதங்களைப் பறித்ததில்... கையெல்லாம் பாருங்க எப்படி... எத்தனை காயம்ன்னு...?!"

அவர்கள் தங்கள் தரப்பு நியாயங்களைச் சொன்னார்கள்.

நாம் சுற்றி வந்த சாலைகள் – (சம்பவம் நடந்து 4 நாள் ஆன நிலையிலும்) வெறிச்சோடி ராணுவ அணிவகுப்பில் நகரே பயங்கரமாய்க் காணப்பட்டது. அதைவிட உயிர்நீத்த குடும்பங்களின் ஓலம்... உறவினர்களின் அலறல்... கதறல்.. துடிக்கும் இளைஞர்கள்...

இந்தக் கொடூரமும், கோரமும் நம் நெஞ்சை விட்டு அகலவே நெடுநாளாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படியிருக்கும்...?

இப்படிப்பட்ட சோகத்தையும், துயரத்தையும், கொடூரத்தையும் இனி கோவை மட்டுமல்ல, மற்ற எந்த நகரமும் சந்திக்காதிருக்க அரசு உடனடியாக ஏதாவதொரு முடிவை எடுத்தாக வேண்டும். ○

– கட்டுரை, படங்கள் :
கா. சு. வேலாயுதன்


மும்பை மசாலா:

குரங்கு லீலை!

மணிவிழா பிரச்னைகள்

முதல்வர் ஜோஷியின் அறுபதாவது பிறந்த நாள் விழாவை, அவரது தொகுதியான தாதரிலேயே ஜாம் ஜாமென்று (ஊஹூம்... ட்ராஃபிக் ஜாமைச் சொல்லவில்லை!) கொண்டாட இருக்கிறார்கள். கோபிநாத் முண்டேவும், நவால்கரும், போட்டி போட்டுக் கொண்டு விழா எடுப்பதில் முனைப்பாயிருக்க, முன்னாள் பிரதமர் வாஜ்பாய், ராஜஸ்தான், கோவா, டில்லி, ஜம்மு காஷ்மீர் பிரதேசங்களின் இன்னாள் முதல்வர்கள் இன்ன பிறர் வருகை தர இருக்கிறார்கள். சஷ்டி அப்த பூர்த்தியில், சம்பந்தி சண்டைக்கு இடமில்லாததால், 'ப்ரோடோகால் பூசல்' எட்டிப் பார்க்கப் பார்த்தது. சிவசேனைத் தலைவர் தாக்கரே, கவர்னர் அலெக்ஸாந்தர் இருவருமே கலந்து கொள்ளும்போது, முறைப்படி கவர்னர்தான் கடைசியில் பேச வேண்டும். இதை, விழா


• அருண் காவ்லி


• தாவூத் இப்ராஹிம்

எடுப்பவர்கள் வரவேற்கவில்லை. அப்படியானால் அவருக்கு முன்பாக தாக்கரே பேச வேண்டும்; இது சிவசேனைக்காரர்களுக்கு கௌரவக் குறைச்சலாகப்படும். கடைசியில், தாதர் விழாவுக்கு தாக்கரே தலைமை தாங்குவதென்றும், முதல்வரின் பங்களா வர்ஷாவில், சிறப்பு விருந்தினர்களுக்குக்கான பிரத்யேக விருந்துக்கு அலெக்ஸாண்டர் தலைமை தாங்குவதென்றும் முடிவாகி, பிரச்னை சமாளிக்கப்பட்டது.

புதிய பார்வைகள்

நிழலுலக ராஜாக்களின் (அண்டர்வர்ல்ட்

டான்கள்தான்!) பார்வை இப்போது, மும்பையிலிருந்து புனேவின் பக்கம் சாய்ந்திருக்கிறது. வீட்டு மனை விலை சரியவே பல பில்டர்களும் தொழிலதிபர்களும் புனேவை நோக்கிப் படை எடுக்க ஆரம்பித்து விட்டனர். (அங்கே, 'பாஷ்' இடங்களில் ச.மீ. 4000ரூ ஆயிற்றே) பில்டர்கள் எவ்வழியோ டான்களும் அவ்வழிதானே? முதலில் தாவூத் வலது காலை எடுத்து வைக்க, அருண் காவ்லி, அமர் நாயக் போன்றோர் பின் தொடர்ந்து வேரூன்றியுள்ளனர். அடுத்து, குளுகுளு லோனாவாலாவுக்கு கிளை பரப்புவதாக உத்தேசம். அங்கேயும் பல புதுப் பணக்காரர்கள் பங்களாக்களை வாங்கிப் போட்டிருக்கின்றனர்- இங்கேயுள்ள சமூக விரோத சக்திகள் குஷாலாக ஒளிந்து கொள்ள வசதியாக!



• ஜோஷி

குரங்கு பிடிக்கப் போய்...

முலுண்டு காலனியில் ஒரு சிறுத்தைப் புலி 'ரவுண்ட்ஸ்' வருவதாகவும், ஒரு நாய்க்குட்டியை, 'லபக்கி' விட்டதாகவும் ஏற்பட்ட அமளி அடங்குவதற்குள், மும்பை சென்ட்ரலில் உள்ள ஒரு நர்சரி ஸ்கூலில், புதிதாக ஒரு குரங்கு (அசல் குரங்கேதான்!) அட்மிஷன் வாங்கியிருக்கும் செய்தி மும்பைவாசிகளைக் கலக்கியிருக்கிறது. சரியாக சாப்பாட்டு நேரத்துக்கு 'அட்டென்டன்ஸ்' கொடுத்துவிட்டு, எல்லோர் டிபனையும் ஒரு கை பார்க்கிறதாம். தன் டிபன் பாக்ஸை விடாமல் கெட்டியாகப் பிடித்திருந்த ஒரு சிறுமியின் 'கை'யையும் பதம் பார்த்திருக்கிறது. பள்ளி அதிகாரிகள் நாய் அலைச்சல் அலைந்தும், தீயணைப்புப் படை, SPCA போலீஸ், எல்லோரும் 'குரங்கு பிடிக்கும்' வேலையில் கையை விரிக்க, கடைசியில், 'ஜீஜாமாதா ஜூ'க் காரர்கள் மனமிரங்கி வலை விரித்திருக்கிறார்கள். கலர் கலரான பழங்களைப் பரப்பி ஒரு கூண்டை வைத்திருக்கிறார்கள். ஆனால் இதுவோ கூண்டுக்கு அருகிலேயே செல்லாமல் டிமிக்கி கொடுக்கிறது. 'சிக்'கென்று பிடித்து விடலாம் என இவர்கள் நினைக்க, விஷயம் சிக்கலாகிக் கொண்டே போகிறது... ஹூம்... இதுவும் வீரப்பன் பரம்பரையோ?

இசையின் எல்லைகள்

“நான் மும்பையின் மரீன் ட்ரைவிலும், சௌபாத்தி மண்ணிலும் புரண்டு வளர்ந்தவன்; என் தங்கை மணந்திருப்பது ஒரு குஜராத்தியை; என் மனைவிக்கு, மும்பை 'வெதர்' ஒத்துக் கொள்ளாததால், அவள் பிறந்த ஊரான லாஹூருக்கு (பாகிஸ்தான்) அண்மையில் குடி பெயர்ந்தோம். உடனே நான் பாகிஸ்தானி ஆகிவிடுவேனா?” எனக் குமுறியிருக்கிறார் பிரபல ஸிதார் வித்வான் உஸ்தாத் ரயிஸ் கான். இம்முறை, இவர் இசைக்கு இங்கே தடை விதித்திருப்பது சிவசேனைக்காரர்களெல்லாமில்லை; ஒரு இசை விமர்சகர்தான்; பிரபல 'கேசரி' நாளிதழில், 'இவர் பாடாவிட்டால், ஸவய் காந்தர்வ இசை விழா குறைந்தா போய் விடும்?' என சூடாகக் கேள்வி எழுப்ப, பதீத பாவன சங்கட்னா என்ற அமைப்பு, வரிந்து கட்டிக் கொண்டு விஷயத்தைப் பெரிது படுத்த, அந்த இசை விழாவிலும் சரி, மும்பையில் நடக்க இருந்த குனிதாஸ் சங்கீத சம்மேளனத்திலும் சரி, இவர் கச்சேரி ரத்தாகிவிட்டது! கலைஞர்கள் குறுகிய எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்த காலம் மாறி, வரவர இசையுலகம் பாக்ஸிங் மேடையாக மாறி வருவது வேதனையளிப்பதாயுள்ளது.

போணியாகாத போனி எம்

போனி எம்.மின் முதல் இந்திய நிகழ்ச்சி மராத்திய மண்ணில்தான். புனேவின் பி.கே. மெடிகல் க்ரௌண்டில் 7 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய நிகழ்ச்சி, ஆற அமர 10 மணிக்குத் துவங்கியது. மழைச் சாரலால் மேடை எல்லாம் குளமாகிக் கிடக்க, துடைப்பமெடுத்துப் பெருக்கவே அவ்வளவு நேரம் பிடித்தது! ஈரத்தில் கரகரத்த பக்க வாத்தியங்களையும், ஸவுண்ட் ஸிஸ்டத்தையும் ஒரு மாதிரி அடக்கி, பாட ஆரம்பித்து, நிகழ்ச்சி சூடு பிடிக்கும் தருவாயில், மெய்ஸி ஒவ்வொரு பாடகரையும் அறிமுகப்படுத்த ஆரம்பித்தாரோ இல்லையோ- அவர் குரல் வளையை அமுக்கி விட்டார்கள். 11 மணிக்கு மேல் ஒலி பெருக்கிகள் ஒலிக்கலாகாது என்பது மராத்திய அரசின் சட்டமாயிற்றே! சரியாக பதினொன்றரைக்கு பவர் 'ஆஃப்' ஆக, எல்லோர் மூடும் ஆஃப்! ●

மும்பையிலிருந்து: **ஜெயஸ்ரீ ராஜ்**

குருநாதா...!

சந்தான கோபாலன்!
வயது: 34
பஞ்சகச்சம் அணிந்து கச்சேரிக்கு வருவார். பாடும்போது சுய அனுபவத்தில் கரைந்து 'குருநாதா குருநாதா' என்று திக்குமுக்காடுவார்! வயலின் கலைஞருக்கு வியர்த்தால் தம் மேல் துண்டால் துடைத்து விடுவார்! அபூர்வ மனிதராகத் தோன்றவில்லை..? அவருடன் ஒரு சந்திப்பு!

இந்த டிசம்பர் சங்கீத சீசனில் 23 சபாக்களில் பாடப் போகிறார் சந்தான கோபாலன். சில கச்சேரிகள் காலையும், மாலையும்!

'மாசத்தில் 20-25 நாள் கச்சேரி பண்ணுவது நல்லதா?' என்று நாம் கேட்க நினைத்திருந்த போது, கின்னஸ் ரெக்கார்டு மாதிரியான ஓர் எண்ணிக்கையை அவர் சொன்னதும் தூக்கி வாரிப் போட்டது.

"எதற்கு இப்படி ஒப்புக் கொள்ளுகிறீர்கள்?"

"பழைய சபாக்காரர்கள் தவிர, புதிதாக மூணு சபாக்காரர்கள் வேறு இந்த வருஷம் சீரிஸ் நடத்துகிறார்கள். என்ன செய்வது? சபாக்காரர்கள் எல்லாரும் என் நண்பர்கள். அவர்களால்தானே நான் பிரபலம் ஆனேன்? அப்படி இருக்கும்போது, நான் பாட மாட்டேன் என்று எப்படிச் சொல்லுவது? என்னை அகம்பாவம் பிடித்தவன் என்று சொல்ல மாட்டார்களா? எதற்கு வம்பு என்று பேசாமல் ஒப்புக் கொண்டுவிடுகிறேன். இனி குறைத்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன். 'உங்க சபால அடுத்த வருஷம் பாடறேனே?' என்று நாசுக்காகச் சொல்லிவிடப் பார்க்கிறேன்."

திருச்சி மலைக் கோட்டைக்குப் பக்கத்தில் பிறந்தும், குடவாசல் அருகிலுள்ள, அம்மாவின் சொந்த ஊரான பருத்தியூரில் ஒரு வருடம் படித்தாலும், பிறகு நிரந்தரமாக நெய்வேலிக்குக் குடிபெயர்ந்ததில், பெயருக்கு முன்னால் ஒட்டிக் கொண்டு விட்டது நெய்வேலி. அப்பா நெய்வேலியில் அக்கவுண்டஸ் ஆபீசர்.

"நீங்கள் மகாராஜபுரம் சந்தானம் அவர்களிடம் அல்லவா முதலில் இருந்தீர்கள்?



• மனைவியுடன்

டி.என்.சேஷகோபாலனிடம் போய்ச் சேர்ந்தது எப்படி?''

''இங்கே கல்லூரியில் சேர்ந்த பிறகு, ஒரு நாள் சைக்கிளை எடுத்துக் கொண்டு தியாகராய நகர் பக்கம் வந்தேன். சிவஞானம் தெருவில் 'மகாராஜபுரம் சந்தானம்' என்ற போர்டு பார்த்தேன். உள்ளே நுழைந்து, அவரிடம் சிஷ்யனாகச் சேர வேண்டும் என்று ஆசை என்பதைச்



குருநாதா...!

சொன்னேன். பாடச் சொன்னார். 'மானஸ குரு குஹ' பாடினேன். 'இன்னிக்கு எட்டாவது நாள் நீ என்னுடன் கிருஷ்ணகான சபாவில் பாடுகிறாய்!' என்றார். என்னால் நம்பவே முடியவில்லை. அவர் அப்போது புகழின் உச்சியில் இருந்த சமயம்.

''வைஷ்ணவா காலேஜில் பி.எஸ்.ஸி. முடித்துவிட்டு, மதுரையில் என் குருநாதர் சேஷகோபாலன் அவர்களிடம் போய்ச் சேர்ந்தேன். காரணம், அதற்கு முன்னாலேயே ப்ளஸ்-டூ படித்துக் கொண்டிருந்தபோது, அவருக்கு ஒரு கடிதம் எழுதி, என்னை அவருடைய மாணவனாகச் சேர்த்துக் கொள்ளச் சொல்லி அப்பாவிடம் வற்புறுத்திக் கொண்டிருந்தேன்.

''மதுரையில் அவர் வீட்டிலேயே குருகுல வாசம்தான். எனக்கு எல்லா சப்ஜெக்ட்லயும் இன்ட்ரஸ்ட் உண்டு. ஒரு நாள் வேத க்ளாஸுக்குப் போய்விட்டு, கொஞ்சம் தாமதமாக வீடு திரும்பினேன். 'ஏன் லேட்?' என்றார் குரு. 'வேத க்ளாஸில் ஜாயின் பண்ணியிருக்கேன்' என்றேன். 'அப்போ பைபின் க்ளாஸில் சேர். அப்புறம் வேறு ஏதாவது வகுப்பில் போய்ச் சேர். சங்கீதத்தை விட்டுவிடு!' என்றார் பாதி கிண்டலாக.

''எதற்கும் BSRB பரீட்சை எழுதச் சொன்னார். அவர் சொல்படியே பாங்கிங் பரீட்சை எழுதி, விழுப்புரம் அருகே உள்ள மாம்பழப்பட்டு கிளையில் பாங்க் அப்பாயின்ட்மென்ட் லெட்டரும் வந்து விட்டது. ஆனால் வேண்டாம் என்று அப்போதே தீர்மானித்து விட்டேன். என்னை உருவாக்கியவர் என் குருநாதர்தான்!''

''குருநாதா, குருநாதா என்று அடிக்கடி சொல்லுவது அவரைத்தானா?''

''அல்ல!'' என்றவர், எதிரே தெரிந்த பன

பளப்பான காஞ்சிப் பெரியவரின் புகைப் படத்தைக் காண்பித்து, "அவரை!" என்றார் புன்சிரிப்புடன்.

"85ல் சென்னைக்கு வருமுன், 'நீ குருவிடம் கற்க வேண்டியதை எல்லாம் கற்றுக் கொண்டு விட்டாய். இனி பாடி, கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்!' என்று குருநாதர் சொன்னார். கூடவே, 'நீ என்னை மாதிரிப் பாடாதே. என்னைவிட நன்றாகப் பாடு!' என்றார்.

"சென்னைக்கு வந்து சங்கீதத்தை முழு நேரத் தொழிலாக எடுத்துக் கொண்ட போது, நூற்றுக் கணக்கில் ஸ்டூடன்ட்ஸ். நல்ல வரும்படி. போதாததற்கு, என்ஃபீல்டு நிறுவனத்தில், காலம் சென்ற விசுவநாதன் வேலை கொடுத்தார். வேலை என்றால், வேலை எதுவும் கிடையாது. கச்சேரிகள் ஏற்பாடு செய்வார். போய்ப் பாடிவிட்டு வரணும். ஆபீசில் அவருக்கு ஓய்வு இருக்கும்போது, கூப்பிட்டு உட்கார வைத்து, சங்கீதம் பற்றிப் பேசுவார்."

"Look back 500 years for science and look beyond 500 years for music என்று ஒரு மேற்கோள் சொல்லுவார் கே.வி. நாராயணசாமி. யோசித்துப் பார்த்தால், எவ்வளவு உண்மையான வார்த்தை என்று எனக்குத் தோன்றும்..."

"உங்களைப் பொறுத்தவரை சங்கீதத்துக்கு என்ன விளக்கம்?"

"நவரச உணர்வையும் பக்தியில் பிசைந்து கொடுக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. ஒரு கச்சேரிக்குப் போய் வந்தால், கோயிலுக்குப் போய்விட்டு வந்த தெய்வீக உணர்வு ஏற்பட வேண்டும்."

"விமர்சனங்களைப் படிப்பதுண்டா?"

"உண்டு. ஆனால், சுமாராகப் பாடிவிட்டு நன்றாகப் பாடினார் என்று எழுதினால் வருத்தமாயிருக்கும்... ஃபீல்டுக்கு வந்த புதிதில், என் திருப்திக்கு என்று சில கச்சேரிகள் செய்திருக்கிறேன். பிறகு ரசிகர்கள் திருப்திக்கு என்று சில கச்சேரிகள் செய்திருக்கிறேன். இப்போது இரண்டு வருடங்களாகத்தான் என் திருப்திக்கும், ரசிகர்கள் திருப்திக்குமாகச் சேர்த்து, பாட ஆரம்பித்திருக்கிறேன்."

"கச்சேரியில் ஒரேயடியாகக் கண்ணை மூடிக் கொண்டு, தன்னை மறந்த நிலையில் பாடுகிறீர்களே?"

"கண்ணை மூடிக் கொண்டு பாடலாம். கண்மூடித்தனமாகப் பாடுவதுதான் தப்பு-இல்லையோ?" என்று சிரித்தார் சந்தான கோபாலன். "ஆத்மார்த்தமாக, லயிப்புடன் பாடுகிறபோது, அங்கேயும் இங்கேயுமாக ஒவ்வொருத்தர் எழுந்து போக ஆரம்பிப்பார்கள். கஷ்டமாக இருக்கும்... பஜன ஸேயவே மனஸா தானே? கச்சேரி ஸேயவே மனஸா அல்லவே?... ஆனால் நானே இப்போது என்னை



மாற்றிக் கொண்டு வருகிறேன். ஒரூரில் ஒரு கச்சேரி முடித்துவிட்டு பஸ் ஏற்றிவிட வந்தவர், நான் என்னை மறந்து பாடும் நிலையைக் குறிப்பிட்டு, 'நீங்க கச்சேரி பண்றதையே நிறுத்திப்பிடலாம்!' என்றார். இன்னொரு கச்சேரியில், டி.வி. சங்கரநாராயணன் சார், 'நாங்கள் உங்கள் பாட்டை எப்படி ரசிக்கிறோம் என்று பார்க்கிறதுக்காவது நீங்கள் கண்ணைத் திறந்து கொண்டு பாட வேண்டாமா?' என்று கேட்டார்..."

"இப்போதே எதற்குப் பின்பாட்டுக்கு சிஷ்யர்கள்?..."

"இந்த சீஸனில் நிச்சயம் பார்க்க மாட்டீர்கள். வெளியூர் கச்சேரிகளில் வைத்துக் கொள்ளுகிறேன். அவர்களும் அனுபவம் பெற வேண்டாமா?"

88-ல் கல்யாணம். மனைவி மீரா.

"உலகத்திலேயே நான் பயப்படும் ரசிகை அவள்தான். அவளிடம்தான் நான் என் சங்கீத லட்சியம் பற்றி எல்லாம் பேசுவேன். என்னுடைய எல்லாக் கச்சேரிகளுக்கும் வந்து, மூலையில் உட்கார்ந்து கேட்டுவிட்டு, என்னை விமர்சனம் செய்வாள். அவளே நன்றாகப் பாடுவாள். பிரமாதமாக வீணை வாசிப்பாள்.

"ஆரம்பத்தில் என் குருநாதர் மாதிரியே பாடிக் கொண்டிருந்தேன். கார்பன் காபி என்று பத்திரிகைகளில் எழுதினார்கள். அவர் பாணியில் பாடத்தான் அவரே இருக்கிறாரே. நான் வேறு எதற்கு அவரை காபி பண்ணணும் என்று யோசித்தேன். விமர்சனம் தான் கண்ணாடி என்று எடுத்துக் கொண்டுவிட்டால் பிரச்னையே இல்லை!"

"அதுதான் உங்களிடம் கே.வி.என்.னின் இதமான விச்ராந்தி, மகாராஜபுரம் சந்தானத்தின் மாடுலேஷன் உத்தி, உங்கள் குருவின் கம்பீரம், மதுரை மணியின் லகு எல்லாம் இருக்கிறது போலும்..."

"என்னுடைய இந்தப் பாணி அமைந்ததற்கு என் மனைவிதான் காரணம். எல்லா நல்ல அம்சங்களையும், அது யாரிடம் இருந்தாலும், அதைப் பின்பற்றினால் தப்பு இல்லை என்று நான் நினைத்ததை அவளும் ஆதரித்தாள். எனக்காக ஒரு பாணியை இப்படித்தான் உருவாக்கிக் கொண்டேன்!"

"அட, ஜுகல்பந்தி பார்க்கலாம்னு நீ சொன்னது உன் அம்மாவையும் மனைவியையும்தானா?"

– நளினகாந்தி

"தியாகராஜ சுவாமிகளின் கிருதிகள் சிலவற்றைத் தமிழில் பாடியிருக்கிறீர்களாமே?"

"ஆமாம். அது ஒரு சமீபத்திய பிராஜக்ட். ஆர்.டி. சாரி என் ரசிகர். அவர்தான் முதல் முதலில் எனக்கு யு.எஸ்.போக டிக்கெட் எடுத்துக் கொடுத்து, 'அந்த ஊர்க்காரர்களும் உன் சங்கீதத்தைக் கேட்டு ரசிக்கட்டும்' என்று அனுப்பி வைத்தார். 'பல பேர் தியாகய்யரின் கீர்த்தனைகளை அர்த்தம் தெரியாமல், கேட்டு ரசிக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் இதை ஒரு பொறுப்பாக எடுத்துக் கொண்டு செய்தால் நன்றாயிருக்கும் என்றார்."

"நீங்களே தமிழில் பண்ணினீர்களா?"

"ஆமாம். டயம் கிடைக்கும்போது எல்லாம் ஒவ்வொரு பாட்டாக எழுதிக் காட்டினேன். ('நிதி சால சுகமா' வைத் தமிழில் பாடிக் காட்டுகிறார்). அதே போல தீட்சிதரின் கிருதி. புரந்தர தாசரின் 'நாராயணா' (பாடிக் காட்டுகிறார்)... தெலுங்கு, சம்ஸ்கிருதம், கன்னடம் முதலிய கீர்த்தனைகளில் இருக்கும் அசலான நெருக்கமும், உருக்கமும், தமிழில் குழைந்து இனிமையாக வெளிப்படுகிறபோது, 'ஆகா' என்று பாராட்டுகிறோம்.

"கேசட் தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவில் வெளி வந்துவிடும்!"

கச்சேரிகளுக்குப் போகும்போது, சரிகைக் கரை வேட்டியாகக் கட்டாமல், பஞ்சகச்சம் கட்டிக் கொள்கிறார் சந்தான கோபாலன். "ஒரு சோல்ஜருக்கு யூனிஃபார்ம் எப்படியோ, அந்த ஃபீலிங் வருகிறது எனக்கு. ரசிகர்களும் ஒரு மரியாதையுடன் பார்க்கிறார்கள். அந்த மரியாதையையும், கௌரவத்தையும் காப்பாற்ற, தானாக ஒரு கமிட்மெண்ட் வந்து விடுகிறது."

சங்கீத உலகில் நடக்கும் சர்ச்சைகள் எதிலும் இவர் சிக்கிக் கொள்ளுவதில்லை. "சங்கீதத்தின் லட்சியம் சாந்தமே. சாந்தம் வந்தால் கான்ட்ரவர்ஸியே கிடையாது!"

"ஹம்சத்வனி சபா நிகழ்ச்சியில் மூன்று பாட்டுக்கள் நீங்கள் பாடிய பிறகு, செயலாளர் பேசி, ஸ்பான்சரையும் பேச அழைத்துக் குறுக்கிட்டது தவறாகப் படவில்லையா?"

"சங்கீதத்துக்கு நடுவில் பேச்சுக் கச்சேரி வைத்துக் குறுக்கிடுவது சரியல்லதான். கச்சேரி ஆரம்பிக்கும் முன்னால் பேச்சுக்கள் இருந்து விட்டால் பரவாயில்லை!"

"அன்றைக்கு மிருதங்கள் டீ.கே. மூர்த்தி மிகவும் கோபமும் வருத்தமும் ஏற்பட்டு தன் எதிர்ப்பைத் தெரிவித்தாரல்லவா..?"

"உங்க கம்பெனி போர்டு மீட்டிங் நடத்திண்டிருக்கிறப்போ நடுவுல வந்து, எந்தரோ மகானுபாவுலு பாட ஆரம்பிச்சா நன்றாயிருக்குமா? நீங்க ஏத்துக்க முடியுமா? என்று அவர்களைக் கேட்டார். ஸ்பான்சர்கள், சபாக்காரர்கள், ரசிகர்கள், பாடகர் எல்லாரும் சேர்ந்தால்தான் நல்ல சங்கீதம். இதைப் புரிந்து கொண்டு அமைப்பாளர்கள் நாசுக்காக நடந்து கொண்டு விட்டால், யாரையும் குற்றம் சொல்ல வேண்டிய சூழ்நிலை வராது!"

"இசைத் துறையை மேம்படுத்த சில மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்றால், என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள்?"

"1. பாடுகிறவரைச் சுற்றி ரசிகர்கள் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டு கேட்கிற மாதிரியான அந்நியோன்ய ஏற்பாடு.

2. எல்லா சபாக்காரர்களும் சேர்ந்து பேசி, சீஸனில் ஆடியன்சுக்கும் பாடகருக்கும் வசதியாக இருக்கிற மாதிரி கச்சேரிகள்.

3. ஒவ்வொரு கச்சேரிக்கும் ஒவ்வொரு concert format.

4.தரமான ரசிகர்கள் கூடியிருக்கிற சபையில், ஒரு கச்சேரி முடிந்த உடனே, ஆன் த ஸ்பாட் டிஸ்கஷன் மாதிரி ரசிகர்கள் தங்கள் கருத்தை எடுத்துச் சொல்ல, பாடகர் தம் கருத்தைச் சொல்லும் வாய்ப்பு.

5. சில கச்சேரிகள் மட்டும் எக்ஸ்க்ளூசிவ் ஆக, ரசிகர் விருப்பம்– ஆரம்பத்திலிருந்து கடைசிவரை. கச்சேரி ஆரம்பிக்கிறதுக்கு முன்னால், தாங்கள் விரும்புகிற பாடலைச் சீட்டில் எழுதிக் கொடுத்து விட வேண்டும்."

குருகுலவாச குருநாதர் டி.என்.எஸ். என்றால், ஆரம்பத்தில் செம்பையின் மருமான் ஆனந்தன், ஸ்ரீரங்கம் ரங்கநாதன், மகாராஜபுரம் சந்தானம், சங்கரய்யர் எல்லாருமே குருவாக இருந்திருக்கிறார்கள்.

"காலேஜ் படிப்பை முடித்த பிறகு நான் வேலைக்குப் போக வேண்டும் என்று அம்மாவுக்கு ஆசை. அப்பா அப்படி அல்ல... சங்கீதமே நமக்கு வேணும்கிறதைக் கொடுக்கும் என்ற திடமான நம்பிக்கையோடுதான் இதை ப்ரொஃபஷனாக எடுத்துக் கொண்டேன். பக்குவமான பக்கவாத்தியங்கள் இருந்தால், தினம் தினம்கூடப் பாடலாம்!" என்கிறார்.

சந்திப்பு: **சாருகேசி**

படங்கள்: **ஸ்ரீஹரி**

நிலா வேட்டை

ஒரு குண்டு வெடித்தாற்போல எதையோ சொல்லிக் கலைத்து விட்டு, களைப்பில் உலகே மாயம் என்பதாகப் பக்கத்து சீட்டில் சரிந்து உறங்கும் ஸ்டீபனைப் பார்த்தான் ஹரி. கொட்டுகிற மழை. ஆள் அம்பு இல்லாத அநாம தேயச் சாலை. கறுப்புக் கண்ணாடி ஏற்றிவிடப் பட்ட காரின் உட்புறம். துல்லியமாக இவன் கழுத்தை நெரித்துக் கொன்று கடாசிவிட்டுப் போய்விடலாமா என்று எழுந்த வேக உணர்வை நசுக்கிப் புதைக்க வெகு சிரமப்பட்டான் ஹரி.

"ஏன் இப்படிப் பண்ணிட்டே ஹரி? நேற்றுக் காலையிலிருந்து ரஞ்சனி பிரமை பிடித்தவள் போல விழுந்து கிடக்கிறாள். சாப்பிடலை. ஒரு வார்த்தை பேச்சு வரலை. உலுக்கினாலும் உணர்வு இல்லை. நீ வந்தாலொழிய வழி இல்லைன்னு டாக்டர் சொல்லவேதான் அலறிப் பிடிச்சுட்டு ஓடி வரேன்...."

"நான் இங்கே வந்ததை யார் சொன்னது?"

"உன் அஸிஸ்டெண்ட் ரங்கா."

வந்ததை மட்டும் சொல்லவில்லை. உன்மைக் காரணங்களைக் கடைவிரித்து விட்ட மகாபாவி. ரங்கா, நீயா? நம்பத்தான் முடியவில்லை. துளி வெளியே சிந்திச் சிதறி விடாமல் கவனமாக மனத்தில் சேர்த்து வைத்த குப்பைகளைக் கொண்டு போய் நடுக்கூடத்தில் கொட்டிக் குழப்பி இருக்கிறான். அல்லாத பட்சத்தில், துரும்புகள் உபதேசம் பண்ண முன்வரப் போகிறதில்லை.

"ஹரி, வாட்'ஸ் ராங் வித் யூ? எதை எதையோ போட்டுக் குழப்பிட்டு இருக்கே. படிச்சவன் இல்லையா நீ? இப்படியா இல்லிட்ரேட் மாதிரி உளப்பல் கேஸா இருப்பாய்? குழந்தை இல்லாதது ஒரு பாவமா? உனக்கு ரஞ்சனி இல்லை? உன்னையே நம்பி, அவள் இல்லை?"

கிருஷ்ணரின் தலைக்குப் பின்னால் ஒளி வட்டம் ஏதும் தெரிகிறதா என்று ஹரி பார்த்தான். விஷப் புள்ளிகளாய் மனத்தில் படருகிற வெறுப்புத் திரை.

என்னவெல்லாம் சொல்லி இருப்பான் ரங்கா? என் குறையை எண்ணிக் குமுறுகிற அவமானத்தைச் சொல்லி இருக்கிறான். வேறு? சமீப காலமாய் மையம் கொண்ட சந்தேகப் புயல் பற்றி? 'ரஞ்சனி, உங்களுக்கும் ஸ்டீபனுக்கும் நட்பைத் தாண்டிய உறவு இருக்கிறதா? நான் கேட்கவில்லை. ஹரியின் சந்தேகம் அது.' - உடைத்திருப்பானா? சடாரென்று ஸ்டீபனைத் திரும்பிப் பார்த்தான். அது தெரிந்த பின்பும் கிளம்பி வந்திருக்க முடியுமா என்ன? ஆனால் சொல்வதற்கில்லை. சாக



பா. ராகவன்

8

சம் மிக்கவர்கள், எதையும் ஒரு புன்னகைத் திரைக்குப் பின்னால் ஒளித்து வைத்து விட்டு, ஒன்றுமே நடவாதது போல உலா வருவதில் வித்தகர்களாக இருக்கக்கூடும். ஆ, அந்தப் போட்டோ! ரங்கா அதையும் சொல்லி இருக்கக் கூடியபட்சத்தில் எல்லாம், எல்லாமே தெளிவாகி விடத்தான் போகிறது. இன்றைய தினம், ஒரு மௌனப் போரின் இறுதி நாள் ஆகப் போகிறது. அப்படித்தானா?

"இல்லை. நான் உன் அபத்த யூகங்கள் எதையும் சொல்லி, உன்னை இழிவுபடுத்த விரும்பவில்லை!" என்று ரங்கா சொன்னான்.

சென்னையைத் தொட்டதும் ஸ்டீபனை இறக்கி விட்டு, வீட்டுக்குப் போகாமல் நேரே ரங்காவைத் தேடிப் போயிருந்தான் ஹரி. போருக்குச் செல்லும் முன் கவசங்கள் முக்கியம்.

"நான் ஏன் அதைச் சொன்னேன்னு நீ குதிக்கிறாய். ஆனால், விடிகிற நேரம் வீட்டு வாசலில் ஒரு பெண் வந்து நின்னு, 'என் புருஷனைக் காணோம்; இந்தக் கடிதத்துக்கு என்ன அர்த்தம்னு தெரியலை'ன்னு அழறப்போ என்னை வேறென்ன செய்யச் சொல்றே? சினிமாக்காரன்னாலும் உன்னைப் போல் எனக்கு இன்னும் உணர்ச்சி மரத்துப் போகலை."

குழப்பத் தீவில் கொஞ்சம் நிம்மதி.

"ஆனாலும் எனக்குத் தெரியாமல் நீ இப்படிச் செய்ததில் வருத்தம்தான் ரங்கா."

"பர்ஸனல் விஷயத்தில் நீ ஏன் தலையிட்டேன்னு கேட்காத வரை நிம்மதி."

"சீ! உன்னை நான் எங்கே வெச்சு இருக்கேன்னு உனக்குத்



தெரியாது."

"தெரிஞ்சதால்தான் இத்தனை செஞ்சேன். விடு. வீட்டுக்குப் போனியா?"

"இல்லை. நேரா வரேன்."

"முட்டாள் ஹரி! ஏன் இப்படி எல்லாத்தையும் ஏறுக்கு மாறாக செய்ய ஆரம்பிச்சுட்டே? முதலில் வீட்டுக்குப் போ. அவங்களுக்கு என்ன ஆச்சுன்னு தெரியுமா உனக்கு?"

"தெரியும். ஸ்டீபன் சொன்னான். போகத்தான் போறேன். அதுக்கு முன்னால்... ப்ச், புரியலைடா. அவள் என்னவெல்லாம் நினைச்சு இருப்பாள்? உடலளவில் குறைபட்டவன், மனசாலும் ஊனமாகி இருக்கிறதாக நினைச்சுக்க மாட்டாள்? நான் எப்படி அவள் முன் விழிப்பேன்? ஸ்டீபன்! அவனைப் பார்த்தாலே பத்திட்டு வருது."

"அட்ராஷியஸ், ஹரி! ஹி இஸ் எ நைஸ் ஜென்டில்மன். நேத்து பேசினேன்."

"என்ன பேசினே?"

"நத்திங் பர்ட்டிகுலர். உன் ஒய்ஃபை டாக்டர் பார்த்துட்டு இருந்த நிமிஷ இடைவெளியில் கொஞ்ச நேரம்."

"அவன் முகத்தில் இருட்டுத்தனம் தெரியலை? அடுத்தவன் பெண்டாட்டிக்கு அலையற அயோக்கியத்தனம் தெரியலை? நான் சைபராகிப் போனதைக் கொண்டாடற குஷி தெரியலை?"

அவன் கொதித்துக் குமிழ் விட்டுக் கொண்டிருந்தான்.

"ஹரி, ப்ளீஸ் அமைதியா இரு. நீ சொல்ற எதுவுமே எனக்குத் தெரியலை."

"எனக்குத் தெரியறதேடா!" என்றான் பரிதாபமாக.

மேலும் கொஞ்சம் பேசிவிட்டு, அவன் வீட்டுக்குப் போனபோது, ரஞ்சனி தெளிந்து, எழுந்து இருந்தாள். அப்போதுதான் குளித்து, கொஞ்சம் ஒளி சேர்த்துக் கொண்டு இருந்தவள், அவனைப் பார்த்ததும் சட்டென்று அழ ஆரம்பித்தாள்.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? தோளில் சாய்த்துக் கூந்தலை வருடி, ரகசியக் குரலில் ஒரு ஸாரி. அணைப்பின் இதத்தில் கொஞ்சம் கண்மூடி, மௌனம் காத்து, மாற்றுப் பாதையில் தன்னிலை விளக்கம்.

'ஏதோ குழப்பம். என்னமோ உளைச்சல். உன் குழந்தை ஆசை நிறைவேறாமல் போறதேன்னு ஆதங்கம். என் மீதே கோபம்...' இந்த ரீதியில் வார்த்தைகளுக்கு நிறைய இடைவெளி விட்டுப் பேசினால், 'இதுக்குப் போய் சொல்லாமல் கொள்ளாமல் போயிடறதா?' என்று செல்லச் சிணுங்கல் சிணுங்குவாளாயிருக்கும். அதன் பின் இங்கே சீண்டி, அங்கே தீண்டி, கொஞ்சம் அழுது, கொஞ்சம் தொழுது, முத்தப் பேய் மழையில் மொத்தமும் கரைத்து விடலாம்.

எல்லாமே சாத்தியம்தான். ஆனால், எது ஒன்றையும் நடக்கவிடாமல் மனம் முரண்டு பிடிக்கிறது. சந்தேகம், ஆணி அடித்தாற்போல விண்ணென்று விரைத்து நிற்கிறது. 'நான் எங்கோ போய், எக்கேடும் கெட்டு ஒழிந்தால் உனக்கு என்ன? உனக்குத்தான் அவன் இருக்கிறானே?' என்று வார்த்தைகளால் விளாறத் தோன்றியது. பெங்களூர் ஓட்டலில் பின் தொடர்ந்து போய், நேருக்கு நேர் மாட்டிக் கொண்டதில் விளைந்த அவமானம் இன்னமும் குத்திக் குடைந்து கொண்டு இருந்தது.

"நான் அப்படி என்ன தப்பு பண்ணிட்டேன்? சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போகிற அளவுக்கு?"

விசும்பலின் இடையே உதிர்கிற ரஞ்சனியின் சொற்கள்.

"நீ என்ன பண்ணுவே? எனக்குத்தான் மனசு சரியில்லை. விடு."

எதை விடுவது?

"மனசு சரியில்லாமல்... ப்ச். என்ன ஆயிடுச்சு இப்போ? நான் ஏதாவது கேட்டனா?"

"ஏன் கேட்கலைங்கறதுதான் கேள்வி."

"எதுக்குக் கேட்கணும்? நீங்கள் டாக்டரிடம் போனதே அநாவசியம். அது நடந்தாச்சு. விட்டுடணும். என்ன இப்போ? நாம் எதிர்பார்க்கறது மட்டும்தான் நடக்கணும்னு யாரும் ரூல் போட முடியுமா என்ன? எதையும் ஏத்துக்கறது, விட்டுக் கொடுக்கறது, புரிஞ்சுக்கறதுதான் லைஃப். நான் ஒண்ணும் இது தெரியாத முண்டம் இல்லை."

"ஆனால், நான் முண்டம்தான். மக்கு மடையன்தான். போதுமா?"

ரஞ்சனி பயந்து இருந்தாள். இத்தனை வருடங்களில் முன்பு ஒருபோதும் இப்படிக்

"உங்க கட்சியில நிலவுற பூசல், குழப்பம் எல்லாம் எப்ப தீரும்...?"

"கூடிய சீக்கிரம்... கட்சி கலைஞ்சதும்!"

— கச்சனம் திருமலைராஜன்



குரல் உயர்த்தியவன் இல்லை ஹரி. என்ன ஆயிற்று இப்போது? தன்னைத்தானே பிடுங்கித் தின்னும் தாழ்வு மனப்பான்மை? கடவுளே, நோய்க்கு மருந்து கொடுக்கலாம். மரணத்துக்கு ஏது மருந்து?

அவள் சட்டென்று தணிந்து அவன் கரங்களைப் பற்றி, அழுத்தினாள்.

"சரி. அப்புறம் பேசிக்கலாம். முதலில் போய்க் குளிச்சிட்டு, சாப்பிட வாங்க. டிபன் ரெடி பண்ணிடறேன்" என்று அவசரமாகத் திரும்பி, உள்ளே போனாள்.

எதற்கு பெங்களூர் வந்தாய் என்று கேட்பாள் என்று எதிர்பார்த்தான் ஹரி. கேட்கவில்லை. ஏன் கேட்கவில்லை என்று தான் கேட்டு விடுவது என்று முடிவு செய்து கொண்டான். முதலில் குளியல். பிறகு உணவு. கொள்ளை போகிற பசியைத் தணித்து விட்டுத் தொடங்கலாம் என்று நினைத்தான்.

சாப்பிட்டு ஆகிறவரை ஒரு சொல் உதிரவில்லை. லேசான சப்தத்துடன் சுழன்ற மின் விசிறி தவிர வேறு த்வனி இல்லை. மழை கொஞ்சம் விட்டு, கண் திறக்கலாமா என்று ஜன்னலுக்கு வெளியே யோசிக்கிற வானம். உள்ளே கவிகிற மேகமூட்டம்.


அவன் எழுந்து, துடைத்துக் கொண்டு படுக்கை அறைக்குப் போனான். கண்ணை அழுத்தும் அசதி. பழிவாங்கும் பயணக் களைப்பு. ஆனால், பொழுதுக்குள் சகலத்தையும் போட்டு உடைத்து விட வேண்டும் என்கிற வெறி பிடித்து ஆட்டிக் கொண்டு இருந்தது. உறுத்தலுடன் ஒன்றி வாழ்தல் சாத்தியமில்லை. மனம் முழுக்க மலத்தைச் சுமந்து வலம் வரும் கேவலம் போதும் என்று தோன்றியது. ரங்காவே அதையும் சொல்லிவிட்டிருக்கலாம் என்று இப்போது நினைத்தான்.

தலையில் யாரோ பாறை பிளப்பது போல வலி ஆளைக்கொன்றது. கண்ணை இறுக்கி மூடிக் கொண்டு, குப்புறப்படுத்த வேளையில், ரஞ்சனி வந்தாள். பக்கத்தில் அமர்ந்து, ஒத்தடமாகத் தலையை வருடுகிறபோது சுகமாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தக்கரம் என்னை மட்டும்தான் வருடி இருக்கிறதா? நினைவுகளின் அவல ஊர்வலம்.

அவன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

"ஹரி, உங்கள் கஷ்டம் எனக்குத் தெரியாதா? நானும் கேட்டு என்னத்துக்கு இன்னும் வலிக்கப் பண்ணுவானேன்னுதான் நீங்கள் டாக்டரைப் பார்த்து வந்தது பற்றி விவரம் கேட்கலை."

அவன் பதில் சொல்லவில்லை. வலி, அது ஒன்றைப் பற்றி மட்டும் இல்லை என்று



"உன் பார்ட்னரோட முட்டாள்தனத்தால நீ ஜெயிலுக்கு வந்திட்டியா, எப்படி?"

"கள்ள நோட்டு அடிக்கறதுக்கு அரசு அனுமதி கேட்டு மனுதாக்கல் செஞ்சான்!"

— நாகூர் ஆர். லோகநாதன்.

எப்படிச் சொல்வது?

"ஊரில் அப்பா, அம்மா எல்லாரும் சௌக்கியமா?"

"உம்."

"என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் நானும் வந்திருப்பேன் இல்லை?"

உன்னிடமிருந்துதானே விலகி ஓடினேன் என்று சொல்லத் துடிக்கிற நாக்கு. ஆனாலும் உதட்டை இறுக்கி அழுத்துகிற சக்தி எது என்று புரியவில்லை. அவன் பல்லைக் கடித்து, கண்ணை மூடிக் கொண்டான்.

"நீங்களா இப்படி இருக்கீங்க? ஒரு குழந்தைக்காக நான் மட்டுமா ஆசைப்பட்டேன்? உங்களுக்கும் உண்டுதானே? அது இல்லைங்கறபோது ரெண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் ஆறுதலா இல்லாமல் இப்படிக் காணாமல் போயிடறது எப்படி சரியாகும்? நான் கோவிச்சுக்கலை. ஆனால், நேத்து என்னவெல்லாம் ஆயிடுச்சு தெரியுமா? கிறுகிறுன்னு தலை சுத்தி, அப்படியே விழுந்துட்டேன். பேச்சு மூச்சு இல்லை. டாக்டர் வந்தது கூட ஸ்டீபன் சொல்லித்தான் தெரியும்."

"நான் பெங்களூருக்கு வந்தது தெரியும் இல்லையா?"

சட்டென்று போட்டு உடைத்தான். அவள் சற்று நேரம் அமைதியாக இருந்தாள். அவன் மறுபடி கேட்டதும், "தெரியும். ஆனால் ஏன் வந்தீங்க? என்னைப் பார்த்ததும் ஏன் அப்படி ஓடினீங்க?"

"அது இருக்கட்டும். ஆனால், நீ ஏன் இதை முதலில் கேட்கலை? என் வாயிலிருந்தே எல்லாத்தையும் பிடுங்கணும். இல்லையா? நானே என் அவமானங்களை வரிசைப்படுத்தி வைக்கணும் இல்லையா? அதுல ஒரு குரூர குஷி. பிய்த்துப் பிடுங்கற ராட்சஸ சந்தோஷம். அதானே?"

"வாட் டு யூ மீன்? உங்கள் லெட்டரைப்



ஆழங்களைத் தொடாமல் குரல் வளத்தையும் இனிமையையும் கொண்டே லாகவமாய் கோட்டை கட்டிக் கொண்டிருந்தாள் சௌதாமினி. எந்தப் பக்கம் பார்த்தாலும் பளபளத்த கண்ணாடிக் கோட்டை! ஒரு சின்ன அதிர்ச்சியில் அத்தனையும் நொறுங்கி விடாதோ?!

'கான்டினென்டல் பிரேக் ஃபஸ்ட்,' 'கான்வென்ட் கர்ல்ஸ் லிஸ்பிங் டாமில்...' என்றெல்லாம் விமர்சகர் கே.பி.கே. குட்டிப் பார்த்தார்... ரசிகர்கள் கோபக் கடிதங்களால் அவரைக் குதறி விட்டார்கள்!

அந்த ரசிகர்களின் மெத்தென்ற அரவணைப்பில், கண்ணாடிக் கோட்டை பத்திரமாக இருந்தது...

அடுத்த வாரம் ஆரம்பம்

டிசம்பர் கனவுகள்

காஞ்சனா பிரகாஷ்ராவ்

எழுதும்

மைக்ரோ மினி தொடர்..!

படிச்சதும் எனக்கு எதுவுமே புரியலை. வேறு ஒண்ணுமே ஞாபகம் இல்லை. இப்ப நீங்களே கேட்டதும்தான் எனக்குக் கேட்கணும்னு தோணறது. டெல் மி. எதுக்கு வந்தீங்க; என்னைப் பார்க்கவா? பின் ஏன் அப்படி ஓடிப் போகணும்?"

தெரியாமல்தான் கேட்கிறாளா? தெரிந்தே தெரியாததுபோல் நடிக்கிறாளா? தெரிந்ததைக் காட்டிக் கொள்ளாத சாமர்த்தியமா? முகத்தில் எதுவும் தெரியவில்லை.

"ஒரு நிமிஷம் அது நீங்கள்தானான்னு ஒரே குழப்பம். சட்டுனு கீழே இறங்கி, தேடிப் பார்த்தேன். எங்கே போனீங்கன்னு தெரியலை. மறுபடி மேலே வந்து ஸ்டீபனை எழுப்பி விஷயத்தைச் சொன்னேன். அவன் தூக்கம் தெளிஞ்சி எழுந்து வந்து ரிஸப்ஷனில் விசாரிச்ச போது நீங்கதான்; ஆனால் போயிட்டதாகச் சொன்னார்கள். ஒரே கவலை ஆயிடுத்து."

"எதுக்குக் கவலைப்படணும்? வந்துட்டேனென்னா?"

"வாட் டு யூ மீன்?"

எந்த விநாடியும் தான் வெடித்து விடக்கூடும் என்று அவனுக்குத் தோன்றியது. சிதறித் தூளாகலாம். அல்லது தெளிவு பிறந்து, பட்சி அகப்பட்ட வேட்டைக்காரன் போல் பாறை மேல் கால் நீட்டிப் படுத்து, களைப்பு நீங்கலாம்.

"பார் ரஞ்சனி! எனக்கு இதுக்கு மேலும் தாங்கலை. சொல்லிடறேன். குழந்தை பிறக்காதுங்கறது எனக்குப் பெரிய விஷயமாக இல்லை. என் கவலை அது பற்றி நிச்சயம் இல்லை."

"பின்?"

"என் கவலை உன்னைப் பற்றி. என் சந்தேகம், உனக்கும் ஸ்டீபனுக்கும் உள்ள நட்பு பற்றி. நட்புதானா அது, அல்லது அதற்கு மேல்..."

அவன் முடிக்கவில்லை. எழுந்து வந்து கொத்தாக அவன் சட்டையைப் பற்றித் தூக்கினாள் ரஞ்சனி. ஒரு கணம்தான். முகத்தில் வழிந்ததை அவள் துடைத்துக் கொண்டபோது, அவள் விழிகள் தீட்சண்யமாக ஜொலித்துக் கொண்டிருந்தது.

"ஸாரி. உங்களைப் புருஷனாக இல்லை, இனிமேல் மனுஷனாகக் கூட மதிக்க முடியாது."

சட்டென்று விடுவித்துக் கொண்டு வெளியேறினாள்.

அவன் பிரமை பிடித்தவன் போலக் கிடந்தான். வெகு நேரம். உணர்வு வந்து, எழுந்து ஹாலுக்குப் போய்ப் பார்த்தான். ரஞ்சனி அங்கு இல்லை. எங்கும் இல்லை.

(தொடரும்)

"பணி ஓய்வு பெற்ற
பின்பும் பணத்திற்காக
ஒருவர் மீதும் பாரமாக
இருப்பதில்லை."

—

ஆண்டிற்கு

11.75% என்றவாறு

ஒரு உறுதிப்படுத்தப்பட்ட வருவாய்
அனைத்து 5 ஆண்டுகளுக்கு.



இப்போது ஆண்டிற்கு 12.40% வருடாந்தர வருவாய் தேர்வுடன்!

யூடிஐ-ன்
மந்த்லி
இன்கம்
பிளான் 97(V)

யூடிஐ-ன் மந்த்லி இன்கம் பிளான் 97(V) ஒரு பாதுகாப்பான ஆதாயத்தை வழங்கும் முதலீடு ஆகும். இதன் பல்வேறு நன்மைகளை சற்று நோக்குங்கள்.

• **தேர்வுகள்**: மாதாந்தர வருவாய், வருடாந்தர வருவாய் மற்றும் க்யூமுலேடிவ் தேர்வுகள் • **மந்த்லி இன்கம் தேர்வு**: ஆண்டிற்கு 11.75% மாதாந்தரமாக அனைத்து 5 ஆண்டுகளுக்கு [illegible] 12.40%) [illegible] • **ஆன்யுவல் இன்கம் தேர்வு**: ஆண்டிற்கு 12.40% உறுதிப்படுத்தப்பட்ட வருடாந்தர வருவாய் அனைத்து 5 ஆண்டுகளுக்கு • **க்யூமுலேடிவ் தேர்வு**: ரூ. 10,000 [illegible] ரூ. 17,940 ஆகிறது • **காலவரை**: அனைத்து மூன்று தேர்வுகளுக்கும் 5 ஆண்டுகள் • **பாதுகாப்பு**: [illegible] • [illegible]: [illegible] 5 ஆண்டுகளுக்குப் [illegible] • **குறைந்தபட்ச முதலீடு**: ரூ. 10,000 [illegible] • **மூலதன மதிப்புயர்வு**: அனைத்து மூன்று தேர்வுகளுக்கும் [illegible] • **வரிச் சலுகைகள்**: வருமான வரிச்சட்டம் 1961 ன் பிரிவு 80L, 48 மற்றும் 112 களின் கீழ் [illegible] • **வரிக் கழிப்பு**: வருமான வரிச் சட்டம் 1961-ன் படி [illegible]

வருமான வரிச் சட்டம் 1961 பிரிவு
54EAவின் கீழ் மூலதன ஆதாய வரிச் சலுகையும் கிடைக்கும்

திட்டம் நடப்பிலிருக்கும்
17 நவம்பர் 1997 முதல்
31 டிசம்பர் 1997 வரை

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் வளமான நாளைக்கு

CWPL/UTI/TAM/ 13.11.97

[illegible]

[illegible] மந்த்லி இன்கம் பிளான் 97(V) [illegible]

[illegible] சென்னை போன்: [illegible] மதுரை போன்: [illegible] திருச்சி போன்: [illegible]
[illegible] சென்னை போன்: [illegible]

பிப்ரவரியில் ஒரு மியூசிக்



பக்கவாத்தியத்துக்கு யாரைப் போட? இந்த வருஷமாவது சீனியராக பிரமோஷன் கிடைக்குமா? விமர்சகரின் கடைக்கண் பார்வைக்கு உட்படுவோமா? போன்ற கவலைகளெல்லாம் இல்லாமல் ஆனந்தமாகப் பாடும் சீசன்! பிப்ரவரியில் பனிக் காலம் முடிந்து வெயில் ஆரம்பிப்பதற்குமுன் இருக்கிற சின்ன இடைவெளியை வரவேற்று, பறவைகள் நிகழ்த்தும் கச்சேரிகளைக் கேட்க, மீண்டுமொரு பிறவி எடுத்து வந்தாலென்ன என்றுகூடத் தோன்றும்!

பறவைகள் பாட்டென்றால் ஏதோ திரும்பத் திரும்ப 'கிக்கி கிக்கி' என்றோ 'குக்கூ குக்கூ' என்றோ கிளிப்பிள்ளைத்தனமாக ஒலி எழுப்புவதைக் குறிப்பிடவில்லை. இது நிஜமான பாட்டு. உலகிலுள்ள 9000 பறவை வகைகளுள் 4000 பாடக் கூடியவை. அவற்றிலும் சில நூறு வகைப் பறவைகளுக்கு விசேஷமான 'குரல் பெட்டி' உண்டு. இந்த வித்வான் குருவிகள் (true songsters) மரத்தின் உச்சாணிக் கிளை, டெலிபோன் கம்பம் என்று, உயர்ந்த 'மேடைகளை'த் தேர்ந்தெடுத்துக் கச்சேரியைத் தொடங்கினால் சில, நீண்ட நெடு நேரத்துக்கு ஓயாது.

பாடுபவை பெரும்பாலும் ஆண் பறவைகளே. இனப் பெருக்கத்துக்குப் பெட்டைகளைக் கவரவே அவை பாடுவதாக நாம் ரொமான்டிக் கற்பனை வேண்டுமானால் செய்து கொள்ளலாம். ஆனால் விஞ்ஞானிகள் மறுக்கிறார்கள். 'உச்சாணியில் உட்கார்ந்து பாடுவதே அந்தக் குறிப்பிட்ட வட்டாரத்துக்குச் சொந்தம் கொண்டாடத்தான்' என்கிறார்கள். 'இந்தப் பகுதியில் நான் கூடுகட்டி குடித்தனம் நடத்தப்போகிறேன்; மற்றவர்கள் இங்கே வந்து தொல்லை தர வேண்டாம்' என்ற எச்சரிக்கைதான்!

எவ்வளவு அழகான எச்சரிக்கை என்று நாம் வியக்கலாம்... ஆனால் இந்தப் பாட்டைக் கேட்டு வரும் பெண் குருவிகள் ஆணின் குரல் வளத்துக்கோ பாட்டுத் திறத்துக்கோ மயங்கி வருவதில்லை. பெட்டைகளைப் பொறுத்த வரை, பாடுகிற ஆண் நல்ல திடகாத்திரமான துணை; ஆரோக்கியமான குடும்பத்துக்கு உத்தரவாதம்; அவ்வளவுதான்! சில நேரங்களில் பெட்டைகளும் சேர்ந்து கொண்டு எசப்பாட்டுப் பாடுவதுண்டு. பந்தத்தை வலுப்படுத்தும் பாட்டு இது என்கிறார்கள்!

'கான்க்ரீட் காடுகளுக்கு மத்தியில் குருவிப் பாட்டை எங்கே கேட்பது...?' என்று சலித்துக் கொள்ளாமல் கொஞ்சம் காது கொடுத்தால் கீழ்க்கலவட வித்தகர்களின் கான மழையில் திளைக்கலாம்.

● மாக்பை ராபின் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கறுப்பும் வெளுப்புமான... குண்டுக் கரிச்சான். இனிமையும் வித்வத்தும் சேர்ந்த புல்லாங்குழல் வித்வானின் வாசிப்பை (சகாங்கெல்லாம் இதனிடம் பிச்சை வாங்கணும் சார்!) தன் துக்கிளியூண்டு தொண்டையிலிருந்து வெளிப்படுத்த வல்லது இது. பாரம்பரியமிக்க 'இசைக் குடும்பத்தை'ச் சேர்ந்தது - இதன் நாட்டுப்புறச் சகோதரக் குருவி ஷாமா, இந்தியாவிலேயே தலை சிறந்த பாட்டுக்காரன்!

● சிவப்பு மீசை புல்புல் (கொண்டை குலாத்தி என்பது தமிழ்ப் பெயர்). ஏதோ குல்லாய் போட்ட பாண்டு வாத்தியக்காரரைப் போல் தோற்றம். பாடினால் கீழ் 'ஸ'வி லிருந்து மேல் 'ச' வரைக்கும் அனாயாசமாகத் தொட்டுத் தொட்டுத் திரும்பும்! போட்டி வைத்தால் பாலமுரளி தோற்றாலும் தோற்றுவிடுவார்!

● இதயத்தைக் கரைசலாக்கிக் கொட்டியது போல் பாடவல்லது. 'ஆவாரா' குருவி. ஆவாரா என்றால் பரதேசி என்று அர்த்தம். கண்களை



உருட்டி, கொண்டையைச் சிலுப்பி இது பாடும்போது தெரிகிற தன்னை மறந்த லயமிருக்கிறதே... குருநாதா! நெய்வேலி சந்தானகோபாலனல்லவா அதைப் பார்க்க வேண்டும்!

● கன்னங்கரேலென்று கரித்துண்டுக்கு வால் முளைத்தது போல் ஒரு குருவி - காக்காவுக்குத் தூரத்துச் சொந்தமாம் - கரிச்சான் என்றே பெயர். 'கீச கீசென்று ஆனைச்சாத்தன்' - திருப்பாவையில் ஆண்டாள் குறிப்பிடுவது இதைத்தான். குரல் என்னவோ உன்னி கிருஷ்ணன் மாதிரி சர்க்கரைக் கரைசல்! சொந்தக் குரலில் மட்டுமின்றி சுற்றுவட்டார சகோதரப் பறவைகளைப் போல் குரல் மாற்றியும் பாடி ஏமாற்றுகிறது இந்த வித்தைக்காரன்.

சீசன்!

என்னதான் சபாவின் ஏ.ஸி. அரங்கில் உட்கார்ந்து கேட்டாலும், ஏகாந்தமாய் ஒரு கோவிலிலோ குளக்கரையிலோ நம் ஆதர்சப் பாடகரின் பாட்டைக் கேட்பது போல் வருமா...? நகரத்தை விட்டு நாட்டுப்புறத்துக்குப் போய், வயல்காட்டில் நின்று வானம்பாடி பாடக் கேட்பது அப்படிப்பட்ட ஏகாந்த அனுபவம்தான். அமைதியையும் மஞ்சள் வெயிலையும் கிழித்துக் கொண்டு வானத்திலிருந்து பொழியும் அந்த சுநாதம்! அண்ணாந்து பார்த்தால் கையகலப் பட்டாம்பூச்சி போல் தவிட்டு நிறத்தில் வட்டமடித்துக் கொண்டிருக்கும் வானம்பாடி (Skylark).

அடடா! இந்த சின்ன ஜீவன் வெடித்து சங்கீதமாய்ச் சிதறிவிடுமோ என்று நாம் வியக்கிற நேரத்தில், திடீரென்று இசை நின்று போகும். தவிட்டுச் செண்டு 'விர்'ரென்று கீழிறங்கி மண்கட்டிகளிடையே மறையும். பிரமிப்பிலிருந்து விடுபட்டு நாம் மானசீகமாய்க் கைதட்டி மகிழ்வதற்குள் மீண்டும் விண் நோக்கிப் பறக்கும் அந்த வானம்பாடி.. மீண்டும் நிறைந்த நிறைந்த சுநாதத்தில் நம்மை நனைக்கும்.

மலைக்காடுகளில் அனுபவம் சற்று வேறுபடும். அடர்ந்த இருண்ட மரக்கிளைகளிலிருந்து, அமைதியை அழகாகக் கலைத்து வெளிப்படும் குரலை மட்டுமே கேட்கலாம். குரலுக்குரிய பறவைகள் புதுமணப்பெண் போல் (அட அந்தக் காலத்துப் பொண்ணுங்க) பதுங்கிக் கிடக்கும்.

சில நேரங்களில் பாட்டொன்றும் பிரமாதமாய் இராது. ஆனால் பாடுகிற ஜீவன்களின் துறுதுறுப்பும் உயிர்த்துடிப்பும் அதற்கொரு அந்தஸ்து கொடுத்து உயர்த்திவிடும். வேறு சில சமயங்களில், பாட்டென்ற பெயரில் சில 'வீ சானல் காட்டுக் கத்தல்களைத் தோற்கடிக்கும் குருவிகளும் உண்டு!

எந்த வகைப் பறவையானாலும் சரி... கூடு கட்ட ஆரம்பிக்கும் வரைதான் கூப்பாடெல்லாம். அப்புறம் குச்சி தேடி, வீடமைத்து, குஞ்சு பொரிக்க உதவி, உணவு வேட்டையாடி... சம்சார சாகரத்தில் மூழ்கிவிடுகின்றன பறவைகள்.

கலையாக எண்ணி, மானுடத்தை மகிழ்விக்கப் பறவைகள் பாடுவதில்லை. ஆனால் இயற்கை நிகழ்த்தும் இந்த இசைக் கச்சேரிகளை ரசனையுடன் கவனித்துக் கேட்டால் மனச் சாந்தியையும் ஆன்ம உயர்வையும் பெறுவது சாத்தியம்தான். ○

நன்றி : 'ஹிந்து'வில் ரஞ்சித்லால் எழுதிய கட்டுரை.

தமிழ் வடிவம் : **ஸாவேரி**



36

எட்டும் மூன்றும் ஒன்றுமாகி என்று பன்னிரண்டு அக்ஷரங்களையுடைய மந்திரத்தைச் சொன்னேன். ஓம் நமோ பகவதே வாசுதேவாய என்பதே அந்த மந்திரம். ஓம்-ஒன்று; நம:-இரண்டு; பகவதே-நான்கு; வாசுதேவாய-ஐந்து என்று மொத்தம் பன்னிரண்டு அக்ஷரங்கள்.

வாஸுதேவா என்று சொல்லும்படியான திருநாமத்தில் பரமாத்மா உறைகிறான்.

வாஸு: தேவ:- வாஸுதேவ: சர்வ பூதங்களிலேயும் சர்வ சராசரங்களிலேயும் அவன் இருப்பதினாலே அவனுக்கு வாஸுதேவன் என்று பெயர். ஆக, வாஸுதேவ சப்தத்தினாலே விஷ்ணு: என்ற சப்தத்தின் பொருள் அல்லவா கிடைக்கிறது?

இந்த வாஸுதேவ மந்திரமானது உயர்ந்த ஞானியான நாரத மஹரிஷியால் சின்னக் குழந்தை-நான்கு வயதுக் குழந்தையான த்ருவனுக்கு உபதேசிக்கப்பட்டது. இது எப்பேர்ப்பட்ட மந்திரம் என்றால், இதனை ஐந்தே ஐந்து மாதங்களுக்கு உச்சாரணம் செய்து, அந்த பகவானையே எதிரிலே கொண்டு நிறுத்திவிட்டான் த்ருவன்.

எதிரே கருடாரூடனாய்க் காட்சியளிக்கிறான் பகவான். தனது கையில் இருந்த சங்கத்தி



றையொன்றுமில்லை

னால் அந்தக் குழந்தையின் கன்னத்தை இலேசாக அப்படித் தொட்டான் பரமாத்மா. மஹா ஞானியாகப் போய்விட்டது அந்தக் குழந்தை!

பன்னிரண்டு அக்ஷரங்களுடன் கூடிய அந்த மந்திரம் அந்வய கிரமத்தினாலும் வியதிரேக கிரமத்தினாலும் பகவானின் பெருமையைச் சொல்லக் கூடியது.

அந்வயம் என்றால்...? தர்க்க சாஸ்திர வகுப்பிலே போய் உட்கார்ந்ததுமே அந்வய வியாப்தி என்பதைச் சொல்லித் தருவார்கள்.

'புகை இருக்கும் இடத்தில் எல்லாம் நெருப்பு இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது-' (இது அந்வயம்) 'நெருப்பு இல்லை; அதனால் அந்த இடத்தில் புகை இல்லை...' என்றும் சொல்ல முடியாது- (இது வியதிரேகம்)

புகை இல்லாத இடங்களிலும் கொழுந்தாக நெருப்பு எரியக்கூடும். இல்லையா...

இதன்படி, சமஸ்த வஸ்துக்களும் இன்றைய தினம் நிலைத்து நிற்கின்றன என்று சொன்னால், சர்வ சராசரங்களுக்குள்ளேயும் பரமாத்மா இருக்கிறான். சமஸ்த வஸ்துக்களும் இப்போது இருக்கிற இடத்தில் இல்லாமற்போனாலும் இவை அத்தனையையும் தன்னுள்ளே அடக்கி வைத்துக் காக்கிறான் பரமாத்மா.



வியதிரேக பாவத்திலே- இவையெல்லாம் இல்லாமல் போகும் நிலை என்பது பிரளயம்; அந்வய பாவத்தில் அவை இருக்கின்றனவென்றால் அது சிருஷ்டிக் கிரமம்.

இவ்வாறு இரு நிலைகளிலும் பகவான் சர்வத்தையும் தன்னுள் அடக்கிக் காப்பவனானதாலே 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்ற மந்திரத்துக்குப் பாத்திரனாகிறான்.

வாசுதேவ சப்தத்துக்கு முன்பு பகவத் சப்தம் வருகிறது. 'பகவான்' என்று ஏன் சொல்கிறோம்?... நல்ல குணமுடையவரை குணவான் என்று சொல்கிறோம். தனமுடையவரை, பொருளுடையவரை தனவான் என்று சொல்கிறோம். அதே மாதிரி 'பகம்' உடையவரை பகவான் என்று சொல்கிறோம்.

பகம் என்றால்...? ஆறு விஷயங்களுக்கு 'பகம்' என்று பெயர். இந்த ஆறும் இருந்தால் பகவான்.

அந்த ஆறு விஷயங்கள் எவை? ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி; தேஜ: என்ற ஆறு குணங்கள்.

பகவானுக்கு நல்ல ஞானம் இருக்கிறது. எல்லாவற்றையும் தானிருக்கிற இடத்திலிருந்தே உணர்கிறான் பரமாத்மா. ஞானத்தினால் சர்வத்தையும் அறிகிறான்.

இப்போது நாம் எதையாவது தெரிந்து கொள்ள வேண்டுமானால் நமது கண்களைக் கொண்டுதான் தெரிந்து கொள்ள வேண்டும். கண்களின் சகாயம் இல்லாமல் விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் முக்த தசையிலே மோக்ஷத்தை அடைந்து விட்டோமானால் இந்தக் கண் தேவையில்லை! ஞானத்துக்கே அப்படியே நேராகத் தெரியும்; ஞானத்துக்கே எல்லாம் விஷயமாகும். (புரியும்)- அப்படியொரு நிலை முக்த தசையிலே ஏற்படுகிறது.

பகவானுக்கு நம்மைப் போன்ற இந்த கர்மாதீனமான நிலை இல்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

யானதனாலே அவன் எப்போதும் உயர்ந்த ரீதியிலே சிறந்த ஞானமுடையவனாய் இருக்கிறான்.

அடுத்தது பலம்– எல்லாவற்றையும் தாங்கும்படியான பலம்! ஒருத்தர் பெரிய மூட்டையைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறார். அதை எப்போதுடாப்பா கீழே இறக்கி வைக்கப் போகிறோம் என்று தோன்றும் அவருக்கு. ஏனென்றால் பளு அழுத்துகிறது அவரை! ஆனால், பகவான் இந்த உலகத்தையெல்லாம் தாங்குகிறான். இதை வேதத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். அந்தக் காலத்தில் ரிஷிகள் எல்லாருமாக உட்கார்ந்து கொண்டு பெரிதாக சர்ச்சை நடந்ததாம். விச்வாமித்ரர் உட்கார்ந்திருக்கிறார். மார்க்கண்டேயர், புலஸ்தியர், வசிஷ்டர், இப்படிப் பல மஹரிஷிகள், பெரிய பெரிய மஹரிஷிகள் எல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களிலே ஸ்ரீவத்ஸ மஹரிஷியும் ஒருவர். இந்த உலகம் யாரால் தாங்கப்படுகிறது? என்று ஒரு கேள்வி வந்தது அப்போது.

பெரிய மஹரிஷிகள் எல்லோரும் மௌனமாய்ச் சிந்தித்தார்கள். ஸ்ரீவத்ஸ மஹரிஷி எழுந்தார்.


''இந்த உலகத்தைத் தாங்குபவர் யார்? என்றால் ஏன் பதில் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள். உடனடியாகச் சொல்லிவிட வேண்டியதுதானே. விஷ்ணுவினால் தரிக்கப்படுகிறது இந்த உலகம்.

''சமஸ்தத்தையும் தாங்கக் கூடியவன் அந்த விஷ்ணுவே'' என்பதை தைரியமாய் அவர் எடுத்துச் சொன்னதும் எல்லா மஹரிஷிகளும் அதை ஆமோதித்தார்கள்.

இன்றைக்கும் பாராயணம் பண்ணும் போது ஸ்ரீவத்ஸ மஹரிஷியின் அந்த வாக்கை மந்திரமாக ஜபிக்கிறோம்.

''இது, லேட்டஸ்ட் மாடல் கம்ப்யூட்டர் டிஸைன்ட் தம்பூரா... சுருதி பிசகினாலும் ஆட்டோமாடிக்கா அட்ஜஸ்ட் பண்ணிக்கும்... உங்களுக்காகவே ஸ்பெஷலா தயாரிச்சிருக்கோம்...''

– ஸஹானா



அண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் அந்த பகவான் தாங்குகிறான் என்றால், இவ்வளவு பளுவான பளுவைத் தாங்குகிறானே.. அந்த பளுவாலே கிலேசம்-கஷ்டம் பகவானுக்கு வராதா? என்றால், வராது! இந்த பளுவை அவன் தாங்குவது ஏதோ மூட்டை சுமக்கிற மாதிரி இல்லை. சங்கல்ப பலத்தினாலே அதைத் தாங்குகிறான். 'இது இப்படி இருக்க வேண்டும்' என்று சொன்னால் சங்கல்ப பலத்தினால் அது இருக்கும். அவனுடைய இச்சையினாலேயும் எண்ணத்தினாலேயும் எல்லாவற்றையும் தாங்குகிறான் அவன். அதுதான் அவனுடைய பலம். அவனுடைய நிறைவினாலே, 'இது இப்படி இருக்க வேண்டும்' என்று அவன் நினைத்தாலே அது இருக்கும்.

அடுத்தது ஐச்வர்யம்... நித்ய விபூதியான வைகுண்டம், லீலா விபூதியான இந்த உலகம், எல்லாமே அவனுடைய ஐச்வர்யம். அவனுடையது அல்லாதது என்று எதுவுமே இல்லை. வைகுண்டம், மற்றைய லோகங்கள் எல்லாமே அவனுடையவை.

வீர்யம் என்றால் தான் எடுத்துக் கொண்ட காரியத்தைப் பூரணமாய் சாதிக்கும்படியான தன்மை. அதுவும் பகவானிடத்திலே பூரணமாய் இருக்கிறது.

தேஜஸ் என்றால் உயர்ந்த காந்தி. பகவானுடைய திவ்ய திருமேனியிலிருந்து வரக்கூடிய தேஜஸ் பற்றிச் சொல்கிறார் நம்மாழ்வார்:

முடிச்சோதியால் உனது முகச்சோதி
மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீநின்ற தாமரையாய்
அலர்ந்ததுவோ.

நம்மாழ்வார் கேட்கிறார் பகவானை: 'உன் திருமுக மண்டலத்திலே இருக்கிற அந்தப் பிரகாசமானது உன் திருமுடி மேல் ஏறிற்றா?'

பகவானுடைய திருமுடி இருக்கிறது பாருங்கள்.. அது ஏகமாய்ப் பிரகாசிக்கிறதாம். அந்தப் பிரகாசம் எங்கேயிருந்து வந்தது என்றால் அவனுடைய திருமுக மண்டலத்திலேயிருந்து...!

'உன்னுடைய திருவடியிலே இருக்கிற காந்தி, உன் திருவடிக்குக் கீழே, திருவடியைத் தாங்கி நிற்கிற தாமரை புஷ்பமாக மலர்ந்ததோ...? நீதான் சொல்ல வேண்டும்... –'திருமாலே கட்டுரையே'– என்று அவனிடமே கேட்கிறார்!

ஆகையினாலே, அந்த பகவானுடைய திருமேனி சம்பந்தத்தினால் எல்லாமே நிறம் பெறுகிறது: பிரகாசத்தை அடைகிறது. அப்பேர்ப்பட்ட தேஜஸ் அவனுடையது.

உபநிஷத் சொல்கிறது: பகவானிருக்கிற

இடத்திலே சூரியனுக்குப் பிரகாசம் கிடையாது; சந்திரனுக்கு வேலை கிடையாது; வித்யுத் என்று சொல்லக் கூடிய மின்னலுக்கு வேலையில்லை; நட்சத்திரங்களுக்கு அங்கே பிரகாசமில்லை; அக்னிக்கு வேலையில்லை.

மின்னலோ, அக்னியோ, சந்திரனோ, சூரியனோ... இவையெல்லாம் பிரகாசிக்கின்றனவென்றால் அவனுடைய காந்தியினாலேதான் எல்லாமே பிரகாசிக்கின்றன! ஆகவே ஜோதியாய், ஒளிப் பிழம்பாய் பகவான் பிரகாசிக்கிறான் என்று ஆகிறது.

அந்த ஒளிப்பிழம்பை நாம் உபாஸனை பண்ண வேண்டும். அப்படி ஒளிப்பிழம்பாய் அவன் இருப்பதாலே அவனுடைய தேஜஸ் விவரிக்க முடியாததாயிருக்கிறது.



''என்னோட நாதஸ்வர கச்சேரியைக் கேட்டு இப்படி எமோஷனலாயி அழறீங்களே...''

''வேறொண்ணுமில்லே... என் கல்யாணத்துக்கு நீங்க வாசிச்சது ஞாபகம் வந்துடுத்து!''

— பைரவி

ஞான, பல, வீர்ய, ஐச்வர்ய, தேஜஸ்... ஆயிற்று. அப்புறம் சக்தி- அந்த எம்பெருமானுடைய சக்தி இருக்கிறதே, சமஸ்தத்துக்குள்ளேயும் ஊடுருவியிருக்கும்படியான சக்தி அது. அதுதான் விஷ்ணு!

நம் ஆத்மா இருக்கிறதே, அது மிக மிகத் துளியானது. உபநிஷத் சொல்கிறது. நமது ஆத்மா மிக மிகச் சிறியது. அது இருக்கிற காலமோ 'விபு'-! அதாவது அளவிடமுடியாதது. அது எங்கும் பரவியிருக்கிறது; ஏராளமான ஞானத்தையுடையது. விசேஷமாக எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு பேசுகிறது அது. இன்னும் உயர்ந்த நிலையிலே ஏகப்பட்ட விஷயத்தை கிரஹிக்கிறது. ஆனால் அதன் ஸ்வரூபமோ அணு ஸ்வரூபம். அதற்காக மைக்ராஸ்கோப் கொண்டு பார்த்துவிட முடியுமா என்றால் முடியாது!

அதைக் கத்தியினாலே வெட்ட முடியாது.
நெருப்பிலே கொளுத்த முடியாது
ஜலத்திலே நனைக்க முடியாது
அதை உலர்த்த முடியாது!
அவ்வளவு நுண்ணியது அது..!

அகப்படாத வஸ்துக்கள் எத்தனையோ நம்மைச் சுற்றி இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் எத்தனையோ கண்ணுக்குத் தெரியாத சின்னச் சின்ன அணுப்பிராண வஸ்துக்கள் எல்லாம் இப்படியும் அப்படியுமாக சஞ்சாரம் பண்ணிக் கொண்டேயிருக்கின்றன. ஆனால் நாம் பார்க்கும்போது கண்ணுக்கு அவை தெரிவதில்லை. இந்த இந்த்ரியத்துக்கு அதைப் பார்க்கும்படியான சக்தி இல்லை. ஆனால் அந்த அணுக்கள் சுற்றுவது என்னவோ வாஸ்தவம்.

பழங்கால ஓட்டுக் கூரை வீடுகளில் மேலே கண்ணாடியிருக்கும். அதன் வழியே சூர்ய ரச்மி விழுகிறபோது அணுவான வஸ்துக்கள் இப்படியும் அப்படியும் சஞ்சாரம் பண்ணுவது அந்த ஒளிக் கற்றையிலே தெரியும்.

ஆனால் சூர்ய ஒளி விழுகிற இடத்திலே மட்டும்தானா அந்த அணு வஸ்துக்கள் சுற்றுகின்றன? எல்லா இடத்திலேயும் அவை சுற்றிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் நம்மால் பார்க்க முடிவதில்லை. அந்த அணுக்களைக் காட்டிலும் அணுவானது ஆத்மா என்னும்போது இந்தக் கண்களால் நாம் எப்படி அதைப் பார்க்க முடியும்?

கண்ணால் ஆத்மாவைப் பார்க்க முடியாது. ஆனால் மனத்தினாலே, ஹ்ருதயத்தினாலே பார்க்க முடியும். நாராயண உபநிஷத் அதைத்தான் சொல்கிறது. கண்ணுக்கு அகப்படாத ஆத்மா ஹ்ருதயத்தில், மனத்தினால் அறியப்பட வேண்டிய வஸ்து, என்கிறது.

அப்படிப்பட்ட அணுவின் அணுவாய் இருப்பவனும் அவனே, -விஷ்ணுவே, மஹதோ மஹியனாய்- மகத்தைக் காட்டிலும் மகத்தாக- இருப்பவனும் அவனே.

எப்படி அவனுடைய ஸ்வரூபமானது நுண்ணியதாகவும் விபுவாகவும் இருக்கிறதோ, அப்படியே அவனுடைய குணம், பெருமை, எல்லாமும் நம்மால் கிரஹிக்க முடியாததாக நுண்ணியதாய் இருக்கிறது; அதே சமயத்தில் பெரியதாகவும் இருக்கிறது. அதையும் நாம் முழுமையாய் கிரஹிக்க முடியாது. ஆகையினால் இந்த ஆறு குணங்கள்- ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ்- இந்த ஆறுக்கும் பகத் என்று பெயர். இவற்றை உடையவன் பகவான்.

'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்று இந்த ஆறையும் உடையவனை, எல்லா வஸ்துக்களிலும், உறைபவனை, வஸுதேவனுடைய தவப்புதல்வனான எம்பெருமானை அழைக்கிறோம்.

(தொடரும்)

புல்லாங்குழல் மாஸ்ட்ரோ ஹரி பிரசாத் சௌராசியா ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, சென்னையில் ஒரு இசை மழை பொழிந்தார். நாரத கான சபா ஹாலில் ரசிகர்கள் வெள்ளம். இரவு கச்சேரியை முடித்துக் கொண்டு, தங்கியிருந்த சோழா ஓட்டலுக்கு காரில் போகிறபோதே பேட்டி தொடங்கியது. ஓட்டல் அறையிலும் பேட்டி தொடர்ந்தது. ஏதோ நெடுநாள் பரிச்சயமான ஒருவருடன் பேசுவதுபோல, சரளமான ஆங்கிலத்தில் ஜாலியாய்ப் பேசினார் சௌராசியா.



"உங்களுடைய பின்னணி, இசையுடன் தொடர்பு உடைய ஒன்றா?"

"எங்கள் குடும்பத்தில், என் அப்பா உட்பட பலர் மல்யுத்த வீரர்கள். என் தந்தையார் உள்ளூர் சாம்பியன். நான் கூட வெகு காலத்துக்கு மல்யுத்தத்தை என் ஹாபியாக வைத்திருந்தேன்!"

"மல்யுத்தக் குடும்பத்திலிருந்து, இந்த இசை ஞானி உருவானது எப்படி?"

"அதற்குக் காரணம் என் அம்மாதான். சிறு குழந்தையாக நான் இருந்தபோதே என்னைத் தன்னுடைய மடியிலே போட்டுக் கொண்டு, ராகங்களை அடையாளம் காட்டினார். அதன் பின் என்னை இந்துஸ்தானி இசை கற்றுக் கொள்ள வைத்தார்."

"இந்துஸ்தானி பாடகர், புல்லாங்குழல் கலைஞர் ஆனது எப்படி?"

"புல்லாங்குழல், ஒரு தெய்வீகமான இசைக் கருவி. இதிகாச காலத்திலிருந்தே கையாளப்படுகிற இனிய இசைக் கருவி. பகவான் கிருஷ்ணர் என்றவுடன் புல்லாங்குழலும், புல்லாங்குழல் என்றதும் ஸ்ரீகிருஷ்ணரும்தானே நினைவுக்கு வருகிறார்கள்? தவிர, சிறுவயதில் மிக லகுவாக கையாளக்கூடிய இசைக் கருவி புல்லாங்குழல்தானே? எனவே புல்லாங்குழல் என்னைக் கவர, நான் புல்லாங்குழல் கற்றுக் கொண்டேன்."

"முதல் கச்சேரி எப்போது?"

"என் ஒன்பதாவது வயதில். அலகாபாத்தில் நடந்த ஓர் இசை விழாவில், இடையில் பதினைந்து நிமிடத்துக்கு வாசிக்க எனக்கு வாய்ப்பு கொடுத்தார்கள். இப்போது தினம் கச்சேரி செய்கிறேன். இன்றைக்கு சென்னை. நேற்று டெல்லி. நாளைக்கு கல்கத்தாவில் கச்சேரி...



இந்தியாவில் மட்டுமின்றி பல வெளிநாடுகளிலும் ஆயிரக் கணக்கான நிகழ்ச்சிகள் கொடுத்து விட்டேன்."

"குரு யார்?"

"ஆரம்ப காலத்திலிருந்து பலரிடம் கற்றுக் கொண்டது உண்டு என்றாலும், இன்னும் நான் அன்ன பூர்ணா தேவி என்கிற அம்மையாரிடம் சீடனாக இருந்து கற்றுக் கொள்ளுகிறேன். இத்தனைக்கும் அவர் புல்லாங்குழல் வித்வான் இல்லை. 'சுர் பகர்' என்கிற இசைக் கருவி வாசிப்பவர். புல்லாங்குழல் வாசிக்க ஆரம்பித்து பத்து பன்னிரண்டு வருஷங்கள் கழித்துத்தான் அவரிடம் போனேன். அவர், ஆரம்பத்திலிருந்து கற்றுக் கொள்ளத் தயார் என்றால், சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கூறிவிட்டார். பத்து வருட அனுபவத்துக்குப் பின், ஆரம்பத்திலிருந்து கற்றுக் கொள்ளுவது எப்படி சாத்தியம்? சரி! இதுவரை வலது பக்கமாய் வாசித்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா? இனிமேல் இடது புறம் வாசிக்கக் கற்றுக் கொள்! கற்றுத் தருகிறேன்! என்றார். சம்மதித்தேன். இடதுபுறம் புல்லாங்குழலில் அட்சராப்பியாசம் பயின்றேன். இன்றைக்கும் இடது கைப்பழக்கம்தான்!



பாக்ஸிங் வீரர் செளராஸியா!

''முழுநேர இசைக் கலைஞரானது எப்படி?''

''அது என் முடிவில்லை. ஆண்டவன் நிகழ்த்தியது. உ.பி. அரசாங்கத்தில் நாலு வருஷம் ஸ்டெனோகிராபராய் வேலை பார்த்திருக்கிறேன் நான் என்றால் நீங்கள் நம்புவதற்குத் தயங்குவீர்கள். அதன்பின், அகில இந்திய வானொலியில் சேர்ந்து பணியாற்றினேன். ஒரு கட்டத்தில் அதையும் உதறிவிட்டு முழுநேர இசைக் கலைஞன் ஆனேன்.''

''மறக்க முடியாத அனுபவம்?''

''ஏராளம். உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். பாரிஸ் நகரில் ஒரு டீ.வி. லைவ் நிகழ்ச்சி. வாசித்துக் கொண்டேயிருக்கும்போது திடீரென புல்லாங்குழலில் விரிசல். அது இனி உபயோகப்படாது. கையில் வேறு புல்லாங்குழலும் இல்லை! என்ன செய்ய? ஆடியன்ஸிடம் நிலைமையை எடுத்துக் கூறி மன்னிப்புக் கோரிவிட்டு இந்துஸ்தானி இசை பாட ஆரம்பித்தேன்! நான் கற்றுக் கொண்ட வாய்ப்பாட்டு அப்போது உதவியாக இருந்தது!

''தென்னிந்திய புல்லாங்குழல் கலைஞர்களுடன் உங்களுக்குப் பரிச்சயம் உண்டா?''

''என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? உங்கள் ஊர் மாலி என் நெருங்கிய நண்பர். ஒருவருக்கொருவர் மியூசிகல் அட்மிரேஷன் உண்டு. தவிர, ரமணி, லால்குடி, பாலமுரளி கிருஷ்ணா, உமையாள்புரம் சிவராமன், எம்.எஸ். கோபால கிருஷ்ணன் என்று பல தென்னிந்திய வித்வான்களுடன் சேர்ந்து புரோகிராம்கள் அளித்திருக்கிறேன்.''

''நீங்கள் சினிமாக்களுக்கு இசையமைத்திருக்கிறீர்களே! அந்த சமயங்களில், நீங்கள் காம்ப்ரமைஸ் செய்து கொள்ள வேண்டி இருந்ததா?''

''இல்லை... அப்படியெல்லாம் இல்லவே இல்லை. நான் சினிமாவின் கதையை முழுமையாய்க் கேட்காமல், இசையமைக்க ஒப்புக்கொள்ளவே மாட்டேன். அதில் தரமான, இனிய இசை வழங்க ஸ்கோப் உள்ளதா என்று பார்ப்பேன். இல்லையெனில், அதற்கேற்ப கதையை, காட்சியமைப்பை மாற்றும்படிச் சொல்லிவிடுவேன். அதன்பின் சிட்சுவேஷனுக்கேற்ப இசையமைப்பேன். கிளாஸிக் வகை தவிர, மாஸ் அப்பீல் ஆகும்படியான டியூன்கள் தேவைப்பட்டால், கிராமிய, நாடோடிப் பாடல்களை நாடிப் போய் விடுவேன். எனவே காம்ப்ரமைஸ் என்ற பேச்சுக்கே இடமில்லை.''

''உங்கள் கையெழுத்தைக் கூட புல்லாங்குழல் போலப்போடுவதன் காரணம் என்ன?''

''ஆட்டோகிராப் வாங்குகிறவர்களின் சௌகரியத்துக்காகத்தான். என்னிடம் ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டுபோன சிறிது காலத்துக்குள்ளாகவே யாருடைய கையெழுத்து எது என்று குழம்பிப்போய் விடுகிறார்கள். எனவே, நான் அதுபோல குழப்பம் வராமல் இருக்க கையெழுத்துப் போடும்போது அதையொட்டி, கீழே ஒரு புல்லாங்குழலையும் வரைந்து விடுகிறேன்!''

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

வண்ணப்படங்கள்: **யோகா**

எம். சந்திரசேகரனைச் சந்தியுங்கள். வெளேரென்று ஆளை அடிக்கிற நிறம். அசத்தலான சிரிப்பு. ஆத்மார்த்தமான பேச்சு. மிக உற்சாகி. நாற்பத்தெட்டு வருஷம் சர்வீஸ் போட்ட இந்த வயலினிஸ்ட் வாசிக்காத வித்வானில்லை. ஏறாத மேடையில்லை. வாங்காத விருது இல்லை. ஸோலோ வாசிக்கிறவர்களுக்கு இணையாகப் பக்கவாத்தியர்களாலும் பேரும் புகழும் வாங்க முடியும் என்று நிரூபித்த வித்தகர்.

"பிறந்து, ரெண்டு வயசுலே ரெண்டு கண்ணும் தெரியாமப் போயிடுத்து. என்னமோ காரணம். எங்கம்மா அசரலை. உட்கார வெச்சு ஏழு வயசுலே வயலின் சொல்லிக் கொடுக்க ஆரம்பிச்சா. அம்மாதான் (சாருபாலா மோகன்) என் குரு. பதினோரு வயசுலே கச்சேரி பண்ண ஆரம்பிச்சுட்டேன்!"



அன்றைய மாலி தொடங்கி, இன்றைய சங்கரநாராயணன், சேஷகோபாலன் வரை எத்தனையோ மேதைகளின் கச்சேரிகளை களைகட்டச் செய்துகொண்டிருக்கும் சந்திரசேகரனின் வெற்றிக்கு நுணுக்கமான ஒரு காரணம் உண்டு. அவரது வாசிப்பில் ஸ்வரங்களைத் தனியே கேட்க முடியாது. பாடல் வரிகளே ஒலிக்கும். யாரோ பாடுவது போலவே இருக்கும்! பெரிய வித்வான்கள், இன்னமும் விடாமல் 'சந்துருதான் வேணும்' என்று அடம்பிடிப்பதன் காரணம் இதுதான்.

"அதைச் சொல்றேளா? நான் கத்துண்ட விதமே அப்படித்தான். வாத்தியம் எல்லாமே ஸ்வரம் சார்ந்த விஷயம்தான்னாலும் எங்கம்மா எனக்குப் பாட்டாத்தான் கத்துக் கொடுத்தா. நானே கூட ஸாஹித்யத்தைப் பாடிண்டேதான் வாசிப்பேன். ஆரம்பத்துல அது கொஞ்சம் கஷ்டம் தான்னாலும் பழகினா வந்துடும். பக்கவாத்தியத்துல முக்கியமான விஷயமே, பாடறவா 'ரூட்'டை விட்டு விலகாம, பாட்டை அடி பிடிச்சிண்டே போறதுதான். என் ஸ்டூடண்ஸ் எல்லாரும் கூட இப்ப இதே மெத்தட்தான் ஃபாலோ பண்றா. பாடித்தான் ஆகணும்னு விடாப்பிடியா நிப்பேன். அவாளுக்கு வேற வழி?"

பாட்டைத் தாண்டி, கலைஞர்களை மேடையில் கூர்ந்து கவனிக்கிறவர்களுக்கு இது தெரியும். சந்திரசேகரனுக்குக் குஷி வந்துவிட்டால் எப்படி வாசிப்பார் என்பது. ஒரு நளினகாந்தி அல்லது நடபைரவியை, பாடுபவர் சற்றே துலக்கித் தோரணம் கட்டட்டும்... மனுஷர் உற்சாகம் விண்ணைத் தொட்டுவிடும். கருவியை ஒரு குழந்தையாக்கி மடியில் போட்டு, தாலாட்டி, சீராட்டி, சீவி சிங்காரித்து அழகிப் போட்டிக்கு நிறுத்துவது போல அப்படியொரு ஒப்பனை செய்து கிரங்க அடித்து விடுவார்.

"வாசிக்கிறவாளுக்கு குஷி வர்றது ரொம்ப முக்கியமான விஷயம்னு நினைக்கறேன். கலைஞனுக்கு வித்தையைக் காட்ட, மனசு சந்தோஷமா இருக்க வேண்டியது ரொம்ப அவசியம். கவலை, பிக்கல் பிடுங்கல் இல்லாமல், சூழ்நிலையிலே ஒரு குதூகலம் நிறைஞ்சு இருக்கணும். அப்பத்தான் வாசிப்புலே ஒரு குஷி பிறக்கும். குஷி பிறந்தா கச்சேரி களைகட்டும்.

இன்னிக்கு சங்கரநாராயணனோ, சேஷ கோபாலனோ கச்சேரி பண்றான்னா, கூட்டம் பிச்சுண்டு போறதே, ஏன்? வித்வான் உற்சாகமா இருந்தா கச்சேரி பிரமாதமா அமைஞ்சுடும். வித்வானோட உற்சாகம் ரசிகர்களுக்கும் பத்திண்டுடும். அதான் காரணம்...

''வருஷம் ஞாபகமில்லே... ஒருதரம் - ரொம்பச் சின்ன வயசு அப்போ - ராஜரத்னம் பிள்ளை என்னை வாசிக்கச் சொல்லிக் கேட்டார். அவர் எத்தனை பெரிய வித்வான்! அவருக்கு முன்னால ஒழுங்கா வாசிக்கணும்னு கவனமா 'சுதனகுதூகல'த்தை எடுத்தேன். வாசிச்சுண்டே இருக்கேன்... அப்படியே உணர்ச்சி வசப்பட்ட பிள்ளை, என் கையைப் பிடிச்சுண்டு "என்னமா வாசிக்கிறது இந்தக் கை! இன்னும் எவ்வளவோ வாசிக்கப் போறது பார்!'' அப்படீன்னு சொன்னாரோ இல்லையோ - சிலிர்த்துப் போச்சு எனக்கு!

"குஷி வந்தால் களை கட்டும்!"

கலைஞனுக்குப் பணம் பெரிசில்லே. பாராட்டு முக்கியம். ஆத்மார்த்தமான பாராட்டுக்கு இணையா வேறே என்ன இருக்கு?''

பக்கவாத்தியமாக மட்டுமில்லை. பக்கா வாத்தியமாகத் தனிக்கச்சேரிகள், தவிர பிற கலைஞர்களுடன் ஜுகல்பந்தி என்று ராஜ நடை போட்டுக் கொண்டிருக்கிறார் சந்திரசேகரன்.

''அறுவத்தி ரெண்டுல துவாரம் வெங்கடசாமி நாயுடுவோட சேர்ந்து வாசிச்சிருக்கேன். இந்திய சுதந்தர வெள்ளி விழா கொண்டாடினாளே, அப்போ டி. என். கிருஷ்ணனோட சேர்ந்து டெல்லியிலே வாசிச்சேன். என்ன ரிஸப்ஷன்கறேன்? எம். எஸ். கோபாலகிருஷ்ணனோட, சிதார் ஜனார்தனோட (ரவிசங்கரின் சிஷ்யர்) ஷெனாய் வாசிக்கிற பிரபாகர் கெய்க்வாடோட... ஜுகல்பந்தி வாசிக்கறதே ஒரு தனி சுகம்!''

இப்போதெல்லாம் கச்சேரி வாசிக்கிற போது ரொம்ப 'பொறுப்போடு' வாசிக்கிறதாகச் சொல்கிற சந்திரசேகரன், சின்ன வயதில் தனக்கு, வாசிப்பதில் பயமே இருந்ததில்லை என்கிறார்.

''பதினஞ்சாவது வயசுல மாலிக்கு வாசிச்சிருக்கேன். மாலி எப்பேர்ப்பட்ட வித்வான்னு எல்லாருக்கும் தெரியும். அவருக்கு வாசிக்கும் போது கூட அப்போ விளையாட்டாத்தான் வாசிச்சேன்னு இப்போ நினைச்சால் ஆச்சர்யமா இருக்கு! ஒருதரம் மாலி பைரவியிலே, விரிபோணி வர்ணத்தை எடுத்தார். எடுத்த உடனே மூணாங்காலத்துல (மிக ஸ்பீட்!) ஆரம்பிச்சுட்டார். இது ஏதுடா வம்புல விட்டுடுவார் போல இருக்கேன்னு நினைச்சுண்டே இருக்கேன்... டபார்னு வாசிக்கறதை நிறுத்திட்டு, 'நீ கன்டினியூ பண்ணு'ன்னு என்னை கோதாவுல விட்டுட்டு சும்மா உட்கார்ந்துட்டார். பையன் எப்படி வாசிக்கறான்னு டெஸ்ட் பண்ணாரோ என்னவோ? நான் சளைக்கலை! அதே மூணாங்கால ஸ்பீடுல முழு வர்ணத்தையும் வாசிச்சு முடிச்சேன்! அவர் மனசுக்குள்ள சந்தோஷப்பட்டிருக்கணும். ஆனா, வெளியிலே காண்பிச்சுக்கலை!''

சந்திரசேகரன் வெளிப்படையாகவே சந்தோஷப்பட்டுக் கொள்ளுகிறவிதமாக இன்று அவருடைய சிஷ்யர்கள் பலர் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறார்கள். கன்யாகுமரி, ஸ்ரீதர், நீலா...

''என் அதிர்ஷ்டம் என்ன தெரியுமோ? என்கிட்ட கத்துண்டவா யார் ஒருத்தரும் கடனேன்னு கத்துக்கலை. ஆத்மார்த்தமா கத்துண்டா. கத்துண்ட எல்லாருமே அமோகமா இருக்கா. கத்துக் கொடுத்தவனுக்கு இதைவிட வேறென்ன சந்தோஷம்?''

இந்த சந்தோஷத்துக்குக் கூடுதலாக இன்னொரு சந்தோஷம் தரும் விதமாக சந்திரசேகரனின் சிஷ்யர்கள் ஒரு காரியம் பண்ணுகிறார்கள். அத்தனை பேரும் ஒன்றுகூடி, டிசம்பர் 11-ம் தேதி கிருஷ்ணகான சபாவில் தம் குருவுக்கு ஒரு பாராட்டு விழா நடத்துகிறார்கள்.

''வெள்ளி வயலின் தரப் போறாளாம்!''

ஒரு குழந்தையின் குதூகலம் அந்த குருவின் முகத்தில். ⬤

— ஔரங்கசீப்

படம் : ஸ்ரீஹரி

போட்டிக் கதை – 12



இந்தக் கலிகாலத்தில் இவனுக்கு ஏதேனும் நேர்ந்து விட்டால் என்ன செய்வது என்று அஞ்சி அந்த மாயவனுக்கு மங்களாசாசனம் பாடினார் பெரியாழ்வார். அதுவே திருப்பல்லாண்டு.

"பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள்
மணிவண்ணா! உன்
சேவடி செவ்வடி திருக்காப்பு."

பாஷ்யம் திருப்பல்லாண்டு பாடி முடித்தான். மூலவரின் மேல் சாத்தியிருந்த துளசி இலை இரண்டு எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். மூலவரின்

திருக்காப்பு

பி. கலா

முன்னே வீற்றிருந்த ஐம்பொன்னால் ஆன அந்த அழகிய கண்ணபெருமான் சிலையை உற்று உற்று அழகு பார்த்தான்.

"டேய் கண்ணா! நீ விஷமம் பண்ண மாதிரியே நானும் பண்றேன்னு அம்மா அடிக்கடி வையறா. நீ பண்ணப்போ உன் அம்மா யசோதையும்தானே உன்னைத் திட்டினா. பின்னாலதான் எல்லாருக்கும் உன் அருமை தெரிஞ்சது. நானும் இப்ப விஷமம் பண்ணாலும் பின்னால பெரிய ஆளா வருவேன். நீதான்டா கண்ணா எனக்கு அறிவு, பலம் எல்லாம் தரணும். அம்மா தினம் அந்தக் குட்டிக் கண்ணனாண்ட வேண்டிக்கோ, கேட்டதெல்லாம் கொடுப்பான் அவன்னா. நீ கொடுப்பேன்னு எனக்குத் தெரியாதா என்ன? சரி, எனக்குத் தூக்கம் வருது. நான் போயிட்டு நாளைக் காலையில் வர்றேன். சமத்தா தூங்கு. என் கையால்தான் உனக்கு நைவேத்தியம். அப்பா தந்தா சாப்பிடாதே என்ன!" என்று வாஞ்சையுடன் சொல்லிவிட்டு "அப்பா!" என்று விளித்தான்.

"என்னடா!" குரல் சந்நிதிக்கு வெளியே மண்டபத்தில் இருந்து வந்தது.

"நான் ஆத்துக்குப் போறேன்!"

"கிளம்பு. நா வர நாழியாகும்னு அம்மாட்ட சொல்லிடு!"

ராமாமிர்தம் பரபரப்பில் இருந்தார். திடீரென்று இந்த இரவு எட்டு மணிக்கு நடை சாத்துகிற வேளையில் கோயில் தர்மகர்த்தா, பஞ்சாயத்துத் தலைவர் இன்னும் இரண்டு பெரிசுகள் ஏன் வந்திருக்கிறார்கள்?

"குருக்களே! என்ன கிளம்பிட்டீங்களா? உம்ம கூடக் கொஞ்சம் பேசணும். ரொம்ப அர்ஜெண்ட். வீட்டுக்கு வர லேட்டாகும்னு பையன்ட்ட சொல்லியனுப்பும்."

கண்ணபுரம் என்ற அந்த அழகிய சின்னஞ்சிறு கிராமத்தின் பெருமைக்குரிய ஆனால் அரசாங்கக் கவனிப்பில்லாமல் நிறையச் சிதிலமடைந்த எளிய ஏழைக் கோயில்.

ஐம்பொன்னால் ஆன பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அதியற்புத அழகான குழலூதும் கண்ணன் சிலையின் மதிப்பு வழக்கம் போலவே ஓர் அமெரிக்கனுக்குத் தெரிந்திருந்தது. மார்க் காலவாட என்ற அந்த அமெரிக்கன் அதற்கு ஒரு கோடி ரூபாய் விலை வைத்திருந்தான்.

ராமாமிர்தத்தின் பத்து வயது மகன் பாஷ்யத்துக்குக் கண்ணன் மீது கொள்ளை ஆசை. கண்ணன்தான் அவன் அத்யந்த நண்பன். காலையில் சந்நிதி திறப்பதே அவன்தான்.

தினம் ஒரு திருப்பள்ளியெழுச்சிப் பாடல் பாடுவான். கண்ணனைக் குளிப்பாட்டுவான். குளிர்காலத்தில் ஒருநாள் வெந்நீர் கொண்டு வந்து குளிப்பாட்ட, ராமாமிர்தம் கோபித்துக் கொண்டார்.

"அப்பா! என் கண்ணனுக்குக் குளிராதா?"

"டேய்! அவன் எம்பெருமான். சலகமும் அவனுள் அடக்கம். அவனுக்குக் குளிரா! வர வர உனக்குப் பித்தம் ஏறுதுடா!"

"போப்பா!"

"**கு**ருக்களே, பொண்ணுக்கு என்ன வயசு?"

"எந்தப் பொண்ணு?"

"விளக்கமாய்ப் பேசணும்யா அவர்கிட்டே. உம்ம பொண்ணுதான்."

"வர்ற தையில் இருபத்தி அஞ்சாறது!"

"இருபத்தி அஞ்சு வயசாச்சின்னு இப்படிக் கூசாமல் சொல்றீரே. கல்யாணம் பண்ணி அனுப்பணும்னு உமக்குத் தோணவேயில்லையா?"

என் பெண் கல்யாணத்தைப் பற்றி நடை சாத்துகிற வேளையில் இவர்களுக்கு நிச்சயம் அக்கறை இல்லை என்பது புரிந்த ராமாமிர்தம், "நேரே விஷயத்துக்கு வரேளா? எனக்கு நாழியாறது!"

"கற்பூரம்! என்ன? நாழியாகுதா? போய் என்னய்யா பண்ணப் போறீர். கல்யாண வயதில் பொண்ணு வீட்டில். ரெண்டுங்கெட்டான் வயதில் பையன் எந்நேரமும் கோயிலே கதி. அந்தக் கண்ணன் சிலையே

கதின்னு. உம்ம பொண்ணுக்கு கல்யாணம் ஆகணும். இந்த ஊருக்கு நல்லது நடக்கணும். எல்லாத்தையும் நாம் இப்போ பேசித் தீர்த்தாகணும்!"

"செத்த விளக்கமாத்தான் சொல்லுங்களேன்!"

தர்மகர்த்தா தொண்டையை ஒருமுறை கனைத்துக் கொண்டார்.

"மூணு மாசம் முன்னால நம்ம கோயில்ல இருக்கிற கண்ணன் சிலையை ஒருத்தர் ஃபோட்டோ பிடிச்சிட்டுப் போனார் இல்லையா. இதே மாதிரி இன்னொரு சிலை செய்து அமெரிக்காவுக்கு அனுப்பணும். அங்கே கட்டியிருக்கிற கோயிலில் பிரதிஷ்டை பண்ணணும்னு சொன்னார் இல்லியா. ஞாபகம் இருக்கா?"

"இருக்கு!"

"அமெரிக்காகாரன் ஒருத்தன் நம்ம சாமி மேல பக்தி முத்திப் போய்த் தன் நாட்டில் ஒரு கோயில் கட்டியிருக்கானாம். அந்தக் கோயிலுக்கு ஒரு கிருஷ்ணன் சிலை வேணும்னு அவனோட ஆள் நிறைய கோயில்களுக்குப் போய் ஃபோட்டோ பிடிச்சி அனுப்பியிருக்கான். நம்ம கண்ணனோட அழகுலதான் அவன் ரொம்ப மயங்கிட்டானாம். அதும் இது பதிமூன்றாம் நூற்றாண்டு சிலை. இதோட அருமை நம்ம அரசாங்கத்துக்கு எங்கே தெரியுது. இந்தக் கோயிலை அரசாங்கம் எடுத்துக்கச் சொல்லி எத்தனை மனுப் போட்டோம். எல்லாம் குப்பைக் கூடைக்குத்தான் போச்சு. கோயில் சிதிலமடைந்து எத்தனை பாழாய்ப் போச்சு. இந்த ஊரில் மொத்தம் இருக்கிறதே நூறு வீடுகள் தான். நாமளும் எவ்வளவு கஷ்டப்பட்டு இதைப் பராமரிச்சு வர்றோம்? இந்த ஊரில் ஒரு பள்ளிக்கூடம் உண்டா, ஆஸ்பத்திரி உண்டா, தெரு விளக்கு உண்டா? ரெண்டு கிலோ மீட்டர் நடந்தால்தான் பஸ்ஸையே பார்க்க முடியும்."

"இதெல்லாம் தெரிஞ்சதுதானே?"

"விஷயத்துக்கு வாங்க தர்மகர்த்தா அய்யா!"

"வர்றேன். இந்தச் சிலையைப் போலவே ஒண்ணு செய்து அதை அமெரிக்காவில் கட்டியிருக்கிற தன் கோயிலுக்குக் கொண்டு போறது தான் அந்த அமெரிக்காகாரன் முதலில் போட்ட திட்டம். ஆனால் அவனுக்கு இப்போ சென்னையில் இது போல செய்து வைத்திருக்கிற அந்தச் சிலையைப் பிடிக்கலையாம். ஒரிஜினல் சிலையே வேணுமாம்."

"நாராயணா! இதென்ன சோதனை!"

"சோதனையும் இல்லை. வேதனையும் இல்லை. இப்போ செய்து வைத்திருக்கிற சிலையை நாங்க பார்த்தோம். ஒரு துளி வித்தி

> **"இசையினால் செடி வளரும்னு தினமும் அதுகிட்டே பாடிக்கிட்டே இருந்தா, பாவம் அந்தச் செடியும் எவ்வளவுதான் பொறுமையாய் இருக்கும்?"**
>
> **– நளினகாந்தி**

யாசம் இல்லை. அதைக் கொண்டாந்து இங்க வச்சிட்டு இதை அங்க கொண்டு போகப் போறாங்க. இதுக்கு நமக்குப் பத்து லட்ச ரூபாய் தர்றானாம் அந்த அமெரிக்காகாரன்!"

"அய்யய்யோ! நான் இதுக்குச் சம்மதிக்க மாட்டேன்!"

"சாமி! நான் இந்தக் கோயில் பரம்பரை தர்மகர்த்தா. கோயில் ஊருக்குப் பொது சொத்து. கண்ணன் சிலை இங்கே இருக்கறதுனால யாருக்கு என்ன லாபம். தவிர நாம் இந்தப் பணத்தை முழுக்க ஊரின் நல்ல காரியங்களுக்காகத்தான் பயன்படுத்தப் போறோம். அதில் ஒண்ணு உங்க பொண்ணு கல்யாணம். என்ன சொல்றீர்?"

வந்திருந்த நால்வரும் மடக்கி மடக்கிப் பேச, ராமாமிர்தம் ஒத்துக் கொண்டார்.

"இன்னைக்கு ராத்திரி ஒரு மணிக்கு வேன் வரும். ராத்திரியோட ராத்திரியா சிலை சென்னை போயிரும். பணம் எல்லாம் வாங்கியாச்சு. உமக்கு இந்தாரும் பத்தாயிரம் அட்வான்ஸ். அப்படியே இந்த விஷயம் போலீஸுக்குத் தெரிஞ்சாலும் இதான் ஒரிஜினல் சிலைன்னு இப்ப மாத்தி வைக்கப் போற சிலையைச் சொல்லிடலாம். நான், நீர்; பஞ்சாயத்துத் தலைவர். நாம மூணு பேர் சொன்னா நம்பிடுவாங்க!"

பாஷ்யம் தினம் கோயில் பிராகாரத்தை வலம் வந்து விட்டு விழுந்து வணங்கி விட்டுத்தான் வீட்டுக்குப் போவான். அவன் இந்த உரையாடல் முழுக்கக் கேட்டான்.

அவன் உடல் நடுங்கியது.

ஆண்டவனுக்கே ஏதேனும் தீது வருமோ என்று அஞ்சிய பெரியாழ்வார், திருப்பல்லாண்டு பாடினார் என்று அப்பா கூறுவாரே, இன்று அவரே துணை போகிறாரே என்று அழுகை வந்தது.

"அப்பா! கண்ணன் சிலையை விற்கப் போறீங்களா? வேண்டாம்ப்பா!" என்றான் திடீரென்று குறுக்கே பாய்ந்து.

பேசிக் கொண்டிருந்தவர்கள் அதிர்ந்தனர்.

பஞ்சாயத்துத் தலைவர் நைச்சியமாக, "வாடா கண்ணா வா! யார்டா சொன்னது உனக்கு?"

"நீங்க பேசினது எல்லாம் கேட்டேனே!"

"சேசே! அப்படியெல்லாம் பண்ணுவோமா. சிலை செய்து ரொம்ப வருஷமாச்சில்லையா. அதான் பாலிஷ் பண்ணப் போறோம். கோயி



லுக்குக் கும்பாபிஷேகம் பண்ணப் போறோம். என்னா சாமி, அப்படித்தானே..."

"ஆமாம் பாஷ்யம்! நீ அப்பவே ஆத்துக்குப் போறேன்னு சொன்னியே போகலையா'' என்று நூறு ரூபாய்க் கட்டை இடுப்பில் மறைத்துக் கொண்டு எழுந்தார்.

ஆனால் பாஷ்யம் அதை நம்பவில்லை. இரவு எத்தனை மணிக்கு... பன்னிரண்டு மணிக்கு வந்து கோயில் வாசலில் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

வீட்டுக்கு வந்த பாஷ்யம் திருப்பல்லாண்டு முழுதும் பாடினான். ராமாமிர்தம் திகைத்தார். இந்தச் சிறுவனுக்கு உள்ள பாசம் நமக்கில்லையே.

ஆனால் மனைவியுடன் ஆலோசித்தபோது அவள், "இத்தனை பெரிய மனுஷா உங்களை மதிச்சுக் கேட்டிருக்காங்க. பத்தாயிரம் தந்திருக்கா. ஏதோ அந்தக் கிருஷ்ண பரமாத்மாவேதான் நமக்குக் கண்ணைத் திறந்து அருள்புரிஞ்சிருக்கான்" என்றாள் எளிதாக.

நள்ளிரவில் பாஷ்யம் திடுக்கென்று விழித்துக் கொண்டான். மெல்ல பூனை போல எழுந்து, கதவு திறந்து கோயிலை நோக்கி ஓடினான்.

கோயில் வாசலில் ஒரு வேன் நின்றிருக்க, அருகே யாருமில்லை. ஊரே இருளில் மூழ்கியிருந்தது.

'இந்த வேனில்தான் என் கண்ணனைக் கொண்டு போகப் போகிறீர்களா? அவன் கூடவே நானும் போறேன்' என்றெண்ணி வேனுக்குள் ஏறி சீட்டின் அடியில் படுத்துக் கொண்டான். கண்கள் சுழற்றியது.

அந்த நவீனமான பங்களாவின் ஹாலில் அலங்கார மேஜை மேல் கண்ணன் சிலை வீற்றிருந்தது.

"மார்வலஸ்!" என்றான் மார்க் கால்வர்ட். "ஒரிஜினலுக்கும் டூப்ளிகேட்டும் எத்தனை வித்தியாசம்? என்ன அழகான முகம். எத்தனை தேஜஸ்!" ஓர் இந்து போல் கைகூப்பிக் கும்பிட்டான். கீழே விழுந்து வணங்கினான்.

அந்தச் சமயத்தில் பாஷ்யம் பங்களாவினுள் ஓடிவந்து கண்ணன் சிலையைக் கட்டிக் கொண்டான்.

"யார் இந்தச் சிறுவன்? சிலைக்குப் பூஜை செய்பவனா?"

"இவன்.... டேய்! நீ அந்தக் கோயில் குருக்களோட பையன் இல்லை? இங்க எப்படிறா வந்தே?"

பாஷ்யம் அவன் கொலைப் பார்வை முன் நடுங்கினான்.

"ஏய்! அதட்டாதே! இங்கே வா, பயப்படாதே!"

பாஷ்யம் அழுதான். கண்ணனைக் கைகூப்பித் தொழுதான்.

"தீயில் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி
திகழ் திருச்சக்கரத்தின்
கோயில் பொறியாலே ஒற்றுண்டு நின்று
குடிகுடி ஆட்செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை ஆயிரம்
தோளும் பொழிகுருதி
பாயச் சுழற்றிய ஆழிவல்லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே'

என்று உரக்கப் பாடினான். கண்களில் நீர் பொழிந்தது.

"என்ன சொல்கிறான்? பாடுகிறானா?"

"அய்யா! இவன் எதுவோ இந்தக் கண்ணனைப் பற்றிப் பாடுகிறான்!"

"சார்! என்னையும் இந்தக் கண்ணன் கூடவே அழைச்சிட்டுப் போயிடுங்க. இவன் இல்லாமல் நான் இருக்க மாட்டேன். பட்டினி கிடந்து செத்துப் போயிடுவேன். எனக்கு என் கண்ணன்தான் உயிர். எல்லாம் அவன்தான். எனக்கு அவன் வேணும். என் கண்ணன், என் தோழன் வேணும்" என்று பாஷ்யம் கண்ணன் கால் பற்றி அழுதான்.

பெரியவர்கள் ஊர்ப் பெயரைச் சொல்லிக் கடவுளை விற்கிறார்கள். இந்தச் சிறுவனோ இத்தனைப் பாசத்துடன் அழுகிறான் - பாஷ்யம் சொன்னதின் மொழிபெயர்ப்பு கேட்ட கால்வர்ட் சொன்னான்.

"சரி, இந்தச் சிலையை உன் ஊருக்கே திரும்ப அனுப்பி விடுகிறேன். சந்தோஷம் தானே?"

தமிழில் மொழிபெயர்த்தான்.

"ஐயா! வேண்டாம் என்று விரட்டியவர்களிடம் என் கண்ணன் மறுபடி போவதா? கூடாது. என்னை இந்தக் கண்ணனுடனேயே எப்போதும் இருக்க அனுமதியுங்கள். அதுவே போதும்'' என்று பாஷ்யம் சொன்னதை ஆங்கிலமாக்க, கால்வர்ட் ஆச்சரியமுற்றான்.

"நீ ஒருவன் விரும்புகிறாயே அது போதும் உன் கண்ணனுக்கு. நான் அளித்த பணம் உனக்காக, உன் கண்ணனுக்காக நான் அளித்த.... அது என்ன... நன்கொடை. நீயும், உன் கண்ணனும் இருக்க வேண்டிய இடம் உன்னுடைய ஊர். உங்கள் கோயில். என் நாடு அல்ல. என் கோயில் அல்ல. உன் பாசம் என் பக்தியை விடப் பல மடங்கு சிறந்தது. நான் பக்தன். ஆனால் நீயோ கடவுளின் தோழன்!"

மூலம் :
டேனியல் ஸ்டீல்

தமிழில் :
ரா.கி. ரங்கராஜன்

11:29

36

டாக்டர் கெடு வைத்திருந்த மூன்று மாதங்கள் கடந்து நான்காவது மாதம் ஆரம்பமாயிற்று. ஆலிஸனின் நிலைமையில் மாறுதலைக் காணோம். வெறும் முனகல் கூட இப்போதெல்லாம் வருவதில்லை.

கோமாவிலிருந்து அவன் எப்படியாவது விடுபட்டு விழித்துக் கொண்டால் போதும் என்று பேஜ் தவியாய்த் தவித்தாள். உயிருடன் பிழைத்து விட்டால், பிறகு அவளுடைய மன வளர்ச்சியோ மூளை வளர்ச்சியோ எப்படி இருந்தாலும் பரவாயில்லை. நடமாட வைப்பதற்கும், ஆலிஸன் ஆலிஸனாக இருப்பதற்கும் எத்தனை நீண்ட காலம் பிடித்தாலும் பரவாயில்லை என்று நினைத்தாள். ஆனால் அந்த நம்பிக்கை ஒருநாளும் ஈடேறப் போவதில்லை என்ற எண்ணம் இப்போது ஏற்படத் தொடங்கி விட்டது.

அன்று அவள் ஆஸ்பத்திரியின் வரவேற்பறையில் வரைந்து வந்த சுவரோவியத்தை ஓரளவு முடித்துவிட்டு அப்போதுதான் ஆலிஸனிடம் திரும்பியிருந்தாள். அந்த ஓவியம் ஒரு துறைமுகக் காட்சி. சின்னச் சின்னதாய்ப் பல விவரங்களை அதில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. சிறு குறிப்பு நோட்டில் பென்ஸிலால் அவ்வப்போது வரைந்த வண்ணம் ஆலிஸனின் படுக்கைக்கருகே உட்கார்ந்திருந்தாள். சாந்தம் தவழ்ந்த பிற்பகல் வேளை. சூரியனின் சாயங்காலக் கிரணங்கள் மென்மையாய் ஜன்னல் வழியே அறைக்குள் நுழைந்து கொண்டிருந்த நேரத்தில் –

படுக்கையில் ஆலிஸனின் கை கொஞ்சம் நகர்கிற மாதிரி தோன்றியது.

அப்படி நடுநடுவே அசைவது உண்டுதான். அதற்கு எந்த அர்த்தமும் கிடையாது என்று பேஜுக்குத் தெரியும். மூளையில் ஏதோவொரு மின் அலை பாயும்போது அதுபோன்ற அசைவு ஏற்படுகிறது என்று அவள் அறிவாள். எனவே ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, மீண்டும் தன் குறிப்பு நோட்டைப் பார்த்தவாறு பென்ஸில் நுனியைக் கடித்துக் கொண்டிருந்தாள். துறைமுக ஓவியத்தில் ஏதோ ஒன்று சேர்க்க வேண்டுமென்று தெரிந்ததேயொழிய அது என்னவென்று பிடிபடவில்லை. ஒரு நிமிடம் ஜன்னலை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள். மறுபடி ஆலிஸனின் பக்கம் பார்வையைத் திருப்பியபோது –

மீண்டும் ஆலிஸனின் கை அசைவதைக் கண்டாள். இம்முறை அவள் விரல்கள் பெட்ஷீட்டைப் பிடித்திருந்தன. பேஜை நோக்கிக் கையை நீட்டுகிற மாதிரியும் இருந்தது.

இது போல இதற்கு முன் என்றுமே நேர்ந்ததில்லை. இது பிரமையா? பழைய அசைவு தானா? அல்லது, புதுவிதமான அசைவா?

திகைத்துப் பார்த்தபோது ஆலிஸனின் தலை திரும்புவதும் தெரிந்தது. ஆம்! மிக மிக மெதுவாக, கூர்ந்து கவனித்தாலொழியத் தெரி

* 'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்

யாத அளவுக்கு, ஆலிஸனின் தலை திரும்பி யது. பேஜ் அங்கே உட்கார்ந்திருப்பதைப் புரிந்து கொண்டு திரும்புகிற மாதிரி…

மூச்சு அடைக்கப் பேஜ் பார்த்துக் கொண் டிருந்தான்.

அறையில் யாரோ இருப்பதை ஆலிஸன் கண்டுகொள்வது போல… அவனே எங்கோ வெளியே போய்விட்டு அப்போதுதான் அந்த அறைக்குத் திரும்பியதுபோல…

ஒட்டும் இரண்டு உள்ளத்தின் தட்டில் அறிந்த மாதிரி ஆலிஸனைப் பேஜ் அறிந்து கொண்டான்.

"ஆலி! என்னைத் தெரிகிறதாம்மா? நான் பேசுவது கேட்கிறதா ஆலி?" என்று துக்கம் தொண்டை அடைக்கக் கேட்டான். முன் னொரு நாள், ஆலிஸன் கிட்டத்தட்ட இறந்து விட்டாள் என்றிருந்தபோது இதுபோல்தான் கேட்டான். ஆனால் அப்போதைக் காட்டிலும் இப்போது பேஜின் குரலில் நம்பிக்கை அதிகரித்திருந்தது. அப்போதைக் காட்டிலும் இப்போது யதார்த்தம் அதிகரித்திருந்தது. அப்போதைக் காட்டிலும் இப்போது வித்தியா சம் அதிகரித்திருந்தது.

பென்ஸிலையும் குறிப்பு நோட்டையும் கீழே வைத்தாள். 'ஆலி…' என்று மெதுவே கூப்பிட்டபடி அவள் கையைத் தன் கையோடு கோத்துக் கொண்டாள். எப்படியும் இந்தத் தடவை மகளைத் திரும்பக் கொண்டு வந்து விட வேண்டும் என்ற உறுதி அவள் மனத்தில் பிறந்தது. "ஆலி… கண்ணைத் திற, பேபி. இதோ பார், நான் இங்கேதான் இருக்கிறேன்… உன் பக்கத்தில் இருக்கிறேன்… பயப்படாதே, கண்ணம்மா. எல்லாம் சரியாகி விட்டது. உன் அம்மா இதோ உட்கார்ந்திருக்கிறேன் பார்…"

வெகு மிருதுவாகப் பேசிக் கொண்டே ஆலிஸனின் கையை வருடினாள். அப்போது, ஆலிஸனின் விரல்கள் தன் விரல்களை அழுத்துவதை- ரொம்ப ரொம்பப் பலவீனமாக அழுத்துவதை உணர்ந்தாள்.

குபுக்கென்று பேஜுக்குக் கண்ணீர் வழிந்தது. தான் பேசுவது ஆலிஸனுக்குக் கேட் கிறது! யாரும் சொல்லாமலே அவள் உள் ளுணர்வுக்கு அது தெரிந்



நது.

''ஆலி... என் கையை அழுத்தினாய் இல்லையா? அப்படியென்றால் என் பேச்சு உனக்குக் கேட்கிறது! இல்லையா, கண்ணே? இதோ பார்... கண்ணைத் திற...''

ஆலிஸனின் இமைகள் படபடப்பதைப் பார்த்தாள். அதுவே ரொம்பக் கஷ்டமாக இருந்தது போலும். படபடப்பு நின்று விட்டது. பேஜின் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது. அதைத் துடைக்கத் தோன்றாமல் ஆலிஸனையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஒருகால் முன்னை விட ஆழமான கோமாவில் அவள் மூழ்கி விட்டாளோ என்ற அச்சம் உண்டாயிற்று. உயிர் இருப்பதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லையே...

திடீரென்று மறுபடியும் அவள் கையை ஆலிஸன் அழுத்தினாள். இந்தத் தடவை, அந்த அழுத்தத்தில் பலவீனம் இருக்கவில்லை. சற்று வலு தெரிந்தது.

குதித்தெழுந்து ஆலிஸனை உலுக்கி எடுக்க வேண்டும் போலிருந்தது பேஜுக்கு. கூச்சலிட்டு யாரையேனும் கூப்பிட வேண்டும் போலிருந்தது. கூப்பிட்டு, 'என் பெண் உயிரோடு இருக்கிறாள்! எங்கேயோ ஒரு மூலையில் அவள் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கிறது! மூச்சு ஓடிக் கொண்டிருக்கிறது! வந்து பாருங்கள்!' என்று கூவ வேண்டும் போலிருந்தது. ஆனால் மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி அசையாமல் உட்கார்ந்திருந்தாள். மனம் மட்டும், 'விழித்துக் கொள், ஆலி.... எழுந்திரு, எழுந்திரு' என்று ஓயாமல் ஜபித்துக் கொண்டிருந்தது.

இன்னொரு தடவையும் ஆலிஸனின் இமைகள் லேசாகத் துடித்தன. பேஜுக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. விதி விளையாட்டுக் காட்டுகிறதோ...? டாக்டர்கள் வந்து பார்த்து, 'இது வெறும் நரம்புகளின் வலிப்பு. அவ்வளவுதான்' என்று மறுபடியும் சொல்லிவிட்டுச் சென்று விடுவார்களோ? ஆலி கண் விழிக்காமலே போய் விடுவாளோ?

''பேபி... ப்ளீஸ்... ப்ளீஸ்.... கண்ணைத் திறம்மா. நான் உன் மீது உயிரையே வைத்திருக்கிறேன், கண்ணே.... ஆலி... ப்ளீஸ்....'' விம்மலை அடக்கிக் கொண்டு பெண்ணின் விரல்களை முத்தமிட்டவாறு கெஞ்சினாள் பேஜ்.

இமைகள் மீண்டும் துடிக்க, வெகு வெகு மெதுவாகக் கண்களைத் திறந்தாள், ஆலிஸன்.

ஏறத்தாழ நாலு மாதங்களுக்குப் பின் முதன் முறையாக விழி திறந்து தாயைப் பார்த்தாள்.

அவள் பார்வையில் ஒரு குழப்பம் இருந்தது. தான் பார்ப்பது என்னவென்று முதலில் அவளுக்கே புரியவில்லை. பின்னர் தாயின் கண்களை நேருக்கு நேர் பார்த்தாள். ''அம்மா....'' என்று முனகினாள்.

பேஜினால் அழுகையை அடக்க முடியவில்லை. குனிந்து ஆலிஸனின் இரண்டு கன்னங்களிலும் கூந்தலிலும் மாறி மாறி முத்தமிட்டாள். அவள் கண்களில் பொங்கி வழிந்த கண்ணீர் ஆலிஸனின் முகத்தை நனைத்தது.

ஆலி மறுபடி கண்ணைத் திறந்து, மறுபடி 'அம்மா' என்றாள். அவள் குரல் கரகரவென்றுதான் இருந்தது. ஆனால் அதைக் காட்டிலும் இனிய சப்தத்தைப் பேஜ் தன் வாழ்நாளில் கேட்டதில்லை. யுக யுகாந்தரமாக அங்கேயே உட்கார்ந்திருந்தாள், பெண்ணின் முகத்தையே பார்த்தவாறு.

தலைமை நர்ஸ் உள்ளே வந்தவள், ஆலிஸனைப் பார்த்ததும், 'விழித்துக் கொண்டு விட்டாள்! விழித்துக் கொண்டு விட்டாள்! கடவுளே! ஆலிஸனுக்கு விழிப்பு வந்து விட்டது!' என்று கூவியவண்ணம் வெளியே ஓடினாள் டாக்டர் ஹேமர்மனை அழைத்து வர.

ஆலிஸன் கண்களை மூடிக் கொண்டிருந்தாள், டாக்டர் வந்தபோது. ஆனால் இப்போது அது கோமா அல்ல. தூக்கம்.

நடந்ததை அவரிடம் சொன்னாள் பேஜ்.

அருள்வாக்கு

தினமும் தூங்கப் போகு முன்பு இன்று ஜன ஸமுதாயத்துக்கு நாம் ஏதாவது கைங்கர்யம் பண்ணினோமா என்று கேட்டுக் கொள்ளவேண்டும். ஈச்வரனைப் பற்றிப் 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்று தேவாரத்தில் சொல்லியிருக்கிறது. அந்த மாதிரி, நாம் பரோபகாரம் பண்ணாமலே ஒருநாள் போயிற்று என்றால், அது நாம் பிறவா நாளே.

நாம் எத்தனை சின்னவர்களாக இருந்தாலும் நம்மாலும் முடியக்கூடிய சின்னத் தொண்டு இல்லாமலில்லை. இப்படி அவரவரும் தனியாகவோ, ஸங்கமாகச் சேர்ந்தோ ஏதாவது பொதுநலக் கைங்கர்யம் பண்ணியே ஆகவேண்டும். தண்ணீரில்லாத ஊரில் ஒரு பத்து பேர் சேர்ந்து கிணறு வெட்டுவது; ஏதோ ஒரு பிள்ளையார் கோயில் மதில் இடிந்திருந்தால் அதை நாலு பேராகச் சேர்ந்து கட்டுவது; பூஜை நின்று போன ஒரு க்ராமக் கோயிலில் ஒரு காலப் பூஜைக்காவது நாலு பேரை யாசித்து மூலதனம் சேகரித்து வைப்பது; பசுக்கள் சொறிந்து கொள்வதற்கு ஒரு கல்லேனும்



நாட்டுவது; நாம் படித்த நல்ல விஷயங்களை நாலு பேருக்குச் சொல்லுவது, எழுதுவது; இரண்டு ச்லோகமாவது பாசுரமாவது நாமாவளியாவது பாடி நாலு பேர் மனஸில் பகவானைப் பற்றிய நினைப்பை உண்டாக்குவது; குப்பை கூளங்களைப் பெருக்குவது – இந்த மாதிரி ஏதாவது தொண்டு அன்றன்றும் செய்ய வேண்டும். ஓசைப்படாமல் செய்ய வேண்டும் என்பது முக்யம்.

குடும்பக் கடமைகளை விட்டுவிட்டு ஸோஷல் ஸர்வீஸ் என்று கிளம்ப வேண்டியதில்லை. அதையும் விடாமலே, இதுவும் கடமை என்ற உணர்வோடு சேர்த்துக் கொண்டு செய்யவேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ஆலிஸனை நிதானமாகப் பரிசோதனை செய்தார் டாக்டர். சற்றைக்கெல்லாம் அவள் கண்ணைத் திறந்து அவரைப் பார்த்தாள். அவர் யாரென்று புரியவில்லை. அம்மாவை நோக்கினாள். கண்களில் நீர் தளும்பியது.

''ஓகே, கண்ணே. எல்லாம் சரியாகிவிட்டது. இவர் டாக்டர் ஹேமர்மேன். நம் சிநேகிதர். உன்னை நன்றாகச் சொஸ்தப் படுத்தி விடுவார்...'' என்றாள் பேஜ்.

'யாரும் சொஸ்தப்படுத்தத் தேவையில்லை. என் கண்மணி விழித்துக் கொண்டு விட்டாள். கண்ணைத் திறந்தாள். என்னைக் கூப்பிட்டாள். பேசினாள். இனி எல்லாம் நன்மைதான்... குணம்தான்...' என்று அவள் மனம் எண்ணியது.

"ஆலி, என்னைப் பார்," என்றார் டாக்டர் ஹேமர்மேன். "என் கையை அழுத்து. பார்க்கலாம்," என்று கூறிக் கையை நீட்டினார்.

அவர் சொன்னபடியே கையை அழுத்தினாள் ஆலிஸன். ஆனால் "ஏதாவது பேசு, பார்க்கலாம்" என்று அவர் சொன்னபோது ஏதும் பேசவில்லை. தலையை அசைத்து விட்டுத் தாயை நோக்கினாள்.

டாக்டர் ஹேமர்மேன் வெளியே வந்ததும் பேஜிடம் விளக்கினார் : "அவளுடைய மூளை இன்னும் திறம்பட இயங்க ஆரம்பிக்கவில்லை. பேச்சு மறந்து போயிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் பல விஷயங்களை அவள் கற்றுக் கொள்ள வேண்டும். பேச, நடக்க, எழுந்திருக்க, உட்கார, சாப்பிட எல்லாம் பழக வேண்டும்,'' என்று பிரத்தியட்ச நோக்குடன் சொன்னவர், ''இதற்கெல்லாம் இன்னும் நிறையப் பாடுபட வேண்டும்,'' என்றார்.

அவர் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. இன்னும் எத்தனை காலம் வேண்டுமானாலும் பாடுபடப் பேஜ் தயாராக இருந்தாள்.

டாக்டர் புறப்பட்டுச் சென்றவுடனே தாரென்ஸனுக்குத்தான் போன் செய்தாள்.

ஆன்டி உள்பட எல்லாரையும் வெளியூருக்கு அழைத்துச் சென்றிருந்தான் அவன்.

படபடவென்று புயல் வேகத்தில் செய்தியைச் சொல்ல, "மெதுவாய்! மெதுவாய்! என்றான். அழுகையும் சிரிப்புமாய் அவள் சொல்லி முடித்தபோது அவளுடைய உணர்ச்சிகளை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

''ஆலி பேசினாள்! என்னோடு பேசி கண்ணைத் திறந்து என்னைப் பார்த்து 'அம்மா' என்று சொன்னாள். அவளுக்கு விழிப்பு வந்து விட்டது! நினைவு திரும்பி விட்டது!'' என்றாள் பேஜ் மூச்சு விடாமல்.

"சரி, நாங்கள் எல்லாரும் ராத்திரி அங்கே வந்து விடுகிறோம்," என்றான் தாரென்ஸன்.

க்ளோவிடம் செய்தியைச் சொன்ன போது அவளால் நம்பவே முடியவில்லை. ''நிஜமாகவா, அப்பா? ஆலிக்கு நினைவு வந்து விட்டதா?'' என்றாள் திரும்பத் திரும்ப.

''ஆமாம்மா. கொஞ்ச நாளில் பூரண குணம் ஏற்பட்டு விடும்,'' என்று சொல்லி மகளை அணைத்துக் கொண்டான் தாரென்ஸன். கொஞ்சம் தப்பியிருந்தால் க்ளோவும் கூடக் கோமாவில் விழுந்திருப்பாள் என்று நினைத்துப் பார்த்தபோது அவன் உடல் நடுங்கியது.

அவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்த போது ஆலி தூங்கிக் கொண்டிருந்தாள். கோமாவில் அல்ல. சாதாரணமாக எல்லாரையும் போல நித்திரையில் ஆழ்ந்திருந்தாள். பெரும்பாலான கருவிகளையும் ட்யூப்களையும் அகற்றி விட்டார்கள். ஆனால் இன்னும் சில நாட்களுக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் இருக்க வேண்டுமென்று கூறியிருந்தார்கள்.

''ஆலி என்ன பேசினாள்?'' என்று ஆர்வத்துடன் க்ளோ கேட்க, 'அம்மா என்று கூப்பிட்டாள். என்னைப் பார்த்தாள்....' என்று குழந்தை மாதிரி பேஜ் திரும்பத் திரும்ப ஒரே வாக்கியத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஆண்டி தாயின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு முகம் மலர்ந்தான்.

அன்று அடைந்த சந்தோஷம் மாதிரி அவர்கள் என்றைக்கும் அடைந்ததில்லை.

அடுத்த நாள் காலை ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்ட போது தன்னுடன் க்ளோவையும் அழைத்துச் சென்றாள் பேஜ். ஆலிஸன் கண்ணைத் திறந்து அவளை வெகு நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். இறுதியில் பேஜிடம், 'பொண்ணு... பொண்ணு' என்று சொல்லி, கையை உயர்த்தி க்ளோவைக் காட்டினாள்.

"ஆமாம், ஆலி. பெண்... க்ளோ. உன் சினேகிதி," என்றாள் பேஜ்.

ஆலிஸன் மறுபடியும் க்ளோவைப் பார்த்து, புரிந்து கொண்டவள் போலத் தலையை அசைத்தாள். அவளுடைய மூளையின் ஏதோ ஒரு பகுதி புரிந்து கொள்கிறது. ஆனால் அதைச் சொல்வதற்கான வார்த்தை தெரியவில்லை.

"ஆலிக்கு என்னைத் தெரிகிறது," என்று பேஜிடம் அப்போதைக்குச் சொன்னாலும், வீடு திரும்பியதும் அப்பாவிடம், "ஹூம்! ஆலிக்கு என்னை யாரென்று தெரியவில்லை," என்றாள் ஏமாற்றத்துடன்.

"அவளுக்கு அவகாசம் கொடு, க்ளோ," என்றான் தாரென்ஸன். "வெகு தூரம் போய் விட்டவள் இப்போதுதான் திரும்பி வந்து கொண்டிருக்கிறாள். புறப்பட்ட இடத்துக்கு வந்து சேர இன்னும் ரொம்ப நாளாகும்."

"எவ்வளவு நாள் ஆகும், அப்பா?"

"இரண்டு மூன்று வருஷம் பிடிக்கும் என்று டாக்டர் ஹேமர்மேன் சொல்லியிருக்கிறாராம்."

க்ளோ பெருமூச்சு விட்டாள்.


நடக்கவும், உட்காரவும், இங்கிலீஷ் பேசவும், ஸ்பூனில் உணவு எடுத்துச் சாப்பிடவும் ஆலிஸன் தேர்ச்சி பெறும் சமயம் அனேகமாய்ப் பதினெட்டு வயது ஆகிவிடும்.... பாவம்.

மறுநாள் தாரென்ஸன் ஆஸ்பத்திரிக்கு வந்த போது ஆலிஸன் அவனை உடனே அடையாளம் கண்டுகொள்ளவில்லை. உற்று நோக்கியவண்ணம் இருந்தாள்.

"நான் தாரென்ஸன், ஆலி. தெரியவில்லை? உன் சினேகிதி க்ளோவின் அப்பா," என்றான் அவன்.

அவள் தலையை ஆட்டினாள். ஒரு நிமிடம் கழித்துப் புன்னகை செய்தாள். அது ஒரு புதிய முன்னேற்றம்.

புன்சிரிப்பானாலும் சரி, அழுகையானாலும் சரி, நினைத்த நிமிடமே வராமல் கொஞ்சம் தாமதித்துத்தான் வரும் என்று டாக்டர் ஹேமர்மேன் சொல்லியிருந்தார். எண்ணமும் அதை வெளிப்படுத்தும் செயலும் இணைவதற்குக் கொஞ்ச காலம் பிடிக்கும் என்று கூறியிருந்தார்.



ஸ்டிபானியுடன் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்த பிராடுக்குச் செய்தி தெரிவித்தாள் பேஜ். 'நான் உடனே வந்து பார்க்கிறேன்,' என்று மகிழ்ச்சியுடன் சொன்னவன் இரண்டு நாளில் வந்து சேர்ந்தான்.

அறைக்குள் நுழைந்தவுடனே ஆலிஸன், 'அப்பா!' என்று கூவிக் கொண்டு கழுத்தைக் கட்டிக் கொள்வாள் என்று எதிர்பார்த்தான் போலும். அப்படி ஏதும் நடக்கவில்லை. அவனை வெகு நேரம் குழப்பத்துடன் பார்த்தாள் ஆலிஸன். பிறகு பேஜிடம், 'ஆம்பிளை...' என்றாள் மெதுவாக. பிராடின் முகத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள அவள் சிரமப்படுவது தெரிந்தது.

பிராட் ஏமாற்றத்துடன் திரும்பினான். ஆனால் அவன் கதவருகே செல்லவும், ஆலிஸன், 'டாடி' என்று கிசுகிசுக்கும் குரலில் சொல்லவும் சரியாயிருந்தது.

"உங்களைத் தெரிந்து கொண்டு விட்டாள். வாருங்கள், உங்களைக் கூப்பிடுகிறாள்," என்றாள் பேஜ்.

பிராட் திரும்பி வந்து ஆலிஸனின் கையைப் பிடித்துக் கொண்டான். கண்ணில் நீர் முட்டியது. எனினும் அதிக நேரம் நின்றிருக்காமல் வெளியேறி விட்டான்.

ஆலிஸன் படுக்கையில் உட்கார்ந்த நிலையில் இருந்தபோதிலும், ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு அசைவுக்கும் அவள் பெரும்பாடுபடுகிறாள் என்று அவனுக்குப் புலப்பட்டது. அந்த வேதனையைப் பார்த்துக் கொண்டிருப்பது அவனுக்கு இயலாத காரியம்.

அடுத்த சில வாரங்களில் ஆலிஸன் வேகமாகக் குணமடையத் தொடங்கினாள்.

"நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பங்கு அவள் பழையபடி ஆகிவிடுவாள் என்று டாக்டர் சொல்கிறார்," என்றாள் பேஜ் தாரென்ஸனிடம்.

"அதாவது?"

> **"வழிகாட்டும் குழு ஒண்ணு, வழிநடத்தும் குழு ஒண்ணுதானே இருக்கணும். நாலு குழு இருக்கே?"**
>
> **"அதுவா... வழிகாட்டும் குழுவுக்கு வழிநடத்தும் குழு; அப்புறம் வழிநடத்தும் குழுவுக்கு வழிகாட்டும் குழு!"**
>
> **— சீர்காழி வி. ரேவதி**

"எதையும் சட்சட்டென்று புரிந்து கொள்வது முடியாது. மற்றப்படி காலேஜில் படிக்கலாம். வேலைக்குப் போகலாம். கல்யாணம் செய்து கொண்டு குழந்தை பெற்றுக் கொள்ளலாம். ஜோக்கைக் கேட்டுச் சிரிக்கலாம். கதைப் புத்தகம் படிக்கலாம். படித்ததைப் பிறரிடம் சொல்லலாம்," என்று விவரித்துக் கொண்டே போனாள் பேஜ்.

"ஒரு மாதம் முன்பு வரை ஆலிஸன் பிழைக்கவே மாட்டாள் என்று எண்ணியிருந்தோம். இரண்டு மூன்று வருடத்தில் இந்த அளவுக்கு நார்மலாகி விடுவாள் என்று டாக்டர் சொல்கிறாரே! எவ்வளவு பெரிய விஷயம்!" என்று அவள் கூறியபோது –

"அப்பப்பா! உன் முகத்தில் இத்தனை சந்தோஷத்தை இப்போதுதான் பார்க்கிறேன்," என்று தாரென்ஸன் சொல்ல, ஆம் என்று பேஜ் ஒப்புக் கொண்டாள்.

"எனக்கு என்ன குறை? உலகத்தில் ஒரு பெண்ணுக்கு என்னவெல்லாம் வேண்டுமோ அவ்வளவும் கிடைத்திருக்கிறது. இரண்டு அற்புதமான குழந்தைகள். என் மீது கொள்ளைப் பிரியம் கொண்ட ஒரு அற்புதமான மனிதர். அவருடைய அற்புதமான மூன்று குழந்தைகள்..."

"வீட்டில் நிறைய இடம் இருக்கிறது. இன்னும் கூடப் பெற்றுக் கொள்ளலாம்," என்றான் தாரென்ஸன்.

மேலும் இரண்டு வாரமானதும் ஆலிஸனால் எழுந்து, பிறர் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க முடிந்தது. பேஜ் வந்ததும், 'ஹாய் அம்மா! எப்படி இருக்கிறாய்?' என்று கேட்கலானாள். க்ளோவையும் ஆண்டியையும் அடிக்கடி வரச் சொல்லிக் கொண்டிருந்தாள். தாங்கள் சென்றிருந்த வெளியூரைப் பற்றி ஆண்டி சொன்னபோது, 'ஐய!' அந்த இடமா? அது ரொம்ப நாற்றம்!' என்று சிரித்தாள்.

"உனக்குக் குணமாகட்டும். நல்ல வாசனையான ஊருக்கு அழைத்துப் போகிறேன்," என்று சொல்லித் தாரென்ஸன் அவளைப் பரிவோடு அணைத்துக் கொண்டான்.

விபத்து நடந்ததால் ஏற்பட்ட காயம் எதுவுமே ஆலிஸனிடம் இப்போது தெரியவில்லை. எல்லாம் ஆறிவிட்டது. உண்மையான சேதம் உள்ளுக்குள்.... அதுவும் விரைவில் ஆறிவிடும்...

அந்த வாரத்தின் இறுதியில், ஆஸ்பத்திரியில் நர்ஸ்களின் பொறுப்பில் ஆலிஸனை ஒப்படைத்துவிட்டு, விடுமுறைக்காக வெளியூர் சென்றார்கள் தாரென்ஸனும், பேஜும், க்ளோவும், ஆண்டியும், பிஜானும்.

தங்கியிருந்த வீட்டில் குழந்தைகள் சமையலைக் கவனித்துக் கொண்டிருந்தபோது, தாரென்ஸனுடன் வெளியே சென்றாள் பேஜ்.

அஸ்தமிக்கும் சமயம் ஏரிக்கரையில் உட்கார்ந்திருந்தபோது, "வாழ்க்கை எப்படியெல்லாம் மாறுகிறது! ஆச்சரியமாயில்லை?" என்றாள் பேஜ். "ஐந்து மாதங்களுக்கு முன் என் வாழ்க்கை வேறே எங்கேயோ, வேறே எந்தவிதமாகவோ இருந்தது. இப்போது பாருங்கள். என்னவெல்லாமோ கஷ்டங்கள் அனுபவித்து விட்டு இங்கே வந்து சேர்ந்திருக்கிறேன்."

ஆனால் முன்னைக் காட்டிலும் செழிப்பான, பசுமையான வாழ்க்கையையே அடைந்திருக்கிறோம் என்று இருவருக்குமே தெரிந்தது. அதற்கு என்ன விலையெல்லாம் கொடுக்கும்படி நேர்ந்து விட்டது!

'விபத்து நேர்ந்த அந்த ராத்திரியை நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது," என்றான் தாரென்ஸன். "ஆஸ்பத்திரியிலிருந்து கூப்பிட்டதும் ஓடி வந்தேன் ஆஸ்பத்திரிக்கு. அங்கே பார்த்தால் நீ! க்ளோவும் ஆலிஸனும் உன்னோடு வெளியே போவதாகச் சொல்லியிருக்க, ஆஸ்பத்திரியில் நீ இருக்கிறாய்! அந்தச் சமயம் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி...!"

"எனக்கும் எப்படிப்பட்ட அதிர்ச்சி! காரை ஓட்டிச் சென்றவர் இறந்து விட்டார் என்று சொன்னார்கள். அது நீங்கள்தான் என்று நினைத்திருந்தேன். ஆனால் ஆஸ்பத்திரியில் நீங்கள் பாட்டுக்கு பத்திரமாக வருகிறீர்கள்! கடவுளே! அன்றிரவு பதினொன்றரை மணிக்கு ஆலிஸன் இன்னும் வரவில்லையே, வரவில்லையே என்று நான் தவித்த தவிப்பு!" என்றாள் பேஜ்.

அதற்கு மேல் அவர்கள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. தாரென்ஸன் குனிந்து அவளை முத்தமிட்டான். பேஜ் அவன் தோள் மீது சாய்ந்து கொண்டாள். 'அபாயகரமான சூழல்களைக் கடந்து எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம்! எனக்கு இவரும் இவருக்கு நானும் கிடைத்தது எத்தனை பெரிய அதிர்ஷ்டம்!' என்று நினைக்க நினைக்க, அவள் நெஞ்சம் நெகிழ்ச்சியடைந்தது.

(முற்றும்)



• பகுத்தறிவு பேட்டி!

• இ. ராதாகிருஷ்ணன்பட்டுக்கோட்டை.

? மக்களவை கலைப்பை எதிர்த்து மக்களவைக்கு முதல் தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒன்றுகூடி ஓர் அணியை உருவாக்கியுள்ளார்களே...?

! இன்னும் போதிய அளவுக்காக சேர்க்காத எம்.பி.க்கள் அதற்குள் திரும்பத் தேர்தல் வந்தால் கவலைப்படத்தானே செய்வார்கள்!

த.மா.கா.வின் பலம் பலவீனம்

• மல்லிகை மன்னன், மதுரை – 14.

? ''ஜெயலலிதாவுக்கு முதலமைச்சர் நாற்காலி மீது ஆசை என்றால், தமது நாற்காலியின் மேல் 'முதலமைச்சர்' என்று எழுதி ஒட்டிக் கொண்டு அமரட்டும்...'' என்று கருணாநிதி கிண்டல் பண்ணியிருக்கிறாரே...?

! தேர்தல் உறுதியாகிவிட்ட நிலையில் கிண்டலை மூட்டை கட்டி வைப்பது நல்லது. எப்போதுமே ஆட்சியின் சாதனைகளைக் காட்டிலும் குறைபாடுகள்தாம் மக்களின் கவனத்தைக் கவரும் என்பதால் எச்சரிக்கை தேவை. மேலும், த.மா.கா.வுடன் உறவுகள் பழுதுபட்டால் நடப்பதே வேறு என்றாகி விடும்!

• இரா. புவனேஸ்வரி, சென்னை – 81.

? கண்ணப்பன், முத்துசாமி, அரங்கநாயகம் போன்றவர்களை மக்கள் என்ன நினைப்பார்கள்...?

! வெட்கம், மானம், ரோஷம், சூடு, சொரணை எல்லாம் இல்லாதவர்கள்தான் மறுபடியும் ஜெ கட்சியில் போய் இணைவார்கள் என்று சன் டீவிக்கு அளித்த பேட்டியில் அரங்கநாயகமே சொல்லிவிட்ட பிறகு, நாம் தனியாகச் சொல்ல என்ன இருக்கிறது?!



காத்திருந்தால் வராது!

• அ. முஸ்தபா, தக்கோலம்.

? டெண்டுல்கருக்கு என்ன ஆச்சு...?

! என்னமோ ஆயிடுச்சு...! அதனால்தான் 'இடதுகாலில் Padஐ முதலில் கட்டினால்தான் ராசி, வலது காலில் கட்டினால் மேட்ச் போய்விடும்' என்பதாகத் தீவிரமாக சிந்தித்து, பகுத்தறிவு பூர்வமான கருத்துக்களைத் தம் ஸ்டார் பிளஸ் பேட்டியில் (கவாஸ்கருடன்) சொல்லியிருக்கிறார்!

• மு. இரவிச்சந்திரன், சேலம் –9.

? 'போன இடத்திலாவது விசுவாசத்தோடு இருங்கள்' என்று முத்துசாமி, கண்ணப்பனைக் கிண்டலடிக்கிறாரே திருநாவுக்கரசு?

! திருநாவுக்கரசு தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்காத ஒரு உபதேசம்! உபதேசம் செய்பவருக்கு, உபதேசம் செய்ய ஒரு தகுதி வேண்டாமா...?

• பா. ரவிச்சந்திரன், அசூர்.

? 'நல்ல தரமான கதைகளுடன் யாரும் என்னிடம் வருவதில்லை...' என்று ரஜினி வருத்தப்பட்டிருக்கிறாரே...?

! தரமான கதை எழுதுவோர் தேடி வர மாட்டார்கள். நாம்தான் தேடிப் போக வேண்டும்!

• டி.ஏ.சி. பிரகாஷ், திருச்செங்கோடு.

? இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்? உங்களால் ஊகிக்க முடிகிறதா...?


! யாராகயிருக்க வேண்டும் என்று சொல்லத் தயார். ஆனால் யார் என்று ஊகிப்பது கஷ்டம்!

• ஆர். சுப்பராவ், சென்னை – 61


? 'நீதிபதி ஜெயின் கொடும்பாவியைக் கொளுத்துகிறார்களே...!' என்ற 'ஜெ'யின் ஒப்பாரி குறித்து...?

! கொடும்பாவி கொளுத்தினால் கெரசின் வீணாகிறது; பாலாபிஷேகம் செய்தால் பால் பாழாகிறது... வேறு ஒரு பயனுமில்லை. 'இந்த அநாகரிகங்களுக்கு முடிவு கட்டுங்கள்' என்று கூறியிருந்தால் பாராட்டலாம். ஹூம்...


• வெட்கம்....



• ... மானம்....



• .... ரோஷம்....



• டி. வெங்கட், சி.கே. மங்கலம் (அஞ்சல்)

? தமிழ் மாநில காங்கிரஸின் பலம் எது? பலவீனம் எது...?

! பலம் – தி.மு.கவு

• உதவாத கிண்டல்



டனான உறவு. பலவீனம் - அதற்கு வந்துள்ள சோதனை. தேர்தலைச் சந்திக்காமல், திமுக நீங்கலாக காங்கிரஸ் ஆதரவுடன் மீண்டும் ஓர் ஐமு அரசை அமைத்துவிடலாம் என்று தமாகா செயல்பட்டது. அதன் வரலாற்றில் ஒரு கரும்புள்ளி.

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? 'வீரப்பனைக் காட்டிக் கொடு' என நக்கீரன் கோபாலைத் தமிழக அரசு நிர்ப்பந்தப்படுத்துவது நியாயமா?

! நியாயமல்ல; ஒரு பத்திரிகையாளரை அவருக்குத் தகவல்கள் எப்படிக் கிடைத்தன... என்று சொல்லும்படி நிர்ப்பந்திக்க முடியாது– 'ஜெயின் கமிஷன் அறிக்கை எப்படி 'லீக்' ஆயிற்று... சொல்லு,' என்று 'இந்தியா டுடே'யைக் கேட்க முடியாது. அதுபோல்தான் இதுவும்.

...ன்ன?

● ஏ. குமாரவேலு, பாளையங்கோட்டை❐

? ஜெயலலிதாவின் தினசரி அறிக்கைகள் அவருக்கு மக்களின் வாக்குச்சீட்டைப் பெற்றுத் தருமா...?

! திமுக ஆட்சியில் நடந்த, நடக்கின்ற சில தவறுகள் 'ஜெ'க்குக் குளிர் காய உதவலாம். ஆனால், அவருடைய நடுக்கு ஜுரத்தைப் போக்கி விடாது. அந்த ஜுரம்தான் தினசரி அறிக்கைகளைத் தயாரிக்கிறது என்பது வாக்காளர்களுக்குத் தெரியும்.

• தகுதி என்ன?...



• அழகுக்கு விலை!





• பத்திரிகை உரிமை

● செந்தாழை நாதன், செந்தாரப்பட்டி.

? இரண்டு பெண்களைத் தொடர்ந்து, மும்பை அழகி டயானா ஹைடன் உலக அழகிப் பட்டம் பெற்றது குறித்து...?


! இந்த உலக அழகிப் பட்டத்தைப் பெறுவதற்கு முன் என்னவெல்லாம் அழகுச் சிகிச்சை செய்து கொள்கிறார்கள் என்ற பட்டியலைப் பார்த்தால் கன்றாவியாக இருக்கிறது! பணமும் புகழும் அந்த சித்திரவதைகளையெல்லாம் ஈடு செய்துவிடும் போலும்!

● ஆ. தமிழ்துரைசாமி, பாலசமுத்திரம்.

? ஜெயின் அறிக்கை மூலம் ஆதாயம் பெற நினைத்து அவமானப்பட்டு நிற்கும் காங்கிரஸ் தேற வழி என்ன...?

! தேறாமல் இருப்பதுதான் வழி. வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பலத்த அடி வாங்க வேண்டும். அப்புறமாவது புத்தி தெளிகிறதா என்று பார்க்க வேண்டும்.

❐ ரூ 50 பரிசு பெறுபவர்:
ஏ. குமாரவேலு,
8/1, போலீஸ் ஸ்டேஷன் தெரு,
பாளையங்கோட்டை, 627 002.



வட்டமேஜை

வெல்கம் சுமி!

◆ பிரயாணத்தின்போது பஸ்ஸிலோ, ரயிலிலோ கல்கியைக் கையில் வைத்துப் படித்துக் கொண்டிருந்தாலே, படிப்பவரை மற்றவர்கள் மரியாதையுடன் பார்ப்பதையும் - மரியாதையுடன் பேசுவதையும் அனுபவபூர்வமாக நான் பல முறை கண்டிருக்கிறேன். பத்திரிகையைப் படித்துவிட்டு தூக்கியெறிய முடியாமல் சேர்த்து வைக்கும் வழக்கத்தை ஏற்படுத்தியதே கல்கி எனலாம். அப்படிப்பட்ட ஸ்தாபனத்தை நிறுவிய கல்கி சதாசிவம் அவர்களுக்கு வாசகர்கள் சார்பாக என் கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கிறேன்.

அத்தியூர், மு. தவசியப்பன்

◆ பழுத்த பழமாக அட்டையில் காட்சியளிக்கும் அமரர் கல்கி சதாசிவம் அவர்கள் மறைந்து விட்டார் என்பதை எங்களால் ஏற்க இயலாது. இப்போதும் கல்கி குடும்பத்தாருடனும் அதன் வாசகர்களான எங்களுடனும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார். நிறை வாழ்வு எய்தியவர்களுக்கு மறைவு என்பது ஏது?

சேலம் - 2, சூர்யநிலா

◆ மத்திய பாதுகாப்பு இணை அமைச்சர் என்.வி.என். சோமு அவர்களைப் பற்றி சென்னை உடுப்பி ஹோம் பங்குதாரர் கூறியவற்றை தங்கள் பத்திரிகையில் வெளியிட்டு, தி.மு.க.வில் அங்கம் வகிக்கும் எங்களைப் போன்ற இளைஞர்கள், அவரைப் போலவே கொண்ட கொள்கையில் உறுதி - தலைவரிடம் பற்று, கடுமையான உழைப்பு, பொது மக்களிடம் பரிவு, பதவி வந்தும் எளிமை, மக்கள் சேவை ஆகியவற்றோடு வாழ வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தி விட்டீர்கள்.

சிதம்பரம்,
சிவா. கண்ணதாசன்

◆ சோனியாவே வந்தாலும் ஜெயிக்க முடியாது என்று சொல்லி காங்கிரஸ்காரர்களின் ஒட்டுமொத்த சாபத்தை இவ்வாரத் தலையங்கம் வாங்கியிருந்தாலும் கூட.... 'உண்மை அதுதானே' என்று நடுநிலையாளர்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறது.

சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்

◆ குடிக்கிற தண்ணியில இத்தனை சங்கதிகளா? நுணுக்கங்களா? வியக்க வைத்தது - 'டைனிங் டேபிள்' கட்டுரை. வாரந்தோறும் வருகிறாரா சுமி...? வெல்கம்!

வலையபட்டி,
எம். பாலசுப்பிரமணியன்

◆ பத்மநாபாவின் துணைவியார் ஆனந்தியின் பேட்டியைப் படிக்கும்போதே மனத்தை வருத்தம் வாட்டியது. இதில் நீங்கள் வேறு, அவர் திருமணப் படத்தைப் போட்டு கண்ணில் நீரை வரவழைத்து விட்டீர்கள். ஆனந்தியின் மனம் நிம்மதி பெற இறைவனை வேண்டுகிறேன்.

தூத்துக்குடி - 2, தி. ரமேஷ்

◆ சில்லரைப் பிரச்னையால், கடைக்காரர்களிடமும், - கண்டக்டரிடமும் காசு இழந்து தவிக்கும் மக்களின் குறைகளை எடுத்துரைத்த தங்களுக்கு நன்றி.

சந்தை புதுப்பாளையம்,
எம். செந்தில்குமார்

◆ 'பழசைக் கொடுத்து புதுசு வாங்கினால்' கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. யாருமே தன் பொருளை நஷ்டத்திற்கு விற்க மாட்டார்கள் என்ற வசந்தகுமாரின் கூற்று நூற்றுக்கு நூறு சரியானதே...!

உத்திரங்குடி, வி. கவிதா

◆ 'காதில் விழுந்தவை'யில் இல்லப்பாவின் குறும்பு வாழப்பாடிக்கு ஒரு இடி.

தூத்துக்குடி - 1,
சிவராமசுப்பிரமணியன்

◆ த.மா.கா. மேயரையும், துணை மேயரையும் பேட்டி மூலம் மோத வைத்த பியூட்டியை ரசித்தேன்.

கோவை, ஏ.எஸ். இராமசாமி

◆ 'நான் யாரையும் காதலிக்கவில்லை' என்று போல்டு லெட்டரில் போடச் சொன்ன கும்ப்ளே... 'மேனகா வேறு இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் எங்கள் குடும்பம் அவரை ஏற்காது என்றும், குடும்பத்தை மீறி நான் எக்காரியமும் செய்வதாக இல்லை' என்றும் கூறியிருப்பதிலிருந்து 'கும்ப்ளே - மேனகா காதல்' உண்மையோ... இனப்பிரச்னை தான் இடையூறு செய்கிறதோ என்றும் சந்தேகப்பட வைக்கிறதே!

திருவாரூர், எஸ். கானிதாஸ்

◆ கோதா பார்த்தசாரதி அவர்களின் 'சப்பாணி' போட்டிக் கதை படித்தேன். ஒரு தாயின் தூய அன்பைக் கதையில் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். கதையின் முடிவைப் படிக்க முடியாமல் கண்களில் கண்ணீர் வெள்ளம் வழிந்தோடியது. ○

கோவை,
கசிலா செனாய்

கல்கி கன்ஸல்டன்ஸி

திணறப் போகிறார் புது நிதியமைச்சர்!

டாடா க்ரூப்பைச் சேர்ந்த இரண்டு பிரும்மாண்ட நிறுவனங்கள் டெல்கோ, டிஸ்கோ. இந்த இரண்டு நிறுவனங்களின் லாபமும் போன வருடத்துக்கு இந்த வருடம் கணிசமாகக் குறையப் போவதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிகின்றன. அரையாண்டுக் கணக்குகளைப் பார்க்கும்போது இது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. தென்னாட்டில் உள்ள ஒரு மிகப் பெரிய லாரி உற்பத்தி செய்யும் கம்பெனிக்கும் இதே கதிதான்! அனேகமாக எல்லா முன்னணி நிறுவனங்களுக்கும் இது மிக மோசமான நிதியாண்டாகவே இருக்கிறது.

இதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்தால், பயமாகவே இருக்கிறது!

லாபம் குறையக் குறைய, நிறுவனங்கள் அரசுக்குச் செலுத்தும் வரித்தொகையும் குறைந்து போகும். இதே நிலை அடுத்த ஆறு மாதங்களுக்குத் தொடர்ந்தால், புதிதாய்ப் பொறுப்பேற்கப் போகும் நிதியமைச்சர் பாடு திண்டாட்டம்தான். அரசின் வருவாய் கணிசமாகக் குறைந்து போகுமே! பொருளாதாரத் தேக்கம் குறித்து எல்லோரும் உணர்ந்திருக்கிறார்களேயொழிய யாருக்குமே உடனடியாக என்ன நிவாரண நடவடிக்கை எடுப்பது என்று புரியவில்லை. போதாக்குறைக்கு அரசியல் ஆருடங்களில் வேறு, பாதி பொழுதுக்கு மேல் கரைகிறது!

ரூபாயின் மதிப்பு பயங்கரமாகக் குறைந்துள்ளதை அறிவீர்கள். இந்தச் சரிவைத் தவிர்ப்பதற்காக ரிசர்வ் வங்கி மூன்று பில்லியன் டாலர்களைத் தனது கையிருப்பிலிருந்து செலவிட்டிருக்கிறது! அதாவது, கூடுதலாக டாலர்களைப் புழக்கத்தில் விட்டு, ரூபாயின் மதிப்பைத் தூக்கி நிறுத்த முயன்றிருக்கிறது. ஆனால் இந்த முயற்சி பலனளிக்கவேயில்லை. ஒரு டாலருக்கு நாற்பது ரூபாய் என்கிற வரலாறு காணாத சரிவு ஏற்பட்டு விட்டது! (இந்தியா சுதந்தரம் அடைந்தபோது இருந்த மதிப்பு டாலருக்கு 2.80 ரூபாய்!)

இந்த முறை ரூபாய் மதிப்பு ரொம்பக் குறைந்ததற்கான காரணம், பலர் வெறும் லாப நோக்குடன் டாலர்களை சந்தையில் வாங்க முயன்றதுதான் என்று சொல்லப்படுகிறது.

இந்த விளக்கம் நம்பும்படியாக இல்லை. யார் இந்த லாப நோக்காளர்கள்? அவர்களுடைய திடீர் டாலர் தாகத்துக்கு என்ன காரணம் இருக்க முடியும்? கம்பெனிகள்தாம் டாலர்களை அபரிமிதமாக வாங்கினவென்றால் எந்த நோக்கில்...? அயல்நாடுகளில் ஓரளவு பணம் வைத்துக் கொள்ள நமது நிறுவனங்களுக்கு ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளதே. அது இருக்கையில் அவர்கள் ஏன் சந்தையில் டாலர் வாங்க வேண்டும்?

ஏற்றுமதியாளர்கள் தங்களது அன்னிய நாட்டுச் சம்பாத்தியத்தை ஆறு மாதங்களுக்குள் இந்தியாவுக்குள் கொண்டு வந்து விட வேண்டும் என்ற விதி என்னவாயிற்று...?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நம்பகமான பதில்களே இல்லை.

- வி. கோபாலன்



கதை – 1

ரிஷபன்

வித்யா பேசாமல் திரும்பிப் போனாள். எனக்குத்தான் வியர்த்துக் கொட்டியது.

எதிரே அரவிந்தனைப் பார்த்தேன். கூலிங்கிளாஸ் கறுப்பு மறைப்பில் உயிரற்ற அவன் விழிகள்.

என்ன செய்து விட்டேன்! ஏன் தடுமாறிப் போனேன். எது என்னைத் தூண்டியது. வித்யாவின் அபரிமித அழகா? 'பார்வையற்ற அரவிந்தனுக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா' என்ற பொறாமையா.

"ராஜன், டீ குடிக்காமல் என்ன யோசனை?"

அரவிந்தன் சொன்னதும் எனக்கு திடுக்கிட்டது.

"இதோ... சூ... சூடா இருக்கு."

"வித்யா, எனக்கு அரை தம்ளர் போதும்" என்றான்.

வித்யா அவனை நெருங்கி தம்ளரைக் கையில் கொடுத்தாள். சுவாதீனமான நெருங்கல். உரிமை. உறவு தந்த பரிசு. நான் எந்தத் துணிவில் அவளின் விரல்களைப் பற்றினேன்? பதறாமல் விடுவித்துக் கொண்டு டீ கப்பை டீபாய் மீது வைத்தபோது அவள் பார்வையைச் சந்திக்க மனசு நடுங்கியது.

நடந்தது மீண்டும் மனத் திரையில் ஓடியது. உடம்பு மீண்டும் நடுங்கியது.

டீ கப்பை எடுத்து உறிஞ்சினேன்.

"வித்யாவை நான் ஏன் கல்யாணம் செய்து கொண்டேன் தெரியுமா? அழகாய் டீ போடுகிற திறமைக்காகவே."

அரவிந்தன் பளீரெனச் சிரித்தான்.

என் சிரிப்பு சோகையானது. வித்யா எங்கள் எதிரேதான் அமர்ந்திருந்தாள். வேறு புறம் பார்ப்பதுபோல் அவளைப் பார்க்க முயன்றேன்.

"ராஜன், அடுத்த ஸண்டே இங்குதான் உங்களுக்கு சாப்பாடு. சரியா" என்றான்.

"இல்லே... வேணாம்."

"வித்யா, நீயே சொல். எத்தனை நாட்களாய்ப் பழக்கம்? ஒரு தடவையாவது நம் வீட்டில் சாப்பிட்டால் என்னவாம். உன் சமையலைப் பற்றி பயமா."

வித்யாவைப் பார்த்தேன். அந்த விழிகள் அரவிந்தனுக்காகவும் சேர்த்துப் பார்க்கிற தோரணையோடு என்னை ஊடுருவின.

"வாங்க ராஜன். உங்களுக்காக இல்லா விட்டாலும் என் கணவருக்காக. அவரோட அன்பு மனசுக்காக. எல்லோரையும் நேசிக்கிற தன்மைக்காக. யாரோடயும் தப்பு கண்டுபிடிக்கத் தெரியாத குழந்தை போல இருக்காரே... அதுக்கு மதிப்பு தரவாவது வாங்களேன்..." என்றாள் படபடவென.

"ஏய்... வித்யா... என்னது லெக்சர்..."

காதலித்து மணந்து கொண்டவர்கள். அதன் வீரியம் குறையாமல் போஷிப்பவர்கள். ஏன் அற்பனாகிப் போனேன்...

"வரேன்... நிச்சயமா வரேன்" என்றேன் அரவிந்தனைப் பற்றிக் கொண்டு.

"என்னது. ஈரமா இருக்கு?" என்றான் என் விரல்களைத் தொட்டு. ○

● கிருஷ்ணகான சபாவில் 'நிருத்ய சூடாமணி' விருது பெறும் லீலா சாம்சன், மராத்தி ஆனாலும், நன்றாகத் தமிழ் பேசுவார். கலாக்ஷேத்திரா மாணவி; இப்போது தில்லிவாசி. ப்ரியங்கா காந்திக்கு ஆறு வருஷங்கள் பரதநாட்டியம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்!

● ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வி. ராமமூர்த்தி 'நீரஜா' என்கிற புனை பெயரில் இசை-நடன விமர்சனங்கள் எழுதுவார். இன்னொரு ரிட்டயர்டு ஐ.ஏ.எஸ்.காரர் என். ராஜகோபாலன் 'த கார்லண்ட்ஸ்' என்ற தலைப்பில் இசைக் கலைஞர்களின் வரலாற்றைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். நான்காவது பாகம் வெளிவந்துவிட்டது! சென்னை கார்ப்பரேஷன் நிதித்துறை இயக்குநர் டி.கே. ராமச்சந்திரன் ஐ.ஏ.எஸ், கச்சேரி செய்யக்கூடிய அளவுக்குப் பாடுகிறார்!

● புதுக்கவிதைக்காரர் எஸ். வைத்தீஸ்வரன், சரளி - ஜண்டை வரிசை

இசைக்கு மட்டுமே என்று ஒரு புத்தகக் கடையை இருபதாண்டுகளாக தொடர்ந்து நடத்தி வருகின்றனர் பாலசுப்ரமணியன் - கிருஷ்ணமூர்த்தி சகோதரர்கள். பெயர் 'கர்னாடிக் மியூசிக் சென்டர்'

சிலப்பதிகார கானல்வரி ஆராய்ச்சி முதல் திரையிசைப் பாடல்கள் வரை இசை தொடர்பான சகலமும் இங்கே சங்கமம்!


• பாலசுப்ரமணியன்

கர்னாடக இசை தொடர்பாக மட்டும் 1500 புத்தகங்களைத் தொகுத்துள்ளனர்! பரத நாட்டியம், யக்ஷ கானம், கதகளி, மோகினியாட்டம், பாங்ரா நடனம் என நாட்டிய நூல்களும், 'தப்பு' முதல் 'மிருதங்கம்' வரையிலான இசைக்கருவி சம்பந்தமான நூல்களும் தனித்தனி வரிசையில் வைத்திருக்கின்றனர்.

1917ல் வந்த 'கானாமிருத சாகர'த்தைத் தேடி வைத்திருப்பது முக்கிய அம்சம். இசைப் புத்தக உலகின் தந்தை பேராசிரியர் சாம்பமூர்த்தியின் 33 வால்யூம்களும் இருக்கின்றன. இசை தொடர்பான 'சுருதி', 'ஸரிகமபதநி' போன்ற மாதப் பத்திரிகைகளுக்கு விற்பனை மையமாகவும் இருக்கிறது.


பாலசுப்ரமணியனுக்கோ, கிருஷ்ணமூர்த்திக்கோ சங்கீதத்தில் அதிகம் பரிச்சயம் கிடையாது. திருவையாறு இசைவிழா

பாட்டுப் 'படிக்க' வாரீங்களா?

வுக்கு வருடா வருடம் இவர்களது சிற்றப்பா இரண்டு கட்டுகளில் புத்தகங்களைக் கொண்டு போவாராம்.

"சங்கீதம் தொடர்பான புத்தகங்கள் திருவையாறில் கிடைக்கிறது. மற்ற எந்த இடத்திலும் கிடைப்பதில்லை" என்ற சங்கீத ரசிகர்களின் ஏக்கத்தைப் போக்கவே சென்னையில் தொடங்கி இருக்கின்றனர். பெங்களூர், காசி, ஹரித்துவார்... இப்படிப் பயணம் போகும் இடமெல்லாம் இசை தொடர்பான நூல்களைத் திரட்டும் பழக்கம் இருவருக்கும் முன்பே இருந்திருக்கிறது. பாலமுரளி கிருஷ்ணா, செம்மங்குடி போன்றோரின் வாழ்க்கை வரலாற்று நூலோடு வாக்கேயக்காரர்கள் (கம்போசர்கள்) வாழ்க்கை வரலாற்று நூல்களையும் சிறுகச் சிறுகச் சேர்த்துள்ளனர்.

உருது, இந்துஸ்தானி, கபி என கிளாசிக் இசை வகைகளிலும் கேரளா, கர்நாடகா என மண்ணுக்கே உரிய நாட்டுப்புற இசைகளின் தொகுப்புகளும் உண்டு. ஐம்பது ரூபாய் முதல் 5000 ரூபாய் வரையிலான புத்தகங்கள்! பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன.



பியானோவில் கர்னாடக இசையை வாசிக்க மட்டும் எட்டு வகைப் புத்தகங்கள் இருக்கின்றன! "கதிரி கோபால்நாத் சாக்ஸ போனில் செய்த புதுமைகள் நாளை நூலாக வரலாம்" என்கிறார்கள்.

தத்துவம், மருத்துவம், தியானமெல்லாம் இசையின் பகுதியாக இருக்கின்றன என்று வரிசையில் உள்ள புத்தகங்கள் காட்டுகின்றன. 'மியூசிக் இன் பிலாசபி', 'மியூசிக் இன் தெரப்பி', 'சைக்கோ மியூசிக்காலஜி', 'ஸ்பிரிச்சுவாலிடி ஆஃப் மியூசிக்' என நீளுகின்றன.

இசையின் வழியில் கணிதத்தை முறைப்படுத்தியிருக்கிறது 'மியூசிக் ஆஃப் மேத்தமெட்டிக்ஸ்' நூல். வேதங்கள் இசை வடிவில் தோன்றிய வரலாற்றைப் பகுக்கிறது மியூசிக் அண்ட் வேதா. உணவு, மழை, மரணம், போர், தூக்கம் எப்படி இசையால் அர்த்தமாகிறது என்பதுதான் இந்த வேதா நூல்.

கர்னாடக இசைக்கு முன் ஆதி இசையின் அமைப்பை பி.டி.ஆர். கமல தியாகராஜனின் 'தமிழிசையின் உண்மை வரலாறு' விவரிக்கிறது. (சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜனின் சகோதரர்). நாட்டிய சாஸ்திரத்தில் தேச ஒற்றுமை என்ற பத்மா சுப்ரமணியத்தின் நூல்தான் லேட்டஸ்ட்.

டான்ஸ் அஃப் சிவா, ஸ்மைல்ஸ் அஃப் முருகா எல்லாம் நம் மூர்க்காரர்கள் எழுதியவையல்ல. யூகோஸ்லோவியாகாரர்களின் சரக்கு! நாட்டுப்புற இசையின் என்சைக்ளோபீடியா, புராண என்சைக்ளோபீடியா வரிசைகள் நிறைய.

"இசை தொடர்பான ஆராய்ச்சிப் புத்தகங்கள் சற்று மந்தமாக விற்கின்றன. மற்றப் புத்தகங்களுக்கு நல்ல வரவேற்பு" என்கிறார் பாலசுப்ரமணியன்.

"கம்ப ராமாயணத்தை நாட்டிய வடிவில் மேடையேற்ற நிறைய பேர் விரும்பி வாங்குகின்றனர். அமெரிக்கா, மொரீஷியஸ், ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா என உலகளாவிய வாசகர்கள் தொடர்பு வைத்திருக்கின்றனர். திருப்புகழ், மூவர் தேவாரம், பன்னிரு திருமுறைகள் என பக்தி இலக்கியங்கள் சுரம் பிரித்து ஆங்கிலத்தில் நூல் வடிவில் இருப்பதால் வெளி நாட்டினர் விரும்பிக் கேட்கின்றனர். அவர்கள் எங்களிடம் அக்கவுண்ட் வைத்திருக்கின்றனர். அவ்வளவு பழக்கமாகி விட்டது" என்றார்.

— சு. வேணுகோபால்

படங்கள் : ஸ்ரீஹரி

களுக்கு ஏற்ற வார்த்தைகளைக் கவிதை வடிவில் உருவாக்கியிருக்கிறார். பிருஹத்வனி அமைப்பு இதை 'காஸட்'டாக, மூப்பனார் தலைமையில் வெளியிட்டிருக்கிறது.

- 'பாரத ரத்னா' அப்துல்கலாம் வீணை வாசிப்பார். விவசாய விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் டிசம்பர் சீஸனில் கச்சேரிகளை ரசிக்க என்றே நேரம் ஒதுக்கிக் கொள்ளுவார்!

- பிரபல மலையாள எழுத்தாளர் டி. பத்மநாபன், கச்சேரிகள் கேட்பதற்காகவே வருடம் தோறும் டிசம்பர் மாதம் சென்னைக்கு வந்துவிடுகிறார். மாதம் முழுக்க இங்கேதான் முகாம்!

- கஸல் பாட்டுக்கள் பாடகரின் குரல் வளத்தில்தான் வெற்றி பெறும். இந்த வெற்றியடைந்த கஸல்களை வீணை காயத்ரி வீணையில் வாசித்திருக்கிறார்!

மறுபடியும்...

ரிஷபன்

பூர்ணிமா தூங்கி விட்டது. தொண தொணவென்று கேள்விகள். பதில் தெரிந்த, தெரியாத, சொல்ல முடியாத ரகக் கேள்விகள்.

"பாத்ரூம் போயிட்டியா'' என்றேன் பேச்சை திசை திருப்ப.

"இப்பதானே போனேன்... நீதானே பேஸ்ட் கொடுத்தே. நைட்லயும் பிரஷ் பண்ணிட்டு படுக்கணும்னு..."

"ஆ...மா. அப்பாக்கு மறந்து போச்சு..."

"கலர் பாக்ஸ் மறந்துராதே."

"என்ன...?"

"பார்த்தியா. எங்க மிஸ் திட்டுவாங்க. கிளீன் அண்ட் கிரீன் இண்டியா வரையணும்... கலர் பாக்ஸ் வாங்கித் தான்னு சொன்னேனே..."

"ஓ... அதுவா... நிச்சயமா வாங்கிண்டு வரேன். நீ இப்ப தூங்கு. மணி பத்தாச்சு..."

"இல்லே... நைன் ஃபார்ட்டிதான்..."

கடவுளே... இவளுக்குத் தூக்கமே வராதா. அலுப்பு தட்டாதா. கண் சொருகாதா...

"அப்பா..."

"..................."

"எ...என்ன"

"தூங்கிட்டியா."

"இல்லம்மா..."

"அம்மா ரொம்ப அழகாப்பா..."

சட்டென்று வானில் மின்னல். கண்களை மூடிக் கொள்வதற்குள் பளீரிட்ட மின்னல். அதன் பிரகாசம். அதிர்ச்சி...

"எ...ன்ன"

"அம்மா... ரொம்ப... அழகா."

"எதுக்கு கேட்கறே"

"சொல்லு..."

"எதுக்குன்னு சொல்லேன்."

"எதிர்வீட்டுப் பாட்டி சொன்னாங்க. நான் அம்மாவைக் கொண்டிருக்கேனாம்... ரொம்ப அழகாம். ஒருதடவை சொன்னாலே புரிஞ்சுக்கிறேனாம்."

"நீ இப்பத் தூங்கப் போறியா... இல்லியா..."

"சரிப்பா..."

பூர்ணிமா திரும்பிப் படுத்துக் கொண்டது. மூடிய கண்கள் படபடத்தன. முதுகில் தட்ட முயன்றவனைத் தட்டி விட்டாள்.

"பூர்ணிமா..."

பதில் இல்லை. கோபம். பதில் தராததால் வந்த கோபம்.

"உன்னோட அம்மா ஃபோட்டோதான் நீ பார்த்திருக்கியே..."

"பேச வேணாம் போ. நான் தூங்கணும்..."

"உன்னோட அம்மா ரொம்ப அழகு... புத்திசாலி. ஒருதடவை சொன்னா..."

பாவி. ஒரு தடவை கூடச் சொல்லவில்லை. என்னை விட்டு ஓடப் போகிறேன் என்று.

'எப்படிடா அவளுக்கு மனசு வந்தது... சின்னக் குழந்தை முகம் பார்க்காமே... மான அவமானங்கூடப் பார்க்காமே...'

சுற்றம் என்னைக் கேள்விகளால் துளைத்தது.

'தெரியலியே... நான் ஒரு தப்பும் பண்ணலியே'

'அப்பவே தெரியும். இது எப்படி ஒத்து வரும்னு...'

'ஏன்... எப்படித் தெரியும்...'.

'நம்ம முரளிக்கு... ப்ச்... என்னதான் ஆயிரம் குணம் இருந்தாலும்... போலியோ அட்டாக் ஆன இடது காலை இழுத்து இழுத்து...'

சட்டென்று எழுந்து ஓடத் தோன்றியது. முடியாது. தடுக்கும். தவறி விழத் தூண்டும்.

'ஓடி வாங்களேன். பஸ்ஸுக்காக அரை மணி நின்னோம்... பஸ் வரப்ப சுறுசுறுப்பு இல்லாம...'

'அவனால எப்படிடி ஓடி வர முடியும்... புத்தி கெட்டத் தனமா...'

'அம்மா... வேணாம்மா... அவ தப்பா பேசலே... என் ஊனம் பத்தி அவதான் ஞாபகப்படுத்தாம இருக்கா...'

'எப்படி எல்லாம் தங்கமா பழகினியேடா ராஜா. உன்னைப் போயி தவிக்க விட்டு...'

மனசுக்குள் துண்டு துண்டாய் இரைச்சல்கள். கடவுளே... இந்தக் குழந்தை போல பொய்களில் சமாதானமுற்று எளிதில் தூங்கிப் போகிற வரம் தரக் கூடாதா எனக்கு?

பூர்ணிமா திரும்பிப் படுத்தது. அதே ஜாடை. அதே முகவாய். அழுத்தமான மூக்கு. 'மறந்து போ' என்று சாபம் கொடுத்து விட்டுப்

போனவளை மீண்டும் நினைவூட்டுகிற அமைப்பு.

ஃபோன் மணி ஒலித்தது.

"ஹலோ"

"நாதான். தூங்கியாச்சா..." சரகவின் குரல் கேட்டது. உடன் வேலை பார்ப்பவள்.

"இல்லே..."

"பூர்ணிமா?"

"ம்... இப்பதான் தூங்கினா..."

"அப்புறம்... என்ன முடிவு பண்ணீங்க..."

"இல்லே... நான் இன்னும் அதைப் பத்தியே யோசிக்கலே..."

"இன்னும் என்ன யோசனை... எம் மேல நம்பிக்கை இல்லியா... இல்லே... நான் உங்களுக்குத் தகுதி இல்லையா..."

"இல்லே... சரக... எனக்குத்தான்... நாதான் தகுதி இல்லே..."


"கடந்ததை நினைச்சு குழப்பிகிட்டு... எதிர்காலத்தைப் பாழ் பண்ணிக்காதீங்க... நான் இன்னிக்கு நேத்தா... பழக்கம்... ஐ நோ எவ்ரிதிங் அபவுட் யூ..."

மௌனமானேன். இதையேதான் ஓடிப் போனவளுக்கும் சொல்லப்பட்டது.

"முரளி... ஐ லவ் யூ... அவ விட்டுட்டுப் போனதே எனக்கு நல்ல வாழ்க்கை அமையணும்னுதான்... யெஸ்... அப்படித்தான் நம்பறேன்... இல்லேன்னா... ஆறு ஸிஸ்டர்ஸ்கூடப் பிறந்த எனக்கு மட்டும் அற்புதமா... ஒரு கணவனும் குழந்தையும் அமையுமா..."

குரல் குழைந்து இறங்கடித்தது. நாலு வருஷத் தனிமை உடம்பையும் மனசையும் சுட்டுக் கொண்டிருந்தது. முடிவில்லாத கேள்வி பதில்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி.

"சரி..." என்றேன் பலவீனமாய்.



பெரியாருக்குப் பிடிச்சது, எல்லோருக்கும் பிடிக்கணும்!

இந்த வாரம் நான் சொல்லப் போறது, பெரியாருக்கு ரொம்பப் பிடிச்ச விஷயம். அதுதான், வெங்காயம்! இதை யூஸ் பண்ணாதவங்க யாருமே இருக்க மாட்டாங்க. வெங்காய சாம்பார், வெங்காய தோசை, வெங்காயப் பச்சடின்னு எல்லார் டைனிங் டேபிள்லயும் அமர்க்களப்படும். ஆனாக் கூட இதுல என்ன சத்து இருக்குன்னு பல பேருக்குத் தெரியாது. தெரியாததைச் சொல்றதுக்குத்தான் கமி இருக்காளேன்றீங்களா.... ய்யா!

வெங்காயத்தில சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம்னு வித்தியாசம் இருந்தாக்கூட பலன் என்னமோ ஒண்ணுதான். அவங்கவங்க டேஸ்ட்டுக்குத் தகுந்தாப்ல யூஸ் பண்றோம், அவ்வளவுதான்! 'வெங்காயத்த உரிச்சுப் பார்த்தா ஒண்ணுமே இருக்காது'ன்னு சொல்லுவாங்க தெரியுமா! அது நிஜந்தான். வெங்காயத்துல அதிகமா இருக்கறதே நீர்ச்சத்துதான். அதாவது தண்ணிதான். கூடவே கொஞ்சம் நார்ச்சத்தும் இருக்கு.

இதுல தண்ணி அதிகமா இருக்கறதாலதான், பிரியாணி சாப்பிடறவங்க, கூடவே வெங்காயப் பச்சடியையும் சேர்த்துச் சாப்பிடறாங்க. ஏன்னா... பிரியாணி அதாவது 'நான்-வெஜ்' அயிட்டங்கள் சாப்பிட்டா ஒடம்பு ரொம்ப சூடாயிடும். அதைத் தணிக்கத்தான் வெங்காயம். இதுல இருக்கற நீர்ச்சத்து சூட்டைத் தணிச்சிடுது!

ஒருநா என்னோட ஃபிரண்ட்ஸுங்கனோட சைனீஸ் ரெஸ்டாரண்டுக்குப் போயிருந்தேன். (ச்சே ச்சே! எங்க போனாலும் நான், வெஜ்தான் சாப்பிடுவேன்!) அங்க, நம்ம சின்ன வெங்காயத்தை உரிச்சு வினிகர்ல போட்டு ஊறவெச்சு, ஊறுகா மாதிரி பரிமாறினாங்க. எதுக்கு? வெங்காயம் சூட்டைத் தணிக்கும்னுதான். அதனாலதான் ஃபாரின்ல எல்லாம், நம்ம மாதிரி வெங்காயம் சேர்த்த மசாலா அயிட்டங்கள் சாப்பிடாததால வினிகர்ல ஊறவெச்சு ஊறுகா மாதிரி விரும்பிச் சாப்பிடறாங்கன்னு பிரேமி சொன்னா!

அப்புறம் இன்னொண்ணு.... ஹார்ட் பேஷண்டுகள் கூட வெங்காயத்தைத்



தைரியமா சேர்த்துக்கலாம்னு விஜயாவும் அமுதாவும் (உணவு நல ஆலோசகர்கள்) அடிச்சுச் சொல்றாங்க. ஏன்னா முன்னாலயே சொன்ன மாதிரி, இதுல முழுக்க முழுக்க நீர்ச்சத்துதான் அதிகமா இருக்குன்றதால ஒடம்புல இருக்கிற அதிகமான உப்புக் கழிவுகளையெல்லாம் வேர்வையாவும், யூரினாவும் வெளியேத்த இது ரொம்பவும் உபயோகமா இருக்கு. இதனால சிறுநீரகங்கள்ல கல்லு வருதுன்னு சொல்றாங்களே... (கல்லுன்றது நிஜமான கல்

இல்லை. வெளியேறாம தங்கிப் போற உப்புத்தான் இப்படி கல்லு கல்லா உருவாயிடுது) அது வராம தடுத்திடுது. எது? வெங்காயம்தான்!

மார்க்கெட்டுல கெடைக்குமானா, வெங்காயத்தோடு சேர்த்து அதன் தாளையும் வாங்குங்க. (தாளுன்றது வெங்காயம் முளைச்சு வருதே... அதேதான்) அதைத் தனியா பொரியல் பண்ணிச் சாப்பிடுங்க. அதுல நீர்ச்சத்து, நார்ச்சத்தோடு சேர்ந்து வைட்டமின் 'ஏ'வும் இருக்கறதால கண்ணுக்கு ரொம்பவும் நல்லது.

அப்புறம் பூண்டு. சிலருக்குத்தான் இந்த வாசனையே பிடிக்காது. ஆனாலும் சாப்பிடறது நல்லது. நாலு பேர் இருக்கற குடும்பத்தில தினமும் பத்துப் பன்னிரண்டு பூண்டுப் பல் சேர்ற மாதிரி சமைக்கிறது நல்லது.

காரணம் கேட்டீங்கன்னா ரொம்ப சிம்பிள். வாயுத் தொல்லையால அவதிப்படறவங்க சாப்பிட்டா உடனடியா வாயு ரிலீஸ் ஆயிடும். அப்புறம் ரிலீஃப்தானே! (கூடவே, பெருங்காயமும் சேர்த்துக்கிட்டா வாயுத்தொல்லை அநேகமா போயே போச்!)

பி.பி. இருக்கற உங்க அப்பா, அம்மாவுக்கு, முடிஞ்சா மாமியார், மாமனாருக்கு இந்தப் பூண்டைக் குடுத்துப் பாருங்க. பி.பி. கட்டுக்குள்ள அடங்கிடும். எப்படிக் குடுக்கணும் தெரியுமா? ஒரு அஞ்சாறு பூண்டுப் பல்லை அப்படியே தோலோடு எடுத்துக்கங்க. தோசைக் கல்லை அடுப்புல வெச்சு, ஒரு ட்ராப் எண்ணெய் விட்டு அப்படியே வதக்குங்க. அப்புறம் எடுத்துத் தோலை உரிச்சிட்டுச் சாப்பிடச் சொல்லுங்க. பி.பி. என்னமாக் குறைஞ்சிடும் தெரியுமா! ஆனா இப்படி தினசரி குடுக்கக் கூடாது. ஒன்ஸ் இன் எ வீக் குடுங்க. அது போதும்.

சில இளம் தாய்மார்களுக்கு அதிகம் பால் சுரக்கலியேன்ற கவலை இருக்கும். கவலையே வேண்டாம். தினசரி பூண்டு சேர்த்துக்கிட்டாப் போதும். உங்க குழந்தையின் வயிறு ரொம்பிடும்.

இந்த அயிட்டங்களோட சேர்த்து இஞ்சி பத்தியும் சொல்லிடறேனே... சாதாரணமா மசாலா அயிட்டங்களுக்கு இஞ்சி சேர்த்துக்கறது வழக்கம்தானேன்னுவீங்க. ஆனா மாசத்துக்கு ஒரு தடவையாவது இஞ்சியை நல்லா அரைச்சுப் பிழிஞ்சு இஞ்சிச் சாறு சாப்பிட்டுப் பாருங்க. வயித்துல இருக்கற பூச்சிங்க எல்லாம் குளோஸ் ஆயிடும், வயிறும் பளிச்சினு சுத்தமாயிடும்.

ஆனா ஒண்ணு. இந்த மாதிரி இஞ்சிச் சாறு சாப்பிடும்போது அரைச்சுப் பிழிஞ்ச உடனே லபக்குனு எடுத்துக் குடிச்சிடப் போறீங்க... அது தப்பு.

இஞ்சில அதிகம் சுண்ணாம்புச் சத்து இருக்கு. அதுல நம்ம உடம்புக்குத் தேவையில்லாத அயிட்டங்களும் இருக்கு. அதால அரைச்சுப் பிழிஞ்சு ஒரு அரை மணி நேரத்துக்கு அப்படியே ஒரு கண்ணாடி தம்ளர்ல வெச்சிடுங்க. அப்புறமா பார்த்தா மேல சாறும் தம்ளர் அடில ஒருவித செடிமெண்டும் இருக்கும். அந்த செடிமெண்டை அப்படியே விட்டுட்டு சாறை மாத்திரம் எடுத்துக் குடிங்க. அதான் நல்லது.

அய்யய்யோ... மசாலா அரைக்கறபோது இஞ்சியை அப்படியேதானே போடறோம்னு யாரும் அலற வேண்டிய அவசியமே இல்லை. ஏன்னாக்க, மசாலாவுல நீங்க சேர்க்கறது சின்ன சைஸ் இஞ்சிதானே... அதில தப்பில்லை. இஞ்சிச் சாறு எடுக்க பெரிய சைஸ் இஞ்சியை உபயோகிக்கறப்பதான் பிரச்னை!

சில மாமியாருங்களைப் பார்த்தீங்கன்னா... 'அய்யய்யோ இந்த ராட்சசி என்ன சொக்குப் பொடி போட்டாளோ... எம் பிள்ளை அப்படியே அவகிட்ட மயங்கிக்கிடக்கறானே'ன்னு பொலம்போ பொலம்புன்னு பொலம்புவாங்க. அது சொக்குப் பொடி இல்லை. சுக்குப்பொடி!

இஞ்சியைச் சமையல்ல சேர்த்துக்கறதோட சில பேரு சுக்கைப் பொடியாக்கி அதை டீயிலும் கொஞ்சம் போட்டுக் கலந்து குடுப்பாங்க. டீயும் கும்முனு மணமா இருக்கும். கூடவே இந்தச் சுக்குப் பொடியால வயிறு சுத்தமா – ஆரோக்கியமா இருக்கும். அதனால திருப்தியா சாப்பிடுவாங்க. அதுவும் இந்த மாதிரி சுக்கு டீ, காப்பி குடிக்கிறவங்களுக்கு, ஜலதோஷம் வரவே பயப்படும்!

இப்படி, புருஷனோட – குழந்தைங்களோட ஆரோக்கியத்துல அக்கறையா இருக்கற திருமதிகள் மேல, திருவாளர்களுக்கு அன்புகலந்த மயக்கம் இருக்கத்தானே செய்யும்!

நீங்களும் ட்ரை பண்ணிப் பாருங்களேன்! அப்புறம் இந்த சுமியை மறக்கவே மாட்டீங்க! பை! ●

— சுமி

கதை — 3

மனிதம்

வாசல் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. சுப்ரமணியாகத்தான் இருக்கும். சொன்ன நேரத்திற்கு வந்து விட்டான். 'ஞாயிறு காலை பத்தரை மணிக்கு' என்றால் மிகச் சரியாய் ஹால் கடிகாரம் சங்கீதம் எழுப்புகிற நேரத்தில்.

"வாடா... கன் டைம்... நீ வரலேன்னா என்ன செய்யறதுன்னு டென்ஷன்ல இருந்தேன்" என்றேன்.

மிக நிதானமாய் அரசு முறைப் பயணத்தில் வந்தவன் மாதிரி நடந்து சுற்றுப் பிரதேசங்களைப் பார்வையால் அலசினான்.

"கேசட் கொண்டு வந்தியா..."

குரல் என்னையும் மீறிப் பரபரத்தது.

வீட்டில் என்னையும் இப்போது வந்த சுப்ரமணியையும் தவிர வேறு யாரும் இல்லை... ஊஹூம். இன்னொரு நபரும் இருக்கிறார். வீட்டுக்குள் இல்லை. வெளியில்...

"பிளாஸ்க்குல காப்பியா" என்றான் மேஜை மீதிருந்ததைப் பார்த்து.

"எடுத்துக்கோ. சாப்பாடு ஆச்சா..."

காப்பியின் மணம் எனக்கும் வீசியது. அதே நேரம்...

"மெங்கா... மேய்.. மெங்கா"

வாசல்புறமிருந்து குரல் கேட்டது.

சுப்ரமணி காபியை மேலே சிந்திக் கொண்டான். வழிந்ததைத் துடைத்துக் கொண்டான்.

"யா... யாருடா அது..."

"பச்... என்னோட தலைவிதி... இன்னைக்கு எல்லாரும் ஜாலியா பங்களூர் மேரேஜுக்குப் போயிருக்க... நான் மட்டும் ப்ரெட் ஸ்லைஸ், ஆப்பின்னு அனாதையா ஒக்கார்ந்திருக்கேனே..."

என் குரலில் வெறுப்பு பூர்ணமாய் வெளிப்பட்டது.

"உன் பிரதர்னு சொல்லுவியே... அவனா... ஸாரி... அவரா..."

"அவனேதான்"

"அவரை ஏதோ இல்லத்துல... விட்டு வச்சிருக்கிறதா..."

எங்கேயும் இருக்காது... ரெண்டே மாசம். ஏக ரகளை பண்ணி திரும்பி வந்துட்டான். கட்டின பணம் பூரா வேஸ்ட். அழைச்சுகிட்டு போங்கன்னு டெலிகிராம்... கொடுக்கற அளவு ரோதனை பண்ணியிருக்கான்..."

"பாவம்டா... அவரை நான் பார்த்ததே இல்லை... எங்கே... நான் உள்ளே வரப்ப கவனிக்கலியே"

சுப்ரமணி எழுந்து விட்டான்.

"ப்ச்... ஒக்காருடா. பெரிய விஐபி. நீ அவசியம் பார்க்கணுமா..."

"ப்ளீஸ்ரா..."

"மெங்கா... மேய்..."

மீண்டும் அந்தக் குரல். தகரத்தைத் தரையில் தேய்த்த மாதிரி கர்ணகடூரமாய் தூக்கிப் போடுகிற அலைவரிசையில் கேட்டது.

"சனியன்... பேசாம கெடக்கறதா பாரேன்..."

பின்னாலேயே நானும் போனேன்.

வீட்டின் முன்புறம் இடது பக்க மூலையில் சின்னதாய் ஷெட். ஆஸ்பெஸ்டாஸ் கூரை. ஒரு நபர் நுழைகிற கதவு மடங்கி தொங்கிக் கொண்டிருந்தது. காற்றோட்ட வசதிக்காக சிமிண்ட் ஜன்னல்.

"அங்கேதான் இருக்கான்..." என்றேன் வெறுப்புடன் சுட்டிக் காட்டி.

ஒருவித ஆர்வமுடன் சுப்ரமணி ஷெட்டை நெருங்கினான். பாதி உடைந்து தொங்கிய கதவு வழியே எட்டிப் பார்த்தான்.





ரிஷபன்

பிரேதக் களை முகத்தில் சொட்ட, செம்பட்டை தலைமுடி தடித்த பிரஷ் போல சிலுப்பி நிற்க, புழுதி படர்ந்த உடம்பும், வெறித்த பார்வையுமாய் அந்த உருவம் கண்ணில் பட்டது.

சுப்ரமணியை வெறித்தது. மெல்ல எழுந்து நின்றது. கை உயர்த்தி கோணலாய் சிரித்தது.

"குட்மார்னிங்..."

"கு... குட்மார்னிங்..."

"நீ... நீ... நாணாதானே...."

அருகில் வந்து கை நீட்டித் தொட முயன்றது.

"டேய்... கைய எடுரா" என்று அருகே போய் இரைந்தேன்.

"ழெங்கா... தண்ணி வேணும்டா..."

"கொண்டு வரேன்... போ... போய் உட்காரு..."

"ழெங்கா... பசிக்குதுடா..."

"சனியனே... இப்பதானே தட்டு நிறைய சோத்தைக் கொட்டினேன்... பிசாசு மாதிரி திங்கறியே..."

சுப்ரமணிக்கு ஏனோ இந்த வகை



"ரெண்டு கடத்துக்கும் எக்ஸ்ட்ரா டிக்கெட் எடுத்தாகணும்."

– சாரங்கா

உரையாடல் பாதித்தது. அடி வயிற்றில் ஏற்பட்ட கரீர் இன்னமும் அடங்கவில்லை. இப்படியும் ஒரு பிறப்பா... கூன்... குருடு... செவிடு... பேடு நீங்கிப் பிறத்தலரிது... கடவுளே... என்னைக் காப்பாற்றினாய்..

"பாவம்டா... தாகமா இருக்கும் போலிருக்கு..."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே... என்னை விரட்டணும்... வேலை வாங்கணும்..."

"இங்கே அசௌகரியமா இருக்குமே... ஹால்ல ஒரு ஓரமா உட்கார வச்சு..."

சுப்ரமணி முடிக்கவில்லை. எனக்கு முகம் கடுத்தது.

"மணி... உனக்கு இவனைப் பத்தி தெரியாது... ஒரு தடவை எங்க மன்னி ஊர்லேர்ந்து வந்தப்ப இதே மாதிரி... இவனைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டா... கூட்டிண்டு வந்தா... தடால்னு மேலே பாஞ்சு... கையைப் பிடிச்சு... அசிங்கம் பண்ணிட்டான்... பிரிச்சு விடறதுக்குள்ளே வெலவெலத்துப் போயிருச்சு... நீ வா... உள்ளே போலாம்..." என்றேன்.

சுப்ரமணி அரை மனதாய்த் திரும்பிய அந்த வினாடியில் அவன் கையைப் பற்றிக் கொண்டது. எச்சில் ஒழுகி மேலே தெறித்தது.

"பைசா... பைசா... கொழு..."

"ஏய்... விடுரா..."

"இரேன் ரெங்கா. காசுதானே... நான் தரேன்..."

ஒரு ரூபாய் நாணயத்தைத் துழாவி எடுத்துக் கொடுக்கப் போனபோது தட்டிப் பறித்தேன்.

"பேசாம வா. முழுங்கி வச்சு பிராணனை வாங்கும்..."

சுப்ரமணிக்கு அதற்கு மேல் சுதந்திரமற்று செய்வது அறியாது என்னைப் பின் தொடர்ந்தான்.

விசிஆரில் கேசட் சொருகி டியூன் செய்ய, அலைகள் முடிந்து படம் தெரிந்தது.

"எப்படிரா கெடச்சது... புத்தம் புதுப் படம்." என்றேன் விழிகள் விரிய.

"ம்... ஒரு ஃப்ரெண்டோட கடைல இருந்தது. துபாய் பிரிண்ட்."

சுவாரஸ்யம் என்னை ஆக்ரமிக்க, சுப்ரமணியை மறந்து போனேன்.

சட்டென்று நினைவு வந்து திரும்ப, சுப்ரமணி இல்லை. எங்கே போனான்?

டிவியை ஆஃப் செய்து விட்டு வெளியே வந்தேன். ஷெட் அருகில் தண்ணீர் சொம்புடன் நின்றிருந்தான். நீர் வழிந்த உதட்டுடன் என் அண்ணா.

"சார்... நீங்க... வேலை... பார்க்கறீங்களா..."

"ஆமா... பெரிய ஆபீஸ்... நெறைய பேர் இருக்கோம். ரூம்ல ஏஸி பண்ணியிருக்கும். மழை பெஞ்சா ஜில்லுன்னு இருக்குமே... அது மாதிரி ஜில்லுன்னு..."

சராசரி மனிதனிடம் பேசுவது போல பேசிக் கொண்டிருந்தான்.

"காழ்... இருக்கா..."

"காழா..."

"அதான்... டுர்ர்... காழ்..."

"ஓ... காரா... இருக்கே... பெரிய கார்... ஸ்பீடாப் போகும்..."

முட்டாள். ஒரு ஞாயிறு பற்றி பேசி நிர்ணயித்த அட்டவணைகளை உதாசீனப்படுத்தி இங்கே வந்து நிற்கிறான்.

என்னுள் கண்மூடித்தனமாய் கோபம் கிளர்ந்தது. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்?

"வாடா... ஹி ஈஸ் இண்ட்ரஸ்டிங்... ரொம்ப ஆசையாப் பேசறார்... நான் சொன்னா... நல்லா புரிஞ்சுக்கிறார்..."

சுப்ரமணியின் கையை அவன் வருடிக் கொண்டிருந்த வினோதம் என் பார்வையில் பட்டது.

"ஏண்டா... ஒனக்கென்ன பைத்தியமா. இவன்கூட வந்து வேலை மெனக்கெட்டு நிக்கிறியே."

என்னையும் மீறி வார்த்தைகள் தடித்தன.

என் இரைச்சல் அண்ணனைப் பாதித்து, பற்றியிருந்த கையை உதறி ஷெட்டின் பிறிதொரு மூலையில் போய் ஒடுங்கிக் கொண்டான்.

சுப்ரமணி நிதானமாய் என்னைப் பார்த்தான்.

"எனக்கு... பை காட்ஸ் கிரேஸ்... பைத்தியம் இல்லைடா... அதனாலதான்... அவரோட பேசிக்கிட்டிருக்கேன்..."

கச்சேரிக்குப் பக்கவாத்தியம் அமைகிற மாதிரி இசைக்கலைஞரின் வாழ்க்கைக்குப் பக்கபலமாக கணவன்/மனைவி அமைய வேண்டும். ஆனால் பிரபலத்தின் வாழ்க்கைத் துணையாக இருப்பது சுலபமல்ல... சுதா ரகுநாதனின் கணவரும் ராஜ்குமார் பாரதியின் மனைவியும் இங்கே உரையாடுகிறார்கள்...

"கண்டிஷன் போட்டால்....



சாந்தலக்ஷ்மி ராஜ்குமார் பாரதி : ரகுநாதன் மாதிரி ஒரு மாப்பிள்ளை இருந்தா சொல்லுங்கன்னு பாடற பெண்களோட அப்பா - அம்மாக்கள் கேட்க ஆரம்பிச்சிருக்காங்க... ராஜ்குமார் கிட்டேயே அப்படி ஒருத்தர் கேட்டார்.. தெரியுமா?...

ரகுநாதன் : *(சிரிக்கிறார்)* ஆமாம் இப்போ அப்படிப் பலபேர் கேக்கறதாக நானும் கேள்விப்பட்டேன். ஆனா அந்த மாதிரியெல்லாம் 'கண்டிஷன்' போடறதால மட்டும் கல்யாணம் வெற்றிகரமாக இருந்துடாது... முதல் இரண்டு வருஷம் ரொம்ப ரொம்ப crucial. அந்த நேரத்துல ஆம்பளை எவ்வளவு கத்தினாலும் பொம்பளை வாயை மூடிக்கிட்டுப் போயிடணும்... ஏதோ male chavinist மாதிரி பேசறேன்னு நினைக்காதீங்க.... நான் சொல்றது practical solution... அந்த இரண்டு வருஷம் சண்டையை வளர்த்தாம விட்டா, பிரச்னை இருக்காது.

சாந்தலக்ஷ்மி : கல்யாணமாகறப்பபவ கலைஞர் ரொம்ப busyயா உச்சத்தில இருந்தார்னா கொஞ்சம் கஷ்டம்தான். அப்போ ஒரு ஆறு மாசம் கச்சேரிகளைக் குறைச்சுக்கிட்டு புது வாழ்க்கை பழகறதுக்கு நேரம் தரணும். எங்களுக்குக் கல்யாணம் ஆனபோது ராஜ்குமார் அவ்வளவு busy artist ஆக இருக்கலை. வேலையில வேற இருந்தார்... அவர் வேலையை விட்டுட்டு முழு நேரப் பாடகரானப்போ நான் வேலையிலிருந்தேன். அப்புறம் போகப் போக அவர் ரொம்ப busy யாயிட்டார். இரண்டாவது குழந்தை பிறந்த நேரத்துல நானும் வேலையை ராஜினாமா பண்ணிட்டேன். கூட்டுக் குடும்பத்துல பாட்டி தாத்தா குழந்தைகளை அருமையாத் தான் கவனிச்சண்டாங்க... ஆனா எனக்கென்னவோ நிம் மதியா வேலைக்குப் போக முடியலை. ராஜ்குமாருக்குப் போதுமான அளவு உதவ முடியலையேன்னு வேற தோணும்...

ரகுநாதன் : நீங்களும் ராஜ்குமார் மாதிரி இஞ்சினியரிங் பட்டதாரி இல்லையா...? இப்படி படிப்பை வீணடிக்க

• •

ஒரு முறை என் மாமனாரே என்னைத் தன் நண்பருக்கு அறிமுகப்படுத்தும் போது 'இது யார் தெரியுமா... பாடறாளே சுதா ரகுநாதன் அவ ஹஸ்பெண்ட்'னார்!

• •

றோமேன்னு தோணலையா...?

சாந்தலக்ஷ்மி : இல்லை... நான் தனிப்பட்ட முறையில கன்ஸல்டன்ஸி நடத்திட்டிருந்தேன். இப்போ திரும்பவும் ஒரு பார்ட்டைம் வேலை எடுத்துக்கிட்டிருக்கேன்...

ரகுநாதன் : நானும் என் பாங்க் வேலையில புரமோஷனெல்லாம் வேண்டாம்னு முடிவு பண்ணிட்டேன். இங்க மெட்ராஸ்லையே இருக்க முடியுது. சுதா பெரும்பாலான நேரம் ஊரில் இருக்கறதில்லை... குழந்தைகளை கவனிக்க முடியுது.

சாந்தலக்ஷ்மி : ஒரு பெண்ணுக்காக ஆண் இப்படி விட்டுக் கொடுக்கறதை உலகம் ஒத்துக்க ஆரம்பிச்சுடுத் துன்னு நினைக்கறீங்களா...?



ரகுநாதன் : யாராவது ஏதாவது சொல்லிட்டுத்தான் இருப்பாங்க... அதுக்கெல்லாம் நாம் வருத்தப்படக் கூடாது... சுதா இல்லைன்னா என்னால சமைக்க முடியும், வீட்டைப் பார்த்துக்க முடியும்... ஆனா அவளை மாதிரி என்னால பாட முடியுமா...? அந்த gift இருக்கற போது அதுக்கு எந்த வகையிலயும் நாம இடஞ்சல் பண்ணக் கூடாது...

கல்கி : நீங்க சொல்றதை ஏத்துக்க முடியுது. ஆனால்... உங்களுக்குன்னு குடும்பத்துக்குன்னு தனியா நேரம் ஒதுக்க சுதாவாலோ ராஜ் குமாராலோ முடியுதா?

ரகுநாதன் : சில சமயம் சுதா வீட்ல இருந்தால் கூட காலை சமையலை நான் செய்வேன். அப்பத்தான் குழந்தைகளோட அவளால கொஞ்சம் நேரம் இருக்க முடியும். எல்லாரும் ஒண்ணா சேர்ந்து ஹாலிடே ட்ரிப் போகணும்னு ஊட்டிக்குப் போனோம். அங்கேயும் விடாம போன் வந்துருத்து... பெங்களூர்ல கச்சேரி, மறுநாளே பாடணும்னு வற்புறுத்தல்! 'ஸார் நாங்க ஹாலிடேல இருக்கோம்'னா, 'டாக்டருக்கும் மியூசிஷியனுக்கும் ஹாலிடேயே கிடையாது'ன்னுட்டாங்க. கேட்டவர் முக்கியமானவர். தவிர்க்க முடியலை. பஸ்ஸைப் பிடிச்சு பெங்களூர் போய் இறங்கினா, இருட்டு பிரியாத நேரம். இந்திரா நகர் போலீஸ் பார்த்துட்டு சந்தேகமா கேள்வி கேட்கறாங்க...!

....காரியம் நடக்காது!”

சாந்தலக்ஷ்மி : குழந்தைகளோட ஹாலிடே போகணும்னு இட்டம் போட்டா மே மாசம் லீவுலதான் முடியும்.. ஆனா அந்த மாசம் வழக்கமாகவே ஏதாவது ஃபாரின் டூர் வந்துடும். இப்படி இரண்டு மூணு மாசம் டூரெல்லாம் போனா திரும்பி வந்து பத்து நாளைக்கு வேற கச்சேரியெல்லாம் ஒத்துக்கக் கூடாதுன்னு கண்டிஷன் போடுவோம்...! சனி, ஞாயிறு லீவு தான். கச்சேரியும் இருக்கும்... அதனால எல்லாருக்கும் சேர்ந்தாப்போல நேரம் கிடைக்கிறது அருமைதான்.

ரகுநாதன் : ஒரு முறை நானும் சுதாவோட வெளிநாட்டுக்குப் போனேன். ஏன்தான் போனோம்னு ஆகிப் போச்சு! எங்கே போனாலும் விருந்து, உபசாரம், சங்கீதத்தைப் பத்தியே பேச்சு... நமக்கு இது தாங்காதுன்னு முடிவு பண்ணிட்டேன். அப்புறம் நான் மட்டும் தனியா சில நண்பர்களோட அமெரிக்கா போய்ட்டு வந்தேன்.... அங்கே

எல்லாருமே எல்லா வீட்டு வேலையையும் தாங்களேதான் செய்துக்கறாங்க. இங்க நாம செய்யறது ஒண்ணும் புதுசில்லைன்னு புரிஞ்சுது.

கல்கி : இன்னாரின் கணவர் அல்லது மனைவின்னுதான் உங்களை அடையாளங் காட்டுவாங்க இல்லையா...?

ரகுநாதன் : அதனால ஒரு பிரச்னை வரலியாங்கறீங்க..! எதுக்கு வரணும்? அதுதான் நடைமுறை. அவங்க வட்டாரங்கள்ல என்னை வேற எப்படி அடையாளங்காட்டுவாங்க... எத்தனையோ பத்திரிகைல வெறும்ன சுதா ரகுநாதன்னு மட்டும்தான் பேர் போட்டு வரும். அந்த அழைப்பு முக்கியமா இருந்தா நானும் போகத்தான் செய்வேன். ஆனா என் ஃப்ரெண்ட்ஸே அந்தத் தப்பைப் பண்ணினா போகமாட்டேன். என் பேர் போடலை, வர மாட்டேன்னு சொல்லிடுவேன்... ஒரு முறை என் மாமனாரே என்னைத் தன் நண்பருக்கு அறிமுகப் படுத்தும்போது 'இது யார் தெரியுமா... பாடறாளே சுதா ரகுநாதன் அவ ஹஸ்பெண்ட்'னார்! வீட்ல வந்து சுதா கிட்டே சொன்னப்போ 'எங்கப்பா வரட்டும் அவரை விடறேனா பாரு'ன்னா...

சாந்தலக்ஷ்மி : எனக்கும் அந்த அனுபவம் நிறைய ஏற்பட்டிருக்கு. எங்க பிறந்த வீட்டு உறவுக்கார கல்யாணத்துல கூட என்னை ராஜ்குமார் பாரதி ஒய்ஃப்னு அறிமுகப் படுத்துவாங்க... நானும் விளையாட்டா கேட்டிருக்கேன், ராஜ்குமார் ஒய்ஃப்பா இப்பத்தானே ஆகியிருக்கேன். இத்தனை நாளா எங்க வீட்டுப் பொண்ணாதானே இருந்தேன்னு வேன்... இப்பெல்லாம் அது, நாளான பிறகு பழகிப் போச்சு, பெருமையாவும் இருக்கு. மேலும், ராஜ்குமார் என்னை சமமா மதிச்சு அந்தஸ்து கொடுக்கறப்போ மத்தவங்க சொல்றதுல என்ன இருக்கு.. ஒரு உயர்ந்த குடும்பத்துல பிரதிநிதியா நம்மைப் பார்க்கறாங்க. 'ஐயோ அவர் பாட்டைக் கேட்டுக் கவலையெல்லாம் மறந்து போய்டும்'னு ஒருத்தர் சொல்லும்போது அதை சாத்தியமாக்கறவருக்குத் துணையா நம்மால இருக்க முடியுதேன்னு தோணும்.

ரகுநாதன் : உண்மைதான். ஆனா, சில நேரங்கள்ல இந்த profession ரொம்ப எரிச்சலை ஏற்படுத்தும். இவங்க பாட்டுக்கு ஏதோ ஒரு தனி உலகத்துல இருப்பாங்க... நான் ஏதாவது பேசற நேரத்துல அவ பாட்டுக்கு கா ரி ஸ நின்னு பாடிக்கிட்டிருப்பா... திட்டத்தான் திட்டுவேன். அதுக்காக பாட்டைத் தூக்கிக் குப்பைல போடுன்னெல்லாம் சொல்ல முடியாது. அப்புறம் எத்தனையோ முக்கிய குடும்ப நிகழ்ச்சிகள்ல அவங்களால கலந்துக்க முடியாது. என் பெண்ணுக்கு முடி இறக்கி காது குத்தப் போறப்போ சுதாவால வர முடியலை... அந்தக் குறிப்பிட்ட நாளைத் தவறவிட்டா வேற தேதியில்லை...

சாந்தலக்ஷ்மி : எங்க பிள்ளையோட முதல் பிறந்த நாளன்னைக்கு ராஜ்குமாருக்கு ரெக்கார்டிங்! ஹோமத்தை முடிச்சுட்டு ரெகார்டிங் போய்ட்டு வந்து இடையில சாப்டார். திரும்பவும் ரெகார்டிங்குக்குப் போயிட்டார்...

• சுதா - ரகுநாதன் குடும்பத்துடன்



இதெல்லாம் தவிர்க்க முடியாதது. இதை சுலபமா ஒத்துக்க இப்போ கத்துக்கிட்டேன். ஆரம்பத்திலேயிருந்தே நான் இப்படிப் பக்குவத்தோட இருந்ததாகச் சொல்ல மாட்டேன். கொஞ்சம் வருத்தமெல்லாம் வரத்தான் செஞ்சது.. ஆனா அவர் பாடறபோது எல்லாம் மறந்து போயிடும். எனக்கு அதிகமா சங்கீத ஞானம் இல்லைன்னாலும் ரசிக்கத் தெரியும். அதோட அந்த சங்கீதத்தை நான் ரொம்ப ரொம்ப மதிக்கறேன். அந்த மதிப்புதான் எனக்குப் பக்குவத்தைப் படிப்படியா உண்டாக்கியிருக்கு. முதல்ல எல்லாம் உள்ளூர் கச்சேரி அவர் பாடினா கண்டிப்பா கூடப் போய்டுவேன். 'அந்த நாலு மணி நேரமாவது உங்களைப் பார்க்க முடியுதே...'ன்னு சொல்லுவேன். அப்புறம் அது மாறிப் போச்சு. சராசரியான ஒரு வெற்றிகரமான மனிதருக்கு மனைவியா இருக்கறவங்களைவிட ஒரு வெற்றிகரமான கலைஞருக்கு மனைவியா இருக்கறவங்களுக்குப் பொறுப்பு அதிகம்.. தார் மிகப் பொறுப்பு அது. அதை உணர்ந்தா, ஒழுங்கா நிறைவேத்தறோமான்னு கவலை

வந்துடும்; ஏக்கமெல்லாம் போயிடும்!

ரகுநாதன் : நீங்க ராஜ்குமார் பாட்டை விமர்சிப்பீங்களா?

சாந்தலக்ஷ்மி : இல்லை. அந்த அளவுக்கு எனக்கு ஞானம் கிடையாது.

ரகுநாதன் : நான் சுதாவோட பாட்டை நிறைய விமர்சிப்பேன். நீ என்னவெல்லாமோ ஜகஜ்ஜாலமா பல்லவி பாடி என்ன பிரயோ ஜனம். டிக்கெட் வாங்கிட்டு கச்சேரிக்கு வர்ற வன் சைக்கிள்ல திரும்பிப் போறச்சே அவன் மனசுல அந்தப் பாட்டு நிக்கணும். அவன் உதடு அதை முணுமுணுக்கணும்னு சொல்லுவேன்.

சாந்தலக்ஷ்மி : நீங்களும் பாடுவீங்களா...?

ரகுநாதன் : கொஞ்சம் வீணை வாசிக்கத் தெரியும். ஒரு நாள் ஏதோ தப்பா வாசிச்சேனா, சுதாவுக்கும் எனக்கும் சண்டை... அன்னியி லிருந்து வீணையைத் தொடறதில்ல... (மிக எளிமையாகச் சிரிக்கிறார்).

சாந்தலக்ஷ்மி : நான் அடிக்கடி கடந்த தலைமுறை கலைஞர்களோட மனைவி, குடும் பத்தார் பத்தி யோசிக்கறதுண்டு. நாம ஏதோ நிறைய செய்யறதா நினைச்சுக்கறோமே... அவங்க எப்படியெல்லாம் தியாகம் பண்ணி யிருப்பாங்க... இப்போ மாதிரி வருமானமும்



• ராஜ்குமார் பாரதி - சாந்தலக்ஷ்மி

வசதியும் கூட அப்பவெல்லாம் கிடையாது...

ரகுநாதன் : ஆனால், அப்போ பெண் கலைஞர்களுக்குப் பாதுகாப்பு தேவைப் படலை. கணவர் கூடவே இருப்பார். பிரிவுங் கறதும் அதிகமாயிராது. இப்போ அப்படி யில்லே. பிரிவும் அதிகம். அவங்களால தங்க ளைப் பாதுகாத்துக்க முடியும்னு நாம நம்பிக் கையோட இருந்தாலும் ஊர் உலகம் நம்ம மனசைக் கெடுக்க ஏதாவது வம்பு வளர்க்குது. திடீர்னு ஒரு சமயம் சுதாவும் நானும் விவா கரத்து பண்ணிட்டோம்னு பெரிய வதந்தி! வெளிநாட்டுலேருந்தெல்லாம் போன் கால்... விவரமா கேட்க பயப்படுவாங்க... 'சுதா இருக் காளா?'ன்னு வாங்க. இருக்காளேன்னு சொன்னா நம்பவே மாட்டாங்க...! அப்புறம் அவளையே பேசச் சொல்லுவேன். இது ரொம்ப வளர்ந்துட்டே போச்சு. நான் பார்த் தேன். சுதா வெளிநாட்டுக்குப் போய் ஒரு அவார்ட் வாங்கிட்டு வந்தா... Welcome back Sudha ன்னு பேப்பர்ல விளம்பரமே கொடுத் துட்டேன். முதல் முறையாய் மனைவியைக் கணவன் வரவேற்கிறார் அப்படின்னு ஸ்ருதி மாகஸின்ல போட்டாங்க! எனக்கென்ன... ஊர் வாயை அடைக்க இது நல்ல வழின்னு நினைச் சேன். மேலும் அவ இந்தியா திரும்பியாச்சுன்ற தும் சபாக்காரங்களுக்குத் தெரிய வருமில் லையா...?


சாந்தலக்ஷ்மி : இவ்வளவு மோசமான அனு பவம் எங்களுக்கு நேர்ந்ததில்லை... ஆனா ஒரு முறை வாஸ் ஏன்ஜல்ஸ்ல ராஜ்குமார் ஜாதகத் தைக் கேட்டிருக்காங்க. கல்யாணமாகாதவர்னு நினைச்சுட்டாங்க...! ஆனால் ஒண்ணு... கர் நாடக சங்கீதம் பொதுவா மலிவான எண்ணங் களையெல்லாம் வளர்க்கிறதில்லை... அதனால பெரும்பாலான ரசிகர்கள் ஆரோக்கியமான எல்லைகளுக்குள்ளேதான் பழகறாங்க... இந்த எல்லையை மீறி வர்றது ரொம்ப ரொம்ப அபூர்வம்.

ரகுநாதன் : ஆனா நிறைய தொந்தரவு இருக்கே... போன் தொந்தரவை முக்கியமா சொல்லணும். சில 'விசிறிகள்' நான் போனை எடுத்தா வைச்சுடுவாங்க. அவ எடுத்தா நிறைய அசடு வழிஞ்சு திட்டு வாங்கிக் கட்டிக்கு வாங்க... பொது வாழ்க்கைன்னு வந்துட்டா இதெல்லாம் சகஜம். நாம இதை 'ஜோக்கா' மாத்திட்டோமானால் ரொம்ப சுலபமா சமாளிச்சுட்டுப் போயிடலாம். கச்சேரி முடிஞ்சு அவ ரசிகர்கள் சுத்தி நின்னு பேசும் போது நான் கிட்டேயே போக மாட்டேன்... அது அவங்க உலகம்.. அதுல நமக்கு வேலை யில்லைன்னு ஒதுங்கிடுவேன்... ஏதாவது விரும் பத்தகாத பிரச்னைன்னாலும் சுதா அதை தைரியமாவும் சரியாவும் சமாளிப்பாங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு.

சாந்தலக்ஷ்மி : அந்த நம்பிக்கையும் பரஸ்பர மரியாதையும்தான் இந்த உறவுக்கு அஸ்தி வாரம்... அது இருக்கறவரைக்கும் கவலையே யில்லை... ○

தொகுப்பு : **ஸாரமதி**

படங்கள் : **யோகா, ஹரி**



காதில் விழுந்தவை!

'கவனிப்பவர்கள்' கவனிக்கப்படுவார்கள்!

❖ கேட்கவே மனதுக்குச் சங்கடமாக இருந்தது. அந்த வினோதமான வாத்தியத்தைக் கையாளும் இளைஞருக்கு ஜாம், ஜாமென்று அண்டை மாநிலத்தில் திருமணம் நடைபெற்றது. என்ன அபஸ்வரம் தட்டியதோ? யார் கண்பட்டதோ தெரியவில்லை. உடைந்த மனங்கள் ஒன்று சேரட்டும்!

❖ தென் சென்னையில் சபா நடத்தும் ஒருசாரார் மத்திய சென்னையில் உள்ள அண்ணா நகரிலும், ஸீஸனின் போது அசத்துவார்கள். அண்ணா நகர் சபா சார்பில் ஒரு ஸீனியர் வித்வானை கௌரவிக்க இருக்கிறார்கள். "தென் சென்னையில் உள்ள உங்கள் அமைப்பின் சார்பில் என் மும்பை சிஷ்யையை கவுரவப்படுத்த வேண்டும்" என்று அன்புடன் கேட்டுக் கொண்டாராம் அந்த ஸீனியர். 'தங்கள் சித்தம்' என்று ஓ.கே. சொல்லி விட்டார்கள் சபாக்காரர்கள்.

❖ ஸ்ரீநிதி ரங்கராஜன் ப. சிதம்பரத்தின் மகன் கார்த்திக் சிதம்பரத்தைத் திருமணம் செய்து கொண்டு ஸ்ரீநிதி கார்த்திக் சிதம்பரமாக மாறிவிட்டார் அல்லவா! ஆனால் இந்த ஸீஸனில் விளம்பரங்களில் ஸ்ரீநிதி கார்த்திக் சிதம்பரம் என்று போட்டுக் கொள்ளாமல், "ஸ்ரீநிதி சிதம்பரம்" என்றே போட்டுக் கொள்கிறார்.

❖ பிரபல நாளிதழின் இசை விமர்சகர்களில் ஒருவர் அவர். வளரும் கலைஞர்கள் பட்டுப் புடைவைகள் கப்பம் செலுத்தி கவனித்தால், தொடர்ந்து வரும் ஸீஸனின் போது நன்றாக கவனிக்கப்படுவார்களாம்.

❖ இசைத் துறையில் 'டாக்டரேட்' வாங்க வேண்டுமா? 'தற்காலத்தில் சில்லு வாத்தியங்கள்' என்ற தலைப்பில் துவங்கி, 'தற்காலத்து நரம்பு வாத்யங்கள்' தலைப்பு வரை பல்வேறு தலைப்புகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தயார் செய்து தர சென்னையில் ஆட்கள் இருக்கிறார்கள். எங்கேயாவது வடக்கே ஒரு பல்கலைக் கழகத்தில் பெயரைப் பதிவு செய்து கொண்டு, இப்படியாக 'ஆராய்ச்சி செய்து' கணிசமான இசைக் கலைஞர்கள் டாக்டரேட் வாங்கியிருக்கிறார்களாம். அதுவும் மும்பையிலுள்ள ஒரு வித்யாலயா இந்த விவகாரத்தில் ரொம்பப் பிரசித்தமாம்!

❖ இந்த சீசனில் ஸ்பான்ஸர்கள் பட்ஜெட்டை பயங்கரமாகச் சுருக்கிவிட்டதால் புதுப் புது நிறுவனங்களை சபாக்கள் தேடிப் போக வேண்டியிருந்திருக்கிறது. விளைவு: ஸ்பான்ஸர் பட்டியல் ஏதோ எல்லோ பேஜஸ் டைரக்டரி போல் கொச கொசவென்று நீள்கிறது. இதை மீறியும் சன்மானம் குறைக்கப் பட்டுவிடுமோ என்ற பயம் கலைஞர்களுக்கு இல்லாமல் இல்லை.

❖ தீபங்களை ஞாபகமூட்டும் அரச பரம்பரை இசை வாரிசு அவர். சமீபத்தில் இசையைத் தவிர ஒரு பெண்ணின் மீதும் காதல் வயப்பட்டிருப்பதாகச் சொல்கிறது வடபழனி வட்டாரம். வளரும் நேரத்தில் இதெல்லாம் வேண்டாமே என்று நண்பர் வட்டம் அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தாலும் விஷயம் இன்னும் வீட்டார் வரைக்கும் போகவில்லை என்று தெரிகிறது. ●

— தில்லப்பா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 208/-; Overseas Rs. 1200/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 104/-; Overseas Rs. 600/- (Air Mail)

ரூபாய் ஒரு லட்சம் பரிசு

ஏவிஜி ரெட்டியின் இயற்கை மருத்துவமனையில் மூலிகை இலைகள், பூக்கள், காய்கள், கனிகள், விதைகள், வேர்கள் முதலியவற்றை மருந்தாகத் தரப்படுகின்றன. எங்களது மருந்தினால் பக்கவிளைவுகள், பின்விளைவுகள், எதிர்விளைவுகள் இல்லை. எந்தவிதமான நோயாளிக்கு மூலிகை மருந்து நாங்கள் கொடுத்தாலும் அந்த மருந்தை நோய் இல்லாதவர்கள் யார் சாப்பிட் டாலும் கூட உடல் நலத்தில் உயர்வே கிடைக்கும்.

சர்க்கரை வியாதி, ஆஸ்துமா, தோல் வியாதி இம்மூன்றிற்கும் ஏவிஜி ரெட்டியின் இயற்கை மருத்துவம் மற்ற மருத்துவத்தைவிட சிறந்தது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆஸ்துமா, சர்க்கரை வியாதி நோயாளிகள் ஆங்கில மருந்துகளை நிறுத்தாமல் கூட எங்களது மருத்துவத்தைப் பின்பற்றலாம்.

புற்று நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள் உட்பட எங்களது மருத்துவ ஆலோசனையில் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் உடல் நலம் பெற்றுள்ள னர். 30 நோயாளிகள் வரை எங்களது மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறலாம். தங்கி சிகிச்சை பெற தினசரி ரூ. 100 முதல் ரூ. 200/- வரை செலவாகும். நோயாளிகள் செவ்வாய், புதன், வெள்ளி மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை இலவசமாக ஆலோசனை பெறலாம். ஆங்கில மருத்துவத்தில் இருபது வருடங்களாக குணமடையாத மலேசியா நோயாளி எங்களிடம் ஐந்தே மாதத்தில் குணமடைந்துள்ளார். பொதுவாக எங்களிடம் வரும் நோயாளிகளும் 80% பேர் ஒரே மாதத்திற்குள் குணமடைந்து சென்று விடுகின்றனர். நேரிலோ அல்லது தபாலிலோ ஒரு மாதத்திற்குத் தேவையான மருந்துகள் பெற ரூ. 200/- தான் செலவாகும்.

மேற்கண்ட செய்திகளையெல்லாம் உண்மை அல்ல என்று நிரூபிக்கும் முதல் நபருக்கு ரூபாய் ஒரு லட்சம் பரிசாகத் தரப்படும்.

போன் : 6215735

டாக்டர் ஏவிஜி ரெட்டி

PB 6886, No.1, துரைசாமி ராஜா தெரு,
அரும்பாக்கம், சென்னை - 600 106.
(அண்ணா ஆர்ச்சுக்கு அருகில்)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

L.R.SWAMI / P.P.